மாநகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: பன்னிரண்டு + VI = 18

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 08 செவ்வாய்க்கிழமை (21.04.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:146

# பாதுகாப்பு வலயத்திலிருந்து நேற்று 35,000 மக்கள் மீட்கப்பட்டனர்

## அலரி மாளிகையில் வைத்து ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 21

பாதுகாப்புப் படையினர் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவில் இருந்து மேற்கொண்ட விசேட இராணுவ நடவடிக்கையின் பயனாக சுமார் 35,000க்கும் அதிகமான தமிழ் மக்கள் திங்களன்று விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் புதுமாத்தளன் பகுதியிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டிலிருக்கும் புதுக்குடியிருப்பு பகுதிக்கு வந்துள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று அலரிமாளிகையில் வைத்து அறிவித்தார்.

நேற்றுக் காலை இலங்கை விமானப்படையின் நடவடிக்கைத் தலைமையகத்திற்கு நேரடியாகச் சென்று பார்வையிட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பின்னர் அலரிமாளிகையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது இதனைத் அறிவித்தார்.

புலிகளின் பகுதியிலிருந்து மக்கள் பல்லாயிரக்கணக்கில் தமது குழந்தைகளுடனும், மூடை முடிச்சுக்களுடனும் வெளியேறும் வீடியோ காட்சிகள், நேற்று விமானப் படைத் தலைமையகத்தில் வைத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களிடம் காண்பிக்கப்பட்டன.

வேவு விமானங்கள் மூலம் எடுக்கப்பட்ட படங்கள், விடுதலைப் புலிகளை எதிர்த்துக்கொண்டு மக்கள் அங்கிருந்து வெளியேறுவதைத் தெளிவாகக் காண்பிக்கின்றன. அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓடுகின்றனர்'' என ஜனாதிபதி தெரிவித்தார் என்று ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்தது.

பொதுமக்கள் வெளியேறத் தொடங்கியுள்ளமை முழுமையான இறுதிக்கட்ட இராணுவ நடவடிக்கைக்கான தடையை அகற்றியுள்ளது என மேலும் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி, விடுதலைப் புலிகளின் முழுமையான தோல்வி தற்போதே ஆரம்பமாகியுள்ளது, விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அனைத்தும் முடிவடைந்து விட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் தங்கள் வசம் எஞ்சியிருக்கும் பகுதியில் அமைத்திருந்த பெரிய மண் அரண்களை அரச படையினர் தகர்த்து எறிந்த பிறகு பொதுமக்கள் அப்பகுதியிலிருந்து வெளியேறினர் - என்று படைத்தரப்பில் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை, பாதுகாப்பு வலயத்திற்குள் சிக்குண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்களை திங்கள் காலை இலங்கை இராணுவத்தினரால் மீட்க முடிந்துள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

புதுமாத்தளன் பகுதியில் விடுதலைப் புலிகளின் நிலைகளை அழித்தபின்னர் 35 ஆயிரம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறும்

யாழ்ப்பாணம், ஏப். 21

காங்கேசன்துறைக்கும் - திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும். யாழ்.அரச அதிபர் கே. கணேஷ் இந்த தகவலைத் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் பிரயாணத்தினை மேற்கொள்வதற்கு அனுமதிச் சீட்டினைப் பெற்றுக்கொண்டவர்களையும் அவசர தேவையின் நிமித்தம் செல்ல விரும்பவர்களை [illegible]இன்று காலை யாழ். ரயில் நிலையத்து[illegible] சமுகமளிக்குமாறு அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (அ-1)

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கென உதயன் தனியாக வழங்கும் 6 பக்கங்கள் கொண்ட இலவச கல்விச் சுடர் இணைப்பிதழ் உள்ளே

## ஆயிரம் பேரைத் தங்கவைக்க வசதியாக கொடிகாமம் பாடசாலையில் வேண்டிய ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஏப்.21

வன்னியில் இருந்து வரவிருக்கும் மக்களில் ஆயிரம் பேரைத் தங்கவைக்க வசதியாக கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் வேண்டிய முன்னேற்பாடுகள் பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தென்மராட்சியில் அமைக்கப்பட்ட நலன்புரி நிலையங்களில் ஏற்பட்டுள்ள இட நெருக்கடியை அடுத்து புதிதாக வருபவர்களை தங்கவைக்க விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆயிரம் பேரைத் தங்க வைக்க வசதியாக அவர்களுக்கான உணவு வழங்கக்கூடிய ஏற்பாடுகளை செய்யுமாறு கேட்கப்பட்டதை அடுத்து செயலக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். பாடசாலைகள் இன்று ஆரம்பிக்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்ட நிலையில் குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளுக்கான ஏற்பாடுகள் நேற்றுச் செய்யப்பட்டுள்ளன (அ-1-207)

## யாழ்.மாவட்டப் பாடசாலைகள் 27 ஆம் திகதியே திறக்கப்படும்

### மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ்.மாவட்ட பாடசாலைகள் இரண்டாம் தவணைக் கல்வி நடவடிக்கைகளுக்காக எதிர்வரும் 27 ஆம் திகதி திறக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்துக்கு அமைவாக பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் தவிர்க்க முடியாத காரணத்தால் மேற்குறிப்பட்ட திகதியில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படமாட்டா என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மாகாண பிரதம செயலாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

அத்துடன் பின்நகர்த்தப்படும் 4 பாடசாலைநாள்களுக்குபதிலாக எதிர்வரும் 27 ஆம் திகதிக்குப் பின்னர் வரும் சனிக்கிழமைகளில் பாடசாலைகளை நடத்தி அதனை நிவர்த்தி செய்யுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார். (50-201-207-11)

## வன்னியில் இருந்து வருவோரைத் தங்கவைக்க அரசாங்க அதிபர் முன்னேற்பாட்டு நடவடிக்கை

### பாடசாலைகளும் பயன்படுத்தப்படும்

யாழ்ப்பாணம், ஏப். 21

வன்னியில் இருந்து பொதுமக்கள் குடாநாட்டுக்கு அழைத்துவரப்படும் பட்சத்தில் அவர்களைத் தங்கவைக்க முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் இத் தகவலை நேற்றிரவு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வன்னியிலிருந்து பெரும் எண்ணிக்கையானவர்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றைய தாக்குதல்களில் ஆயிரம் மக்கள் பலியானதாக நாடாளுமன்றில் எம்.பி.தகவல்

கொழும்பு, ஏப்.21

முல்லைத்தீவு மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதியில் நேற்று மட்டும் ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் 1,300 பேர் காயமடைந்துள்ளதாகவும் தற்போது தகவல் கிடைத்துள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ.சிறில் மேற்கண்டவாறு நேற்றுப் பிற்பகல் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான விசேட சட்ட மூலம் தொடர்பான விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. அந்த விவாதத்தில் சொலமன் சூ.சிறில் கலந்து கொண்டு உரையாற்றிய போது இத் தகவலைத் தெரிவித்தார்.

வன்னி நிலைமை தொடர்பாக அவர் பேசிக்கொண்டிருந்த போது, நேற்றைய தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் மற்றும் காயமடைந்த விவரங்களை வெளியிட்டார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

வன்னி நிலப்பரப்பில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறுகின்ற யுத்தத்தையும் அதன் பின்புலங்களையும் பார்க்கும் இடத்து, ஒரு தமிழின அழிப்பு நடவடிக்கைதான் பகிரங்கமாக நடைபெற்று வருகிறது.

அப்பாவிப் பொதுமக்கள் மீது தரை, கடல், ஆகாய மார்க்கமாக நடத்தப்படும் தாக்குதல்களில் இந்த வருடத்தில் மட்டும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 7ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். இவர்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் அவயவங்களை (12 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகள் சரணடைய அரசு 24 மணிநேர காலக்கெடு

யாழ்ப்பாணம், ஏப்.21

வன்னியில் எஞ்சியுள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனையும் ஏனைய உறுப்பினர்களையும் அடுத்த 24 மணித்தியாலயங்களுக்கு முன்னர் சரணடையுமாறு காலக்கெடு விதிக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

திங்கட்கிழமை நண்பகல் பன்னிரண்டு மணிக்கு இந்தக் காலக்கெடு தொடங்கியுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இத் தகவலை பாதுகாப்பு விவகாரத்துக்கான பேச்சாளரும் அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெலவும் ஊர்ஜிதம் செய்தார் (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




நோர்வே தூதரகத்தின் முன்னால் நேற்று நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

# நோர்வேத் தூதரகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஏப், 21

தேசிய சுதந்திர முன்னணியும், ஜாதிக ஹெல உறுமயவும் இணைந்து கொழும் பிலுள்ள நோர்வே தூதரகத்திற்கு முன் னால் நேற்று பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

நோர்வே தூதரகத்தின் செயற்பாடுகளை முடக்கிக் கொண்டு அவர்கள் தங் களுடைய நாட்டுக்கு மீண்டும் செல்லுமாறு ஆர்ப் பாட்டத்தில் கலந்துகொண் டோர் கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன் அதன் தூதுவரையும் உடனடியாக நாட்டை விட்டு வெளியேறு மாறும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தை தேசிய சுதந்திர முன்னணியும், ஜாதிக ஹெலஉறுமயவும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தமை குறிப் பிடத்தக்கது.

இதன் போது கருத்துத் தெரிவித்த தேசிய சுதந்திர முன் னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக் உடனடியாக நாட்டை விட்டுவெளியேற வேண்டும் எனவும், இலங்கை விவகாரத்தில் மூக்கை நுழைப்ப தற்கு எந்தவித உரிமையும் அவருக்கு இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பணிமனையில் கடமையாற்றும் V.R.C ஜோன்சன் (கிராமஅலு வலர், அனலைதீவு தெற்கு J/38) அவர்களின் பாசமிகு தந்தையாராகிய

*விக்ரர் றொபட்சன் தியாகராசா*

அவர்கள் கடந்த (19.04.2009) ஞாயிற்றுக்கிழமை அன்று அமரத்துவம் எய்திய செய்தி அறிந்து மிகுந்த துயர் அடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உதவி அரசாங்க அதிபரும் உத்தியோகத்தர்களும்.

ஊழியர் நலன் புரிச்சங்கம், உதவி அரசாங்க அதிபர் பணிமனை, ஊர்காவற்றுறை.

## தவறிவிட்டது

அரசொல்லை, அளவெட்டி வடக்கு, அள வெட்டி எனும் முகவரியுடைய நாகராசா மகாலிங் கம் என் பவரது வாகன அனுமதிப்பத்திரம், கற் காட், விசேட அ.அட்டை என்பன பண்ணாகத் திற் கும் தொட்டிலடிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 0602219005 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொர்பு கொண்டு தந்துதவவும்.

சன்மானம் வழங்கப்படும்.

## காணிதேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் பிர தான வீதிகளில் 1-2 பரப்புக் காணி தேவை.

இடைத்தரகர் தேவையில்லை.

தொடர்பு:- 0771744581

## கோழிக்குஞ்சு விநியோகம்

இன்று NO.1 BAIRAHA

புறொயிலர் குஞ்சுகள் உடன் பெற்றுக் கொள்ளலாம்.

நேமகள் களஞ்சியம், 704, கே.கே.எஸ். வீதி, சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம், தொ.பே.: 0212223270, 0774281084

## கண்டெடுக்கப்பட்டது

கடந்த 13.04.2009 அன்று சிறுதொகை பணம் பற்றுச்சீட்டு நுணாவில் (A9 வீதியில்) கண்டெடுக்கப் பட்டுள்ளன. உரியவர்கள் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள் ளவும்.

பிள்ளையார் அரைக்கும் ஆலை, தேவாலய விதி, நுணாவில் மேற்கு.

## காணி விற்பனைக்கு உண்டு

நவாலி வடக்கு சோமசுந்தரப் புலவர் வீதியில் காணி விற்ப னைக்கு உண்டு.

தொ.பே: 0775813851

## கட்டடத் திறப்பு விழா

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் ' நிக்கொட்' நிறு வனத்தால் 14 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடத் திறப்பு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி இயக்குநர் றிச்சார்ட் வோக்ஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் இந்த நிகழ்வுக்கு பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வித்தியாலய அதிபர் திருமதி ச.யோகேஸ்வரி கேட்டுள்ளார். (1-29)

## மரண அறிவித்தல்

### *திருமதி சோமசுந்தரம் வேதநாயகி (இரத்தினம் அக்கா)*

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோமசுந்தரம் வேத நாயகி நேற்று (20.04.2009) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், சோமஸ்கந்தராஜா காலஞ்சென்ற சரோஜினி தேவி மற்றும் திருநாகராஜா (ஜேர்மனி), சிறீஸ்கந்தராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சாவித்திரி, மதிவ தனி, பிரியாங்கனி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2009) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக் காக சின்னத்தூ மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தகவல்: சோ.சோமஸ்கந்தராஜா (மகன்).

### *திருமதி மயில்வாகனம் வரதலட்சுமி*

அச்செழுவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மயில்வாகனம் வரதலட்சுமி நேற்று (20.04.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் (சிறாப்பர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சரவணமுத்து- அன்னப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னையா-தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமக ளும் காலஞ்சென்ற சுந்தரராஜனின் அன்புச் சகோதரியும் யசோதா(கனடா), யசந்தா(ஆசிரியை, யா/சுழிபுரம், கி.அ.மி.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயும் விக் கினேஸ்வரன் (கண்ணன் - கனடா), நவஜீவன் ஆகியோ ரின் மாமியும் கவி, ஹரி, பிருந்தாகினி ஆகியோரின் அன் புப் பேர்த்தியும் நாகேஸ்வரி, ராஜேஸ்வரி, ரஞ்சிதமலர் ஆகி யோரின் மைத்துனியும் புவனேஸ்வரி, தவமணி, சந்திர லிங்கம் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2009) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அச்செழு இந்து மயா னத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்செழு வீதி, புன்னாலைக்கட்டுவன்.

தகவல்: குடும்பத்தினர்.

## உதிர்ந்து விட்ட சபேசனின் முப்பத்தொரு தின நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நவில்கின்ற நன்றியும்

### அமரர் கணேசலிங்கம் கனகசபேசன்



22.03.2009 அன்று ஞாயிற்றுக்கிழமை பரனடியை நோக்கிப் பறந்தோடிய யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மாணவன் கணேசலிங்கம் கனகசபேசன் அவரின் 31ஆவது தினத்தின் நினைவஞ்சலியும், ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் இன்று (21.04.2009) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் இந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

"அகமகிழ்வுடன் அனைவரையும்அரவணைத்த எங்கள்
குடும்பத்தின் ஒளிவிளக்கு
நித்தம் வலம் வந்து விளையாடும் குல விளக்கு
சொற்ப நேரமதில்மண்ணில் வீழ்ந்து மறைந்ததோ?"



பரனடி பணிந்த பாசஜீவனின் செய்தி பகரக் கேட்டு உடனடியாய் வந்து உதவிகள் செய் தோருக்கும், யா/பண்டத்தரிப்பு இந்துக்கல் லூரி சமூகத்திற்கும், மரணச் சடங்கில் கலந்து கொண்ட அந்தணர்க்கும், பாசத்தையே உட லாக்கிய சபேசனின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாய் அளித்தோருக்கும் மலர் வள யங்கள், மாலைகள் சூட்டியோருக்கும் தொலைவில் இருந்து தொலைபேசி, கடிதத் தினூடாக இதயமுற துன்பக்கடலில் மூழ்கி யோருக்கும் அன்பான ஜீவனின் ஆத்மா சாந்தி பெற துதித்தோருக்கும் எமது மன மார்ந்த நன்றியினை இருகரங்கூப்பித் தெரி விக்கின்றோம்.

அம்மன் வீதி, பண்டத்தரிப்பு.

குடும்பத்தினர்.

## மேலும் 227 பேர் வெள்ளியன்று வந்தனர்

யாழ்ப்பாணம் ஏப்.21

முல்லைத்தீவுப் பகுதியில் இருந்து கடந்த 17 ஆம் திகதி வெள்ளிக் கிழமை 91 குடும்பங் களைச் சேர்ந்த 227 பேர் தென்மராட் சிக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

அத்துடன் கடந்த 18, 19 ஆகிய திக திகளில் 110 பேர் அழைத்து வரப்பட் டுள்ளனர்.

இக்குடும்பங்கள் கைதடி ஆயுள் வேத மாணவர் விடு தியில் தங்க வைக் கப்பட்டுள்ள னர். (1-207)

## மரண அறிவித்தல்



### *சூரன் சந்தானகோபால் (ஐயா)*

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமா கவும் கொண்ட சூரன் சந்தானகோபால்(ஐயா) 17.04.2009 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூரன் - மாம்பழம் தம்பதியரின் அன்பு மகனும் சரோஜாவின் அன்புக் கணவரும் செல்வராசா (இலங்கை), அன்னதேவி (பிரான்ஸ்), சின்ன ராஜா (ராஜா - பிரான்ஸ்), புஸ்பராணி (பிரான்ஸ்), சுப்பிரமணி யம் (பிரான்ஸ்), யோகராணி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்லம்மா (இலங்கை), காலஞ்சென்ற கிளி (இலங்கை), குணசேகரம் (பிரான்ஸ்), இராசசேகரம் (இலங்கை), ராதா (பிரான்ஸ்), கலா,சிவா (பிரான்ஸ்), அருணானந்தம் (இலங்கை), கவிதா (இலங்கை), விவேகானந்தன் (இலங்கை), ரணிந்தா (இலங்கை), சந்திரா (பிரான்ஸ்), சிறிபாலச் சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 11மணியிலிருந்து 12.45 மணி வரை பிரான்ஸில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பின்னர் 1மணிக்கு Villetaneuse மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு 2 மணிக்கு தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே!

நாட்டின் முக்கிய - அத்தியாவசிய - சேவைகளை ஆற்றும் நிறுவனங்களின் பணியாளர்கள் நேற்று வேலை நிறுத்தத்தில் குதித்தனர். இலங்கை மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கைத் துறைமுக அதிகாரசபை ஆகிய மூன்று நிறுவனங்களும் மக்களுக்குரிய பிரதான அத்தியாவசிய சேவைகளுடன் சம்பந்தப்பட்டவை.

மேற்படி மூன்று நிறுவனங்களின் பணியாளர்களுக்கு மூன்று வருடங்களுக்கு ஒருமுறைதான் சம்பள உயர்வு வழங்கப்படுவது வழமை - விதிமுறை - என்று தெரிவிக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் இந்த வருடத்தில் வழங்கப்படவேண்டிய சம்பள உயர்வு கிடைக்காது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறதாம். தமது பக்கத்தில் எந்தவித கறுப்புப்புள்ளியும் இல்லாதிருந்த போதும், சம்பள உயர்வை அடுத்தவருடமே வழங்க முடியும் என்று ஜனாதிபதி (நிதி அமைச்சரும் அவரே) ஒத்திவைத்து உத்தரவிட்டுள்ளார் என்று பணியாளர்கள் தரப்பில் கூறப்படுகிறது; குற்றஞ்சாட்டப்படுகிறது.

நாட்டுக்காகக் கஷ்டப்பட்டு உழைக்கும் தமது சம்பளத்தை அதிகரிக்கவேண்டிய வேளையில், அதனைத் தவிர்க்கும் முடிவை அரசாங்கம் செய்ததாலேயே வேலை நிறுத்தத்தில் குதித்திருப்பதாகப் பணியாளர் காரணம் கூறுகிறார்கள். அந்த வகையில் அவர்களின் போராட்டம் நியாயமானது. எவரோ பின்னால் நின்று அரசுக்கு எதிராகச் செய்யப்படும் சதி என்று வழமைபோல பூசிமெழுக முடியாதது.

தனியார் நிறுவனங்கள், சிறு வர்த்தக நிலையங்கள் தானும் தமது பணியாளர்களின் வருடாந்தச் சம்பள உயர்வை தவறாது வழங்கவேண்டும் என்பது அரசாங்கம் வகுத்துள்ள முக்கிய சட்டவிதி. அப்படியிருக்க மக்கள் சேவையாற்றும் மூன்று பிரதான நிறுவனப் பணியாளர்களின் சம்பள உயர்வை நிறுத்துவது நியாயமற்றது; சட்டவிரோதமானதும் கூட.

நாட்டுக்காகக் கஷ்டப்பட்டு உழைக்கும் எமது சம்பளத்தை அதிகரிக்க இந்த அரசுக்கு விருப்பமில்லை. ஆனால், அமைச்சர்களோ முழு அளவில் சம்பள உயர்வைப் பெறுகிறார்கள்; அனுபவிக்கிறார்கள் என்று மூன்று நிறுவனங்களினதும் பணியாளர்கள் வெதும்புகிறார்கள். அவர்கள் கூறுவதில் எவ்வித தப்பையும் எவரும் காணமுடியாது.

சம்பந்தப்பட்ட பணியாளர்களின் உழைப்பில்தான் அவர்களது குடும்பங்கள் வாழ்கின்றன. கடந்த இரண்டு வருடங்கள் சம்பள உயர்வு இல்லை. இந்த வருடத்தில் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் இருந்திருப்பர். தமது செலவினங்களைச் சமாளிக்க ஓரளவேனும் வழிபிறக்கும் என்று நம்பியிருந்திருப்பார்கள். அது கிடைக்காது அரசாங்கம் 'அதிரடி வைத்தியம்' செய்தால் அவர்கள் பாடு அதோகதிதான். மொத்தத்தில் இது ஒரு மனிதாபிமானப் பிரச்சினை.

அரசாங்கம் இதனை அந்தக்கண் கொண்டு பார்த்து நியாயம் செய்யவில்லையெனில் பாதிக்கப்படுபவர்கள் சம்பந்தப்பட்ட மூன்று நிறுவனங்களது பணியாளர்களின் குடும்பங்கள் மட்டுமா? நாட்டின் சகல மக்களும்தான்! அதனால் இறுதியில் நாட்டின் பிரதான சேவைகள் ஏதோ ஒரு வகையில் ஸ்தம்பிக்கும் அபாயம் உண்டு.

பணியாளர்களின் சம்பள உயர்வை நிறுத்தும் அளவுக்கு நாட்டின் நிதி நிலமை அதள பாதாளத்துக்குச் சென்றுவிட்டது என்ற துக்ககரமான நிலைமையையே மூன்று பிரதான நிறுவனப் பணியாளர்களின் சம்பள உயர்வு நிறுத்தம் எடுத்தியம்புகிறது. 'யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்பது பழமொழி. இப்போது வந்திருக்கும் மணியோசையைத் தொடர்ந்து நாட்டின் பொருளாதார வீழ்ச்சி என்ற யானை வந்து நாட்டை - நாட்டு மக்களை - அவர்களின் பொருளாதாரத்தை, துளாவி அடித்துத் துவம்சம் செய்யப்போகின்றது என்பதற்கான சமிக்ஞை இது.

நாட்டின் பொருளாதாரம் - வருமானம் - இந்தளவு அடிநிலைக்கு வருவதற்கான பிரதான காரண[illegible]ளில் முதன்மை வகிப்பது அரசாங்கம் கடந்த [illegible]ன்று வருடங்களாக நடத்தும் போர் என்பதனை திரையை மூடி இலகுவில் மறைத்துவிடமுடியுமா, என்ன? போர், போரின் வெற்றி என்ற மூடுபாகைகளால் நாட்டின் - நாட்டு மக்களின் - பொருளாதாரம் கீழ்நோக்கிச் செல்வதை மறைத்துவிட முடியாது. அவ்வாறு செய்வதானாலும் கூட, அது மிகக்குறைந்த காலத்துக்கே சாத்தியம், பாதிப்புப் பாதிப்புத்தான் என்ற திண்ம நிலை - உறைநிலை - வந்தபின்னர் அதனைச் சரி செய்து நிமிர்த்தி எடுப்பதற்கு எத்தனையோ வருடங்கள் செல்லும்!

தொடர்ந்தும் வெளிநாட்டுக் கடன்களிலும் நிதியுதவி என்ற பிச்சைகளிலும் தான் நாட்டின் பொருளாதாரம் தங்கு நிலையில் இருக்கவேண்டிய நிர்ப்பந்தமும் கஷ்டங்களும் உண்டாகும்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெறப்படவுள்ள 1.9 பில்லியன் டொலர் கடனுக்கு எந்த நிபந்தனைகளையும் ஏற்கமுடியாது என்ற செருக்கான பேச்சுக்கள் நாட்டு மக்களுக்கு சோறு போடுமா என்பதும் விநயமாக நோக்கப்படவேண்டிய ஒன்றே.

## நலன்புரி நிலையங்களில் உள்ள பல்கலை. மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு ஏற்பாடு

வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள பல்கலைக்கழக மாணவர்களை அவர்கள் கல்வி கற்ற பல்கலைக்கழகங்களில் அதே கல்வி ஆண்டில் கல்வி கற்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

முகாம்களில் தங்கியுள்ள 65 மாணவர்களை இவ்வாறு மீண்டும் பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் திருமதி சாள்ஸ் தெரிவித்தார்.

அத்துடன், குறித்த பல்கலைக்கழக மாணவர்கள் விரைவில் அவர்களது கல்வியைத் தொடர வழிவகுத்துத் தருவதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஷில் ராஜபக்ஷ தனக்கு உறுதியளித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் முகாம்களில் தங்கியுள்ள மாணவர்களில் அனேகமானோர் யாழ். பல்கலைக் கழகத்தை சேர்ந்தவர்கள் என வவுனியா அரசாங்க அதிபர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, வவுனியா முகாம்களில் இதுவரை 61ஆயிரம் பேர் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவர்களில் அருணாசலம் நிவாரண கிராமத்தில் 20 ஆயிரம் பேரும் கதிர்காமர் நிவாரண கிராமம் மற்றும் ஏனைய முகாம்களில் எஞ்சியவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் கூறினார்.

மேலும் குறித்த இடைத்தங்கல் முகாம்களுக்கு நேற்றைய தினம் நேரில் சென்று பார்வையிட்டு அவர்களின் குறைகளை கேட்டறிந்துள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் திருமதி சாள்ஸ் தெரிவித்தார்.

## கனேடியத் தலைநகரில் இன்று மாபெரும் 'உரிமைப் பேரணி'

மொன்றியல், ஏப்.21

படையினர் தமிழர் தாயகப் பிரதேசங்களில் இருந்து வெளியேற வேண்டும் என்பதை வலிறுத்தி கனேடிய தமிழ் மாணவர்களும் மற்றும் கனேடியத் தமிழர் சமூகத்தினரும் இணைந்து தலைநகர் ஒட்டாவா நாடாளுமன்றத்திற்கு முன்பாக மாபெரும் உரிமைப்பேரணியினை நடத்தவுள்ளனர்.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள இந்த உரிமைப்பேரணியின் போது விடுதலைப் போராட்டத்தையும் தமிழர்களின் இறைமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையையும் அனைத்துலகம் அங்கீகரிக்க வேண்டியதன் அவசியத்தையும் கனேடிய தமிழர்கள் எடுத்துக்கூறவுள்ளனர்.

அத்துடன், தமிழ் மக்களை அவர்கள் நிம்மதியாக வாழ விரும்பும் அவர்களின பூர்வீக நிலங்களில் இருந்து வெளியேற்ற அனுமதிக்கக் கூடாது. உடனடிப் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்படுவதுடன், வன்னி வாழ் மக்களின் உடனடித் தேவை யான உணவு, மருத்துவ உதவிகள் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளை யும் பேரணியின்போது முன்வைப் பதற்கு ஏற்பாடுகள் இடம்பெறுகின் றன.

மக்கள் பேரெழுச்சி அடைந்துள்ளதால் பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொள்வார்கள் என கனேடிய தேசிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

உரிமைப்பேரணியில் கனேடிய ஆளும், எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் மற்றும் சிறப்புப் பிரதிநிதிகளும் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளையில் பேரணியை முன்னிட்டு கனடாவில் உள்ள தமிழர்களின் வர்த்தக நிலையங்கள் மற்றும் சேவை நிறுவனங்கள் அனைத்தும் இன்று மூடப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

(50)

## அதிக எண்ணிக்கையான இலங்கை அகதிகள் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்கக் கூடும்

### குடி வரவு அமைச்சர் ஊகம்

சிட்னி, ஏப்.21

எதிர்வரும் காலங்களில் அதிக எண்ணிக்கையிலான இலங்கை அகதிகள் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்கக் கூடுமென அந்நாட்டு குடிவரவு அமைச்சர் கிறிஸ் ஏவன்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்று வரும் யுத்த நிலவரம் அரசியல் தஞ்சம் கோருவோரின் எண்ணிக்கையை உயர்வடையச் செய்யலாம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவுஸ்திரேலிய எல்லைப் புறப் பாதுகாப்புப் பிரிவினருக்கு மிகவும் சவால்களை கொடுக்கக் கூடிய நாடாக இலங்கை திகழ்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஓரிரு வருடங்களில் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்க முனையும் இலங்கையர்களின் எண்ணிக்கை மேலும் உயர்வடையக் கூடுமென அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## சுன்னாகம் பொது நூலகத்தில் உலகப் புத்தக தின நிகழ்வு

சுன்னாகம், ஏப்.21

வலி.தெற்கு பிரதேச சபையின் உலக புத்தக தின நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் மூன்று தினங்களுக்கு சுன்னாகம் பொது நூலகத்தில் நடைபெறவுள்ளன.

பிரதேச எழுத்தாளர்களின் நூல்கள், சஞ்சிகைகள், பருவ வெளியீடுகளின் கண்காட்சியும், திருநெல்வேலி புத்தகக் கூடம் நிறுவனத்தின் புதி[illegible] நூல்களின் கண்காட்சியும் இ[illegible] முற்பகல் 10 மணிக்கு அ[illegible] வைக்கப்படும்.

வலி.தெற்கு பிரதேச சபைச் [illegible]லாளர் திருமதி ச. சொக்கலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் க.சிவாஜி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (50-38)

## வேகமாக வாகனங்கள் ஓட்டுவது குறித்து பொலிஸார் கவனம் செலுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.21

குடாநாட்டில் போக்குவரத்து விதிக்களை நடைமுறைப்படுத்துவதில் கவனம்செலுத்தும் பொலிஸார் வேகமாக செல்லும் வாகனங்கள் விடயத்திலும் கவனம் செலுத்தவேண்டும் என சமூகப் பொது அமைப்புகள் கோருகின்றன.

குடாநாட்டில் படையினரால் போடப்பட்ட வேகத் தடைகள் பெரும்பாலான வீதிகளில் நீக்கப்பட்டுள்ளன. இதனை பயன்படுத்தி வீதிகளில் அதிவேகமாக மோட்டார் சைக்கிள்களை ஓட்டிச்செல்வதாலும் -

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகளும் தனியார் மினிபஸ்களும் பிரதான வீதிகளில் வேகமாக போட்டி போட்டு ஓடுவதனாலும் - வீதியால் செல்லும் வாகனங்களும் பாதசாரிகளும் பெரும்சிரமங்களுக்குள்ளாகி வருகின்றமை தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலமையிலேயே வாகனங்களின் அனுமதிப்பத்திரங்கள் சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் தலைக்கவசங்களை பார்வையிடும் பொலிஸார் வேகமாக செல்லும் வாகனங்கள் விடயத்திலும் கவனம் செலுத்தவேண்டும் என அந்த அமைப்புகள் கோருகின்றன. (1-68)

## மானிப்பாயில் அதிசயத் தென்னங்கன்று ஒரே விதையில் 5 பாளைகளும் 32 குரும்பைகட்டிகளும்



மானிப்பாயைச் சேர்ந்த பசுமைப் புரட்சியாளர் வைத்திலிங்கம் செகராச சிங்கம் என்பவரது இல்லத்தில் அதிசயிக்கத்தக்க நிகழ்வு ஒன்று நிகழ்ந்துள்ளது.

தென்னம் பிள்ளைவிதையில் இருந்து 5 கிளைகள் (தென்னோலை) வெளித்தள்ளியுள்ளன.

இவ்வாறு வெளித்தள்ளியுள்ள தென்னம் பாளையூடாக 32க்கும் மேற்பட்ட குரும்பைகட்டிகளும் தோன்றியுள்ளன.

இதேவேளை இவ்வாறு ஆச்சரியமூட்டும் வகையில் தோன்றியுள்ள தென்னையைத் தினமும் ஏராளமானோர் பார்வையிட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

இந்த அதிசயத் தென்னையைப் பார்க்க விரும்பும மக்கள் மானிப்பாய் ஸ்ரீ [illegible] சேவா நிலையத்தில் அதனைப் பார்வையிடலாம் எனத் தெ[illegible] விக்கப்படுகின்றது. (4-95)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 9 | 22.04.2009 புதன்கிழமை |
| திதி: | பூரட்டாதி பி.ப. 1.20 வரை |
| நட்சத்திரம்: | துவாதசி |
| [illegible] | [illegible] |
| சுபநேரம்: | 04.31 - 06.01 |
| ராகுகாலம்: | 12.01 - 01.31 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வன்னிப் பொதுமக்களின் பேரவலம் குறித்து சர்வதேச சமூகம் தொடர்ந்தும் மௌனம்

## கனடா நா[illegible]ளுமன்ற உறுப்பினர் குற்றச்சாட்டு

மொன்றியல்,ஏப்.21

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தம் காரணமாக அப்பாவிப் பொதுமக்கள் எதிர்நோக்கி வரும் பேரவலங்கள் நாளுக்கு நாள் உயர்வடைந்து செல்வதாக கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் பொப்றே தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்று வரும் யுத்த நிலைவரம் குறித்து சர்வதேச சமூகம் தேவைக்கு அதிகமாக மௌனம் சாதித்து வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கையில் அல்லலுறும் அப்பாவிப் பொதுமக்களுக்கு உடனடி நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

யுத்தம் காரணமாக ஒரு லட்சத்து 50ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் உணவு மற்றும் குடிதண்ணீர் வசதியின்றி அவதியுறுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

வன்னிப் பொதுமக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளை சர்வதேச சமூகம் தொடர்ந்தும் வேடிக்கை பார்க்கக் கூடாது எனவும், கனேடிய அரசாங்கம் தலைமையேற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு நடவடிக்கை விரைந்து ஆரம்பிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். வன்னிப் பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை மனிதாபமான உதவிகள் மற்றும் மனித உரிமை பாதுகாப்பு போன்றவற்றை உறுதிப்படுத்த சர்வதேச சமூகம் தயக்கம் காட்டக் கூடாதென அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு இராணுவ ரீதியாகத் தீர்வு காண முடியாது என்பதனை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், ஐக்கிய நாடுகள் அமைப்பு தலையீடு செய்து காத்திரமான தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டும் எனவும் பொப்றே கோரிக்கை விடுத்துள்ளார்.

(50)

# வடமராட்சி வீதிகளில் பாதசாரிக் கடவைகள்

வடமாரட்சி, ஏப். 21

வடமாரட்சிப் பகுதியில் உள்ள பிரதான வீதிகளில், பாதசாரிகள் கடவைக்கான மஞ்சள் நிறக்கோடுகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் இடப்பட்டு வருகின்றன.

இங்குள்ள பிரதான வீதிகளில் உள்ள சந்திகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் போன்றவை அமைந்துள்ள பகுதிகளிலேயே வீதியை பாதசாரிகள் கடப்பதற்கு வசதியாக பாதசாரிகள் கடவைக்கான மஞ்சள்கோடுகள் இடப்படுகின்றன.

(50-236)


## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க அங்கத்தவரான

திருமதி பாலசுப்பிரமணியம் சிவபாக்கியம்

19.04.2009 அன்று காலமானார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

நீர்வேலி ஸ்ரீமுருகன் மாதர் சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம். (84611) அங்கத்தவர், நிர்வாகத்தினர்.



## துயர் பகிர்கின்றோம்



வடக்கு, கிழக்கு வீடமைப்பு புனர் நிர்மாணத் தி[illegible]ட்டத்தின் யாழ்.மாவட்ட முகாமைத்துவப் பி[illegible]வில் பிரதம முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும்

ஐயாத்துரை வரதராஜா

அவர்களின் பாசமிகு தாயார்

ஐயாத்துரை மகாலட்சமி

அவர்கள் 19.04.2009 இல் இயற்கை எய்தியமையை இட்டு அன்னாரின் குடும்பத்தவருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். வடக்கு கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத்திட்டம் மாவட்ட முகாமைத்துவப் பிரிவு.



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் சீனிக்குட்டி கந்தசாமி

மலர்வு 25✱03✱1938 உதிர்வு 22✱03✱2009

கடந்த 22.03.2009 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த அமரர் சீனிக்குட்டி கந்தசாமி அவர்களின் அந்தியேட்டிக்கிரியை இன்று (21.04.2009) செவ்வாய்க்கிழமை காலை 5 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அந்திரான், கரணவாய் மேற்கு, கரவெட்டி. (சி/558137) குடும்பத்தினர்.



## நீங்காத நினைவில்
## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

வையகத்தில் 04 ✱ 02 ✱ 1940



வானகத்தில் 13 ✱ 05 ✱ 2007

திருமதி செல்லாச்சி முருகேசு

திதி: ஏகாதசி

தீராத வேதனையால் தினம் தினம் துடிக்கின்றோம்
மாறாத சோகத்தில் ஈராண்டு கழிந்ததம்மா!
வேராக நீங்களிருந்த எம் குடும்பம் இன்று
உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றது.

சரசாலை தெற்கு, சாவகச்சேரி. (84609) உங்கள் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.


# திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப். 21

வட இந்து மகளிர் கல்லூரியில் ''நிக்கொட்'' அமைப்பின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட புதிய கட்டடத் தொகுதி திறப்பு விழா நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மேற்படி கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் தவறாது பாடசாலைக்கு சமூகமளிக்குமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

(201)

# இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், ஏப்.21

வீதியில் சென்று கொண்டிருந்த உழவு இயந்திரத்திலிருந்து பாய்ந்த இளைஞருக்கு கால் முறிந்தது.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியைச் சேர்ந்த சாந்தலிங்கம் ராஜீப் (வயது 24) என்பவரே கால் முறிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

(04-207)

# சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறு மீளாய்வுக்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்பு,ஏப்.21

அண்மையில் வெளிவந்த 2008 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கு பரீட்சைத் திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இந்த விண்ணப்பங்களை எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பாடசாலை விண்ணப்பதாரிகள் பாடசாலை அதிபர்கள் ஊடாகவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் நேரடியாகவும் பதிவுத் தபால் மூலமும் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவேண்டும்.

ஒரு பாடத்துக்கு 150 ரூபா என்ற அடிப்படையில் மீளாய்வுக் கட்டணம் அறவிடப்படுகிறது. உரிய கட்டணத்தை அஞ்சல் அல்லது உப அஞ்சல் அலுவலகங்களில் செலுத்தி பற்றுச் சீட்டின் மூலப் பிரதியை விண்ணப்பப் படிவத்தின் மறுபுறம் ஒட்டி அனுப்பிவைக்க வேண்டும். ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வொரு விண்ணப்பம் வீதம் அனுப்ப வேண்டுமென பரீட்சைத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.


THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில By: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி DIP/CER IN ENGLISH AND SCIENCE (LONDON), 426(302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம்; பிளாக் வீதி, சுங்கானை.



## தவறிவிட்டது

இல.270, K.K.S.றோட், சிவன்கோயிலடி என்னும் முகவரியுடைய நரசிங்கப்பெருமாள் மகரதீபன் என்பவரது தே.அ.அ. (இல.882921840V), இராணுவ அடையாள அட்டை என்பன K.K.S. றோட், சிவன்கோயிலடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

தொடர்பு K.K.S. றோட், சிவன்கோயிலடி,

[illegible]

T.P.: 0774975899



## நன்றி தெரிவிக்கின்றோம்

தற்போது மணல் சேவையில் ஈடுபட்டுள்ள பாரஊர்தி உரிமையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி சேவை பாதிக்கப்பட்ட நாள்களுக்கு கால நீடிப்புச் செய்வதற்கு இணக்கம் தெரிவித்தமைக்கு மனப்பூர்வமாக யாழ்.அரச அதிபருக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

தற்போது மணல் சேவையில் உள்ள பாரவூர்தி உரிமையாளர்கள்.

(84616)



## துயர் பகிர்கிறோம்



திருமதி ஐயாத்துரை மகாலட்சுமி

எமது பாடசாலை ஆசிரியர் ஐயாத்துரை குமரதாசன் அவர்களின் அன்புத் தாயாரின் மறைவையிட்டு எமது பாடசாலைச் சமூகத்தின் சார்பில் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை. அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகம்.

(84617)



## மரண அறிவித்தல்கள்

### மனுவேற்பிள்ளை இராயப்பு



இளவாலையைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட மனுவேற்பிள்ளை இராயப்பு 19.04.2009 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் இமல்டா றஞ்சிதத்தின் அன்புக் கணவரும் இந்திரா (பிரான்ஸ்), ஜெயறஞ்சன் (பிரான்ஸ்), பிறேமலா (பண்டத்தரிப்பு), காலஞ்சென்ற யூலியன் மற்றும் ஜோஸ்ரலின் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்ரன், செல்மா (பிரான்ஸ்), கிறிஸ்ரி (Forut, Jaffna), சிந்தியா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் டிலானி, சகானா, அன்ரசன், பிரியன்னா, நிர்மலி, நிரோஜன், மயோலின், கெரியன், ஜொனிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை, சூசைப்பிள்ளை மற்றும் செல்லம்மா, இராசம்மா, காலஞ்சென்ற மரியாம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (22.04.2009) புதன்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

றஞ்சி பலஸ், சமனகை, பண்டத்தரிப்பு. (84612) தகவல்: மனைவி, பிள்ளைகள்.

### திருமதி கைலாயபிள்ளை பரமேஸ்வரி

உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாயபிள்ளை பரமேஸ்வரி நேற்று (20.04.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துவேலு - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கைலாயபிள்ளையின் அன்பு மனைவியும், ஜெயகௌரி, சுபத்திரா ஆகியோரின் அன்புத் தாயும் சிவநேசன், நடராசா ஆகியோரின் பாசமிகு மாமியும் ரமேஸ் (லண்டன்), தினேஸ் (லண்டன்), உருத்திரா (கட்டார்), நிரோ, சிந்து, வினோபா, சொரூபா, நிருபா, சுபராஜ், பிரியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2009) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வில்லு மதவடி லேன், நீர்வேலி தெற்கு. தகவல்: க.சிவசுப்பிரமணியம் (தாத்தா-மைத்துனர்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளில் கடந்த வருடம் 6948 குழந்தைகள் பிறந்தன

## 76 குழந்தைகள் பிறக்கும்போது இறந்துவிட்டதாகத் தகவல்

யாழ்ப்பாணம், ஏப்.21

யாழ்.மாவட்டத்தில் 2008 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 6948 குழந்தைகள் பிறந்துள்ளன. இவற்றுள் 6872 குழந்தைகள் உயிருடன் பிறந்துள்ளன. 76 குழந்தைகள் பிறக்கும்போதே இறந்துள்ளன.

இத்தகவல்கள் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் புள்ளிவிவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழ் இயங்கி வரும் வைத்தியசாலைகளில் 1648 குழந்தைகளும், யாழ்.போதனா வைத்தியசாலை மகப்பேற்று விடுதியில் 5020 குழந்தைகளும், யாழ்.திருக்குடும்ப சுகநல வைத்தியசாலையில் 222 குழந்தைகளும், திருநெல்வேலி சென்றல் நேசிங்ஹோமில் 29 குழந்தைகளும் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் 03 குழந்தைகளும் பிறந்துள்ளன. இதேநேரத்தில் இக்காலப்பகுதியில் வீடுகளில் 26 குழந்தைகளும் பிறந்துள்ளன.

இம்மகப்பேற்றின்போது யாழ். போதனா வைத்தியசாலையில் 59 குழந்தைகளும், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில் 17 குழந்தைகளும் இறந்துள்ளன. (1-300)

# சி[illegible]தானியச் செய்[illegible] விவசாயிகள் ஆர்[illegible]

யாழ்ப்பாணம், ஏப். 21

அண்மையில் பெய்த மழையை அடுத்து விவசாயிகள் சிறுதானியப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதற்காக விவசாயிகள் தமது தோட்ட நிலங்களை உழவு இயந்திரங்கள் மூலம் சீர்ப்படுத்தும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மையில் பெய்துள்ள மழையை பயன்படுத்தி விவசாயிகள் உழுந்து, பயறு, கௌபி, குரக்கன் போன்ற சிறுதானியப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (04-224)

# மாணவர்களின் அறிவைக் கட்டியெழுப்பக் கூடிய வளவாளர்களாக ஆசிரியர்கள் தொழிற்பட வேண்டும்

## சின்னஞ்சூட்டும் விழாவில் கலாநிதி த.கலாமணி

கோப்பாய், ஏப்.21

பாடசாலை என்பது 'கூட்டிணைத்து கற்கும் ஒரு சமுதாயம்'' என்ற புதிய உருவகத்திற்கு ஏற்ப, பாடசாலைகளின் செயலொழுங்குகள் வகுக்கப்பட வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி.



கோப்பாய் தெற்கு றோ.க.த.க பாடசாலையின் மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் இன்று பாடசாலைக் கல்வியிலும் கல்விச் செயல் ஒழுங்குகளிலும், ஆசிரியர் வகிபாகங்களிலும் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றன.

முற்காலங்களில் மாணவர்களை வெறும் குடங்களாகவும்,வெற்றுப் பலகைகளாகவும் மட்டுமே கருதி அவர்களிடத்தில் அறிவைக் கடத்தும் வகிபாகத்தை ஏற்று வழங்குபவர்களாக ஆசிரியர்கள் தொழிற்பட்டு வந்தனர். பின்பு உளவியல் அறிவின் துணையோடு மாணவர்களுடன் கொண்டும் கொடுத்தும் பரிமாற்றம் செய்யும் வகிபாகத்தை ஏற்று தொழிற்பட்ட வகையில் ஒரு வசதி ஏற்பாட்டாளராகவும் ஆசிரியர்கள் கருதப்பட்டனர்.

அதனால் இன்று மாணவர்கள் தமது அறிவைத் தாமே கட்டி எழுப்புவர் என்ற கட்டுருவாக்கத் தத்துவத்தின் அடிப்படையில் நிலைமாற்ற வகிபாகத்தை ஆசிரியர் வகிக்க வேண்டும் என்றும் அவ்வகையில் ஒரு வளவாளராக விளங்க வேண்டுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வகிபாகம் மாணவ மையமானதும் மாணவர் தேர்ச்சிகளை கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டதும் செயல் ஒழுங்குகளால் வழிப்படுத்தப்படுவதும் ஆகும். தற்போது மாணவர்களும் ஆசிரியர்களும் ஒன்றிணைந்து பேதமின்றி செயற்பட்டு வருவது பாடசாலையின் ஊடான நல்லதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கையைத் தருகிறது என்றார்.

பாடசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கோப்பாய் சங்கமம் சிறுவர் நலநோம்பு நிறுவன அருட்பணியாளர் அருட்சகோதரர் யோய் அமிர்தராஜ் அடிகள், பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியை திருமதி ஜீவமலர் மகேந்திரம் ஆகியோரும் உரை யாற்றினர். (04-72)

# ஜி.சீ.ஈ. (சாதாரண) பரீட்சையில் மேலும் சில பாடசாலை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்.20

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ(சாதாரண) தரப் பரீட்சை முடிவுகளை மேலும் சில பாடசாலை அதிபர்கள் "உதயனுக்கு" அனுப்பிவைத்துள்ளனர்.

அந்த முடிவுகள் வருமாறு:

**நாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை**

க.நிரோஜன் - 8ஏ1சி, இ.தர்சிகா - 4ஏ2பி2சிஎஸ், தே.டினோஜா - 4ஏபி2 சி2எஸ், ஸ்ரீ.லக்சிகரன் - 4ஏ3பிஎஸ், இ.மிதுர்லா - 3ஏ2பிசி2எஸ், வே.கோபிஸ்கரன் - 2ஏபி4சிஎஸ், சு.மிதுராம் - 2ஏ3பி3சி, ப.ஆரணி - ஏபி2சி4எஸ், த.அனுசா - ஏபிசி2எஸ், உ.லக்சிகா - ஏ3பி3சிஎஸ், க.தனுசியா - ஏ3சி4எஸ், சு.தாரணி - ஏபி4சிஎஸ், பி.கேதீஸ்வரன் - பி2சி4எஸ், ஞா.லக்சனன் - பி3சி4எஸ், பி.துஸ்யந்தன் - ஏபிசி3எஸ்.

**இளவாலை திருக்குடும்ப கன்னியர்மடம் ம.வி.**

செ.ஆன்லாவண்யா 9ஏ, க.ஆன்ஜஸ்மின் - 5ஏ2பி2சி, ம.ரொசீன்மெலானி - 5ஏபி3சி, கோ.அமுதலோஜினி - 4ஏ3பி2சி, பி.றோசலிற் தமிழினி - 4ஏ2பி2சி எஸ், கி.பிருந்தா - 4ஏபி3சிஎஸ், க.கஜதீபா - 4ஏபி3சி, க.ஜக்குலின் ஜொலிற்றா - 3ஏ4பி2சி, சு.பகீரதி - 3ஏ2பி3சிஎஸ், கு.ஜதிக்கா - 3ஏ2பி2சிஎஸ், க.பிரியங்கா - 3ஏபி2சி3எஸ்.

**புற்றளை மகாவித்தியாலயம்**

செல்லத்துரை கோபிகா - 7ஏபிசி, சண்முகராசா தீபிகா - 6ஏ2பிசி, நடராஜா பகீரதி - 6ஏபி2சி, சிவபாதம் புஸ்பமீரா - 4ஏ2 பி2சிஎஸ், சிறீசோதிநாதன் சத்தியா - 4ஏபி 3சிஎஸ், நித்தியானந்தன் நுமணராஜன் - 4ஏ3பிசி.

**மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்.**

பாஸ்கரன் நிலாஜினி - 8ஏபி, கதிர்காமு சஞ்சீவன் - 8ஏபி, முருகேசு கோபிகா - 8ஏசி, இரகுநாதன் றஜீவன் - 7ஏபிசி, சுப்பிரமணியம் பகீரதன் - 6ஏ3பி, தேவகுமார் கீர்த்தனா - 5ஏ2சி2எஸ், பாலசுப்பிரமணியம் கிருஷா - 4ஏ2பி2சி, குணரத்தினம் மேனகா - 4ஏ3பி2எஸ், ஞானலிங்கம் மிதுனா - 4ஏ2பி2சி, சிவஞானம் பவித்திரா - 4ஏ3பி2சி, கணேசபாலேந்திரன் கலையழகன் - 4ஏ2பி2சி, மனோகரன் மயூரன் - 4ஏ2பி2சி, சிங்கராசா இராகவன் - 4ஏ5பி. (04)

## சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில்

# கரவெட்டிப் பிரதேச செயலகம் யாழ்.மாவட்டத்தில் முதலிடம்

கரவெட்டி, ஏப்.21

சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் நடத்தப்பட்ட தேர்வில் கரவெட்டிப் பிரதேசம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

2008 ஆம் ஆண்டுக்கான மேற்படி திட்டத்திற்காக சிறப்பான பணிகளை ஆற்றியமைக்காக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கிராமசேவை அலுவலர்கள் மற்றும் பிரதேச செயலகத்தின் சகல பிரிவு உத்தியோகத்தர்கள் ஆகியோரைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை யாழ்.செயலகத்தில் நடைபெற்றது.

இதேவேளை இத்திட்டத்தில் தேசிய ரீதியில் யாழ்.மாவட்டம் முதலிடத்தினைப் பெற்றதும் மாவட்ட ரீதியில் கரவெட்டிப் பிரதேச செயலகமும் பெற்றுக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது. (04-70)

# நிதி ஒதுக்கீடு

கோப்பாய், ஏப். 21

வடமாகாண சமூகநலத்துறைத் திணைக்களத்தினால் வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் சமூக பராமரிப்பு நிலையம்; சிறுவர் பாதுகாப்பு நிலையம் ஆகியவற்றை அமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கென சமூக பராமரிப்பு நிலையத்திற்கு 1.2 மில்லியன் ரூபாவும், சிறுவர் பாதுகாப்பு நிலையத்திற்கு 0.69 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (04-72)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஏப்.21

தென்மராட்சி பிரதேச பிரிவுக்கு திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் பிரதேச செயலகத்தினால் கோரப்பட்டுள்ளன.

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 30 க்கும் 58 க்கும் இடைப்பட்ட வயதுடைய ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக நிர்வாக கிளையில் உரிய படிவத்தினைப் பெற்று விண்ணப்பிக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (04-207)

# தடுப்பூசி மருந்து இல்லாமையால் கோழிகளுக்கு நோய் பரவும் அபாயம்!

யாழ்ப்பாணம், ஏப்.21

காரைநகர் பிரதேசத்தில் கோழிகளுக்கான அம்மை நோய் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துகள் ஏற்றப்படாமையினால் அவற்றிற்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

குறித்த மருந்தினைப் பெற்றுக்கொள்வதற்காக இப்பகுதி மக்கள் வட்டுக் கோட்டை கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுடன் பல தடவைகள் தொடர்பு கொண்டனர். எனினும் இந்த மருந்துகள் நீண்ட காலமாகக் கொழும்பில் இருந்து எடுத்து வரப்படாமையால் கோழிகளுக்கான தடுப்பூசிகளை ஏற்ற முடியாதுள்ளதாக வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய அதிகாரி பிரிவினர் தெரிவித்ததாக இப் பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தற்போது நிலவும் கடும் வெப்பம் காரணமாக கோழிகளுக்கு தூக்க நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவற்றிற்கான தடுப்பூசி மருந்துகளைப் பெற்றுக் கொடுக்க உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோழிவளர்ப்பில் ஈடுபடுவோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (04-250)

# விசேட கலந்துரையாடல்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்டப் பணிமனையில் நாளை புதன் கிழமை மு.ப. 10 மணிக்கு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் நிலை தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று இடம் பெறவுள்ளது.

கட்சியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரி யும் இக் கலந்துரையாடலில் பங்கேற்பார் எனவும் கட்சி உறுப்பினர்களையும், ஆதரவாளர்களையும் இதில் கலந்து கொள்ளு மாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (04)




# தொழிற் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஏப்.21

அறவழிப் போராட்டக் குழுவினர் தென்மராட்சிப் பிரதேச இளைஞர் யுவதிகளுக்கான மின்வாயு ஒட்டுப் பயிற்சிநெறியினை மே மாதம் ஏழாந் திகதி அறவழி தொழில் பயிலகத்தில் ஆரம்பிக்கவுள்ளனர்.

தொழில் பயிற்சி பெறவிரும்பும் 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர் யுவதிகள் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை கைதடி - நுணாவிலில் உள்ள அறவழி செயலகத்தில் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (04-207)





யாழ்.மாவட்ட செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் 'நீரிழிவு நோயும் அதனைத் தடுத்தலும்' எனும் தலைப்பிலான கருத்தரங்கு அண்மையில் நடத்தப்பட்[illegible] இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், வைத்திய[illegible] உரையாற்றுவதை முதலிரு படங்களிலும், கருத்தரங்கில் [illegible] கொண்டவர்களை மூன்றாவது படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 24 02 1946

உதிர்வு 12 05 2008

## திருமதி மகேஸ்வரி தம்பித்துரை (கைதடி)

திதி: அபரபக்ஷ துவாதசி

அம்மா!
ஆண்டொன்று சென்றதுவே
உன் மறைவால் உருகுகிறதே நெஞ்சம்
மறைவை நம்ப மறுக்கிறதே உள்ளம்
உன் அன்புக் கரங்களை நீட்டி
எம்மை வானுயர வைத்தீர்களே
பெற்ற பிள்ளைகள் இருவரையும்
கண்ணை இமை காப்பது போல்
அல்லும் பகலும் அயராது கண்விழித்து
எமைக் காத்து தரணியில்
தாய்மைக்கு இலக்கணமாய் திகழ்ந்தீர்களே
பெற்ற தாயிலும் மேலாக பேரப்பிள்ளைகளிடம்
அன்பு காட்டி ஆசை முத்தமிட்டீர்களே
உன் அன்பு நீர்க்குமிழியாக நிலையற்றதானதோ!!!
கவிதை எழுத கருத்தேடி நான் கண்ணை மூடினேன்
எம் இதயத்தை வேகவைத்து உதிரத்தை உதிரவைத்து
எம் கண்ணீர்த்துளிகள் காகிதத்தை நனைய வைத்ததுவே
என் செய்வோம் எம் அம்மாவே!

பாசமிகு பிள்ளைகள் - ஜெ.சியாமளா, கி.வத்சலா. (84605)

இன்று(21.04.2009) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பவானி களஞ்சியம்,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# இலங்கையில் போர்நிறுத்தம் இல்லையேல் திரையுலகம் போராட்டத்தில் குதிக்கும்

சென்னை,ஏப்.21

இலங்கையில் திங்கட்கிழமைக்குள் போர் நிறுத்தம் செய்ய சோனியா காந்தி நடவடிக்கை எடுக்காவிட்டால், அதை கண்டித்து இன்று 21ஆம் திகதி சென்னையில் சினிமா துறையினரின் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் - என்று இயக்குநர் பாரதிராஜா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உடனடியாக போர் நிறுத்தம் செய்ய சோனியாகாந்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி 'ஈழத் தமிழர் படுகொலைக்கு எதிரான பெண்கள் அமைப்பினர் சென்னை எழும்பூரில் 5ஆவது நாளாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர். 20 பெண்கள் சாகும்வரை உண்ணாவிரதமும், 100க்கும் மேற்பட்ட பெண்கள் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அப்போது அவர் கூறுகையில் -

இலங்கையில் திங்கட்கிழமைக்குள் போர் நிறுத்தம் செய்ய சோனியா காந்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால், அதை கண்டித்து இன்று 21ஆம் திகதி சென்னையில் சினிமா துறையினர், தமிழ் உணர்வாளர்கள் அனைவரும் கலந்துகொள்ளும் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் நடை பெறும் - என்றார். (சி)

# வலி.தென்மேற்குப் பிரதேச செயலக கலை, இலக்கியப் போட்டி முடிவுகள்

நவாலி,ஏப்.21

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடத்திய 2009ஆம் ஆண்டுக்கான தேசிய இலக்கியப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இப்போட்டிகளில் வெற்றியீட்டியவர்களின் விவரம் வருமாறு:

**கட்டுரை**

*கனிஷ்ட பிரிவு:* முதலாமிடம் இ.கிருஷாந்தி (பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்), இரண்டாமிடம் அ.மேரிமெல்சியா (சில்லாலை றோ.க.த.க.பாடசாலை), மூன்றாமிடம் கு.பிரதாபன் (பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்)

*சிரேஷ்ட பிரிவு:* க.தர்மிகா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ட.டாமினி (நவாலி மகா வித்தியாலயம்), தெ.சத்தியா (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை)

**கவிதை**

*கனிஷ்ட பிரிவு:* யே.றொசிற்றா (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.பாடசாலை), தே.சிந்துஜா (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.பாடசாலை), நீ.சுகேனியா (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. பாடசாலை).

*சிரேஷ்ட பிரிவு:* கி.கெல்சியா (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.பாடசாலை), சி.மிருணன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), ர.ரகீதா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

**கவிதை**

யோ.தேவமதி (மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்), அ.யேசுரட்ணம் (உயரப்புலம், ஆனைக்கோட்டை), க.ஜெசீதன் (கல்லூரி ஒழுங்கை, சண்டிலிப்பாய்).

**சிறுகதை**

சி.அஜந்தன் (நவாலி தெற்கு, மானிப்பாய்), யோ.தேவமதி (மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்), இ.இராசயோகன் (சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை).

**பாடலாக்கம்**

சி.அஜந்தன் (நவாலி தெற்கு, மானிப்பாய்), சு.காசிராஜா (மாகியப்பிட்டி வடக்கு, கொம்பனிப்புலம்), இ.இராசயோகன் (சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை). (4-100)

# பெருந்திருவிழா ஆரம்பம்

கரவெட்டி,ஏப்.21

வல்வை ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 16 நாள்கள் திருவிழா நடைபெறும்.

தேர்த்திருவிழா அடுத்த மாதம் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.45 மணிக்கு இடம்பெறும். மறுநாள் சனிக்கிழமை காலை 7 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (201-70)


# A/L 2011- புவியியல்

ஆசிரியர்:-
N.S.சங்கர் B.A.(Hons) Geog.

ஆரம்பம்:- 22.04.2009
புதன் 4.00 p.m.

★ O/Lஇல் புவியியல் கற்காத மாணவர்களுக்கு விஷேட வகுப்புக்கள்.
★ A/L 2009, 2010 பிரிவுகளும் நடைபெறுகின்றன.

அற்லஸ் புவியியற் கல்வி நிலையம்
மயிலணி-சிவன் கோயில் முன், மயிலணி,
(ஜெற் மோட்டோர்ஸ் லேன்) சுன்னாகம்.


# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 01 . 07 . 1924



மறைவு 24 . 04 . 2006

## அமரர் நல்லதம்பி வீரசிங்கம்

திதி: துவாதசி

தெய்வமே!
மூன்று ஆண்டுகள் என்ன
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
மறவாதிருக்க மன்றுளாடும்
விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

சி.சிவலிங்கம்,
12, விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை. (84551)

குடும்பத்தினர்.

# நெஞ்சகலா நினைவலைகள்

10ஆம் ஆண்டு | முதலாம் ஆண்டு



அமரர் அரியகுட்டி பொன்னுத்துரை



திருமதி சரஸ்வதி பொன்னுத்துரை

05.06.1912 ← தோற்றம் → 02.03.1927
10.06.1999 ← மறைவு → 01.05.2008

திதி: ஏகாதசி (21.05.2009)

எத்தனை ஆண்டுகள் வந்தாலும்
கண்களோ கரைகிறது!
அப்பா, அம்மா என்றழைக்க இனி யாருமில்லை
உங்களது உடலை உருக்கி
அயராது உழைத்து எங்களை
ஆளாக்கிய எம் தெய்வங்களை!
நாம் என்றும் மறவோம்
பல கோடி இன்பங்கள் இருந்தென்ன
பல உறவுகள் இருந்தென்ன
எங்கள் பெற்றோருக்கு நிகர்
எங்கள் பெற்றோர்தான்.

ஊரெழு மேற்கு, சுன்னாகம். (84593) குடும்பத்தினர்.

# வாழைப்பழம் விலை வீழ்ச்சி

கோப்பாய்,ஏப்.21

வாழைப்பழத்தின் விலை தற்போது வீழ்ச்சியடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். கடந்த சில நாள்களாக நீர்வேலிச் சந்தையில் கதலி இனம் கிலோ 40 - 50 வரையும் இதரை இனம் கிலோ 20-30 வரையும் கொள்வனவு செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வாழைப்பழங்களின் விலை எதிர்வரும் நாள்களில் மேலும் வீழ்ச்சியடையலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நிஷாப் புயலினால் அழிவுற்ற வாழைகளுக்கு பதிலாக மீள் நடுகை செய்யப்பட்ட வாழைகளின் குலைகள் தற்போது அறுவடைக்கு ஏற்ப முதிர்ச்சி அடைந்து வருவதாலேயே இவ்விலை வீழ்ச்சி ஏற்பட்டு வருவதாகவும் விவசாயிகள் மேலும் தெரிவித்தனர். (4-72)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 ★ 10 ★ 1925



மறைவு 02 ★ 05 ★ 2008

## அமரர் பொன்னையா தியாகராஜா

திதி: துவாதசி

பன்னிருதிங்கள் வந்ததையா
பார்விட்டு நீங்கள் சென்று
நெஞ்சமெல்லாம் கனக்குதையா
உங்கள் பிரிவுத்துயர் தாங்காது
என்றும் உங்கள் நினைவுகளுடன்
கண்ணீர் மல்க நாம் நின்று
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுதுமலை வீதி, தாவடி. (84606) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயல் விமலேந்திரன் வெற்றிக் கிண்ணத்தை யாழ்.மத்திய கல்லூரி அணி சுவீகரித்தது

வலி.வடக்கு,ஏப்.21

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வர் நோயல் விமலேந்திரன் சுற்றுக் கிண்ணத்திற்காக யாழ்ப்பாணக் கல்லூரியினால் யாழ்ப்பாணப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட



இருபதுக்கு-20 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நோயல் விமலேந்திரன் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியும்மோதிக்கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி களத்தடுப்பில் ஈடுபட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி தனது இலக்குகளை மிகவும் வேகமாக இழந்தது. 9.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 64 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

ஸ்ரீகுகன் 211 ஓட்டங்களையும், நிகேதன் 11 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 16 ஓட்டங்களும் பெறப்பட்டன. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த தர்சன் ஒரு ஓவர் பந்து வீசி 04 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் ஜெரிக்துசாந் 3.5 ஓவர்கள் பந்து வீசி 10 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் அலெலன்குமார் 02 ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

65 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 5.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. ஜேம்ஸ் ஜன்சன் 23 ஓட்டங்களையும் லவநிதன் ஆட்டமிழக்காது 20 ஓட்டங்களையும் எடின் 13 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த நிரோஜன் 02 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார். (50-86)

## யாழ்ற்ரன் கல்லூரி முதலிடத்தில்

வேலணை, ஏப்.21

தீவக மாவட்ட பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட துடுப்பாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டப் போட்டிகளில் யாழ்ற்ரன் கல்லூரி மூன்று முதலாம் இடங்களையும் இரண்டு இரண்டு இடங்களையும் பெற்று முதலிடத்தையும் நயினாதீவு கணேசா கனிஷ்ட வித்தியாலம் மூன்று முதலாம் இடங்களையும், ஒரு 2 ஆம் இடத்தையும் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது. (50-267)




# அரியாலை ஸ்ரான்லி வெற்றி

வலி.வடக்கு, ஏப்.21

கே.சி.சி.சி வெற்றிக் கிண்ணத்திற்காக கொக்குவில் மத்திய சனசமூகநிலைய விளையாட்டுக்கழகம் கழகங்களுக்கிடையே நடத்திவரும் லீக் முறையிலான 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய லீக் முறையிலான கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் அரியாலை ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் 08 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் அரியாலை ஸ்ரான்லி விளையாட்டுக் கழகமும், கந்தர்மடம் நியூஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் 19.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

முரளி 26 ஓட்டங்களையும் இளங்கோ 20 ஓட்டங்களையும் நிரஞ்சன் 10 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 16 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஸ்ரான்லி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சுகிந்தன் 06 ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும் வினோசன் 05 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் கஜதீபன் 03 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் ரஜனிகாந் இரண்டு பந்துகளை வீசி ஒரு ஓட்டத்திற்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி விளையாட்டுக்கழகம் 16.2 ஓவரில் 02 விக்கெட்டுக்களை இழந்து 86 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

கிருபாகரன் 32 ஓட்டங்களையும் கண்ணராஜ் 23 ஓட்டங்களையும் ரஜனிகாந் 19 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

நியூஸ்ரார் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த கோகுலன் 06 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், சஜந்தன் 05 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (50-86)

# கே.ஸி.ஸி.ஸி கிண்ணத்துக்கான ஆட்டமொன்றில் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அணி வெற்றி

வலி வடக்கு, ஏப்.21

கே.ஸி.ஸி.ஸி வெற்றிக் கிண்ணத்திற்காக கொக்குவில் மத்திய சனசமூகநிலைய விளையாட்டுக்கழகம் கழகங்களுக்கிடையே நடத்திவரும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய லீக் முறையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆட்டமொன்றில் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அணி 5 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டமொன்றில் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அணியும் யாழ்.ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம் 06 விக்கெட்டுக்களை இழந்து 201 ஓட்டங்களைப் பெற்றுககொண்டது. குமணன் ஆட்டமிழக்காது 41 ஓட்டங்களையும், விதுசன் 37 ஓட்டங்களையும், கிரிசாந்த 34 ஓட்டங்களையும், ராஜீவன் 28 ஓட்டங்களையும், விருசன் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 20 ஓட்டங்களும் பெறப்பட்டன.

பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த சஞ்சீவன் 06 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 26 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும், ஜெயரூபன் 06 ஓவர்கள் பந்து வீசி 37 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், லவகாந்த 05 ஓவர்கள் பந்து வீசி 34 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பல்கலைக்கழக அணி 27.5 ஓவர்களில் 05 விக்கெட்டுக்களை இழந்து 206 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

நிருசன் 68 ஓட்டங்களையும் லவகாந்த ஆட்டமிழக்காது 61 ஓட்டங்களையும் பவிதரன 19 ஓட்டங்களையும் திவாகரன் 15 ஓட்ட ங்களையும் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 29 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் சார்பில் பந்து வீசிய கிரிசாந் 5.5 ஓவர்கள் பந்து வீசி 32 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், மயூரன் 06 ஓவர்கள் பந்து வீசி 33 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், குமணன் 05 ஓவர்கள் பந்து வீசி 39 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (50-86)

# பாடசாலைகளின் 13 வயதுக் கிரிக்கெட் அணி; 24 மாணவர்கள் சிறந்த வீரர்களாகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஏப்.21

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்.பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவு மாணவர்களிடையே நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் போது 24 மாணவர்கள் சிறந்த வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர் பி.விதுசன் மிகச் சிறந்த வீரராகத் தெரிவு செய்யப்பட் டார்.

சிறந்த வீரர்களாகத் தெரிவான மாணவர்களின் விவரங்கள் புகைப்படங்கள் வருமாறு:


பி.துவாரக சீலன் (சென்ஜோன்ஸ் கல்லூரி)


எஸ்.துஸ்யந் (சென்.ஜோன்ஸ் கல்லூரி)


ஜி.ஏ.அனோஜன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி)


எஸ்.லபோஜன் (யாழ்.சென்றல் கல்லூரி)


யூலியஸ் கெனிசன் (யாழ்.சென்றல் கல்லூரி)


எஸ்.சௌமிதரன் (யாழ்.சென்றல் கல்லூரி)


பி.நிருபன் (யாழ்.சென்றல் கல்லூரி)


எம்.டி.கஜீந்திரன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி)


ஆர்.என்.ரட்ணகுமார் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி)


ஏ.சுபநேசன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி)


ரி.பிரதீப் (ஹாட்லி கல்லூரி)


ரி.சத்தியன் (கொக்குவில் இந்து கல்லூரி)


ஜி.லிங்கநாதன் (கொக்குவில் இந்து கல்லூரி)


ஆர்.பார்த்தீபன் (கொக்குவில் இந்து கல்லூரி)


ஆர்.நிறோஜன் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் வித்தியாலயம்)


ஜே.மயூரன் (மகாஜனாக் கல்லூரி)


ஜே.ஜெனதன் (மகாஜனா கல்லூரி)


எஸ்.கஜெந்தன் (மகாஜனாக் கல்லூரி)


ரி.பிரசாந் (கனகரட்ணம் ம.ம.வி)


ஜே.ஜனக்சன் (ஸ்கந்த வரோதயக் கல்லூரி)


விதுசன் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி)


எம்.பாகீசன் (விக்னேஸ்வரா வித்தியாலயம்)

தனுஜன் (நெல்லியடி மத்திய மகா வித்தி.)

எம்.அன்ட்லி ஜோசாந் (யூனியன் கல்லூரி)

## பழைய மாணவர் துடுப்பாட்டத்தில் ஸ்கந்தா வெற்றி

வலி.வடக்கு, ஏப்.21

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் இடையே நடைபெறும் நாயகர்களின் துடுப்பாட்டப் போட்டியில் தொடர்ச்சியாக இடம்பெறும் பழைய மாணவர்களுக்கான 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி 38 ஓட்டங்களினால் வெற்றிபெற்றுள்ளது.

மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இப் போட்டியில் முதலில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி துடுப்பெடுத்தாடியது. 49.03 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக் களையும் இழந்து 279 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 43.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்ளையும் இழந்து 241 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதனால் ஸ்கந்தவரோதயக் கல்லூரி 38 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு அமைதிப்படையை அனுப்புமாறு மலேசியத் தமிழர் ஒபாமாவிடம் கோருகின்றனர்

கோலாலம்பூர்,ஏப்.21

இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளித்து அவர்களின் கோரிக்கைகள் நிறைவேறும்வரை ஐ.நாவின் அமைதிப் படையை அங்கு அனுப்ப வேண்டும்.

மலேசியத் தமிழர்கள் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவிடம் மேற்கண்டவாறு கோரியுள்ளனர்.

அமெரிக்கத் தூதரகத்திடம் நேற்று முன்தினம் மலேஷியத் தமிழர்கள் கையளித்துள்ள மகஜரில் இப்படித் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

மலேசியத் தமிழர்களாகிய நாங்கள், ஈழத்தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் இனப் படுகொலை குறித்து உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

கடந்த 3 மாதங்களில் மட்டும் 4,100க்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டும் 8,800க்கும் அதிகமான பொதுமக்கள் படுகாயமடைநதும் உள்ளனர்.

குறைந்தது ஒரு லட்சத்து 90 ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் 20 மைல் சதுர பரப்பளவு மட்டுமே கொண்ட பகுதியில் இருக்கின்றனர்.

கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக தமது சொந்த மண்ணில் அமைதியாகவும் சுயமரியாதையுடனும் வாழ்கின்ற உரிமைக்காகப் போராடும் தமிழ் மக்களுக்கு இந்த நாடுகளிடம் இருந்து எந்தவகையிலும் ஆதரவான பதில் கிடைக்கவில்லை.

மலேசியத் தமிழர்களாகிய நாங்கள், இன்றுவரையில் அமெரிக்கா, இலங்கைத் தமிழர்களின் கோரிக்கைகளைச் செவிமடுத்து அவர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்படும் இனப்படுகொலையைக் களைவதில் தோல்வியடைந்து விட்டது என்றே கருதுகின்றோம்.

பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் சிக்கிக் கொண்டுள்ள ஒரு லட்சத்து 90 ஆயிரம் தமிழர்களை இனப்படுகொலையில் இருந்து காக்க உடனே தலையிட்டு ஆவன செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு மன்றத்தோடு இணைந்து உடனடியாக இலங்கையில் நிரந்தர போர் நிறுத்தத்தைக் கொண்டு வரவும் தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளித்து அவர்களின் கோரிக்கைகள் நிறைவேறும் வரை ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப் படையை அங்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

உங்கள் மீது முழு நம்பிக்கை கொண்டு நாங்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகளை கவனத்தில் கொண்டு உடனடியாக தலையிட்டு இச்சிக்கலுக்கு தீர்வு காண்பீர்கள் என பெரிதும் எதிர்பார்க்கின்றோம் என்றுள்ளது. (சி)


## தொழிலாளர் தேவை

பிள்ளையார் ஸ்ரோர்ஸ் ஸ்தாபனத்தில் வேலை செய்வதற்குக் கூலித் தொழிலாளர்கள் தேவை. உடன் நேரில் வரவும்.

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,**
*31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.*


## முதலுதவிப் பயிற்சி

கோப்பாய்,ஏப்.21

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் உலக சுகாதார ஸ்தாபன அனுசரணையோடு முதலுதவிப் பயிற்சி நெறி ஒன்று கடந்த வியாழன், வெள்ளிக்கிழமை நாள்களில் சிறுப்பிட்டி பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சி நெறியில் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் என 131 பேர் கலந்து பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(4-72)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது நண்பனும் யாழ்.கல்வி வலய திட்ட உதவியாளரும் (நிதி) ஆகிய **திரு.T.நிக்சன் ரைரஸ்** (B.B.A (F.M Spe) M.A மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் பொது நிர்வாகத்தில் முதுகலைமாணி M.A பட்டம் பெற்றமையையிட்டு அகமகிழ்வுடன் அவர் மேன்மேலும் பட்டங்கள் பெற்று சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

*நல்லூர்.* நண்பர்கள்.



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

**திசைமுகப்படுத்தும் நிகழ்வு (Orientation Programme) - 2009**

**கலைமுதற் தேர்வு**

**கல்வியாண்டு 2006/ 2007 மற்றும் 2007/2008**

மேற்படி இரு கல்வியாண்டுகளிலும் கலை முதற் தேர்வுக்கு பதிவு செய்த மாணவர்களுக்காக 25.04.2009 தொடக்கம் 31.05.2009 வரை சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமை மற்றும் பொது விடுமுறை நாள்களில் காலை 9 மணி தொடக்கம் பி.ப. 2.30 வரை திசைமுகப்படுத்தும் நிகழ்வொன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்வில் தவறாது கலந்துகொண்டு பயன்பெறுமாறு அழைக்கப்படுகின்றீர்கள்.

மேற்படி நிகழ்வு தொடர்பான நேர அட்டவணையை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் அலகுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களைப் பெறவிரும்புவோர் 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
20.04.2009 (சி/558136)


## குழாய்க் கிணறு அமைப்பு

நல்லூர்,ஏப்.21

யாழ்ப்பாணம் மாநகரசபை சுப்பிரமணியம் சிறுவர்பூங்கா, துரையப்பா விளையாட்டரங்கு ஆகியவற்றின் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு குறிப்பிட்ட இரு இடங்களிலும் குழாய்க் கிணறுகளைஅமைத்துள்ளது.

(50-111)


## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து




*திரு.திருமதி பத்மசிறி (பிரபா) - கலைச்செல்வி*

தம்பதியரின் செல்வப் புதல்வி **ரூபலக்ஸ்மிதா** தனது முதலாவது பிறந்தநாளை இன்று (21.04.2009) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அம்மா, அப்பா, அக்காமார், அப்பப்பா, தாத்தா, அம்மம்மா, சித்திமார், சித்தப்பாமார், மாமாமார், அத்தைமார் அனைவரும் சீருஞ்சிறப்பும் பெற்று நீடூழி வாழ விநாயகனை வேண்டி வாழ்த்துகின்றனர்.

**கலையமுதா** *(சித்தி)*
*வவுனியா.*

*27, காரைக்காட்டு லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.*


## வங்கிகளில் இடம்பெற்ற நிகழ்வுகளில்



நெல்லியடி ஹற்றன் நஷனல் வங்கிக் கிளையில் கடந்த 14ஆம் திகதி நடைபெற்ற புதுவருட கொடுக்கல் வாங்கல் நிகழ்வுகளின்போது மேற்படி வங்கியின் முகாமையாளர் ப.சங்கர் வாடிக்கையாளர் ஒருவருக்கு கைவிசேடமும் பரிசுப் பொருளொன்றும் கையளிப்பதை படத்தில் காணலாம்.




இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் சித்திரைப் புத்தாண்டையொட்டி நடைமுறைப்படுத்திய காப்புறுதித் திட்டத்தில் இணைந்து கொண்ட வாடிக்கையாளர் ஒருவருக்கு அதன் பிராந்திய முகாமையாளர் திருமதி அரியநாயகம் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் ஆயுள் காப்புறுதி முகாமையாளர் அ.ரஞ்சித் காப்புறுதி ஆலோசகர் சி.சர்வதர்சன் ஆகியோர் காணப்படுகின்றனர்.



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மக்கள் வங்கி வல்வெட்டித்துறை கிளையில் நடைபெற்ற மகளிர் தின நிகழ்வுகளில் வனிதா வாசனா சேமிப்புச் சான்றிதழை வங்கியின் வாடிக்கையாளர் திருமதி வனிதா ஞானச்சந்திரனுக்கு வங்கி உதவி முகாமையாளர் திருமதி ஸ்ரீகாந்தநிர்மலா விமலேந்திரன் வழங்குகிறார். முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தன், பிரதி முகாமையாளர் ச.சர்வானந்தன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.



கொழும்பு இந்துமகளிர் கல்லூரியில் இலங்கைவங்கி சேமிப்பு பிரிவு அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது மாணவி ஒருவருக்கு வைப்பு புத்தகத்தை இலங்கை வங்கி பாடசாலை சேமிப்பு பிரிவுத் தலைமை அலுவலக இணைப்பதிகாரி ஆர்.சுதாகரன் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் இரவு பகலாகக் கடமையாற்றி வரும் அரச மருத்துவர்கள் மிகவும் களைப்படைந்து விட்டனர்

## செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.21

முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மக்களுக்குச் சேவையாற்றி வரும் அரசாங்க மருத்துவர்கள் மிகவும் களைப்படைந்துள்ளதாக செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு தெரிவித்திருக்கின்றது.

இந்தப் பகுதியில் இடம்பெறும் போரினால் காயமடையும் ஆயிரக்கணக்கான மக்களுக்குச் சிகிச்சையளிப்பதற்குத் தேவையான மருந்துகள் இல்லாது உள்ளதுதான் தாம் எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினையாக உள்ளது எனவும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தப் பகுதியில் இருந்து தரைவழியாக வெளியேறும் மக்களுக்கு பணியாற்றுவதற்கு தாம் விரும்புவதாகவும், இருந்தபோதிலும் அதற்கான அனுமதி தமக்குக் கிடைக்கவில்லை எனவும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு குறிப்பட்டிருக்கின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கடற்கரைப் பகுதியில் உள்ள ஒரு சிறிய பகுதியில் ஒரு லட்சத்துக்கும் அதிகமானவர்கள் இருப்பதாகத் தெரிவித்துள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அவர்களின் வாழ்க்கை ஆபத்தானதாகவே உள்ளதாகவும் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இந்தப் பகுதியுடன் தரைவழியான தொடர்புகள் எதுவும் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு இல்லாமையால் கடல்வழியாக மக்களை வெளியேற்றும் நடவடிக்கைகளை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மேற்கொண்டு வருகின்றது.

வாராந்தம் இரண்டு அல்லது மூன்று தடவைகளில் 400 அல்லது 500 பேர்களாக கப்பல்கள் மூலம் நோயாளிகள், வயதானவர்கள் மற்றும் மோசமான நிலையில் காயமடைந்தவர்கள் செஞ்சிலுவைக் குழுவின் ஆதரவுடன் வெளியேற்றப்படுகின்றனர்.

இங்குள்ள நிலைமைகள் மிகவும் மோசமானதாக உள்ளது எனக் குறிப்படும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் முக்கிய பணியாளரான போல் கஸ்ட்டலா, தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இங்குள்ள மருத்துவ வசதிகள் போதுமானதாக இல்லை எனவும் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சைச் சேர்ந்த மருத்துவர்கள் இப்போதும் இங்கு பணிபுரிகின்றார்கள் எனக் குறிப்படும் அவர், இந்த மருத்துவர்கள் மாதக்கணக்காக இரவு-பகலாக எந்தவிதமான இடைவெளியும் இல்லாமல் பணிபுரிவதால் மிகவும் களைப்படைந்து விட்டனர். அத்துடன் மருந்துப் பொருள்களின் விநியோகமும் மிகவும் குறைவாகவே இருக்கின்றது எனத் தெரிவித்தார். (50)

# வடமராட்சி இந்துமகளிர் கல்லூரியில் புதிய மாடிக் கட்டடத் திறப்புவிழா

வடமராட்சி, ஏப்.21

நிக்கொட் நிறுவனத்தின் உதவியுடன் பருத்தித்துறை வடமராட்சி இந்துமகளிர் கல்லூரியில் கட்டப்பட்ட மாடிக் கட்டடத் திறப்புவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி சீதா சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிடப் பணிப்பாளர் ரிச்சாட் வோக்ஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்து வைப்பார்.

சிறப்பு விருந்தினர்களாக நிக்கொட் நிறுவன திட்டப் பணிப்பாளர் த.லங்காநேசன், யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் ஆசிய அபிவிருத்தி வங்கி திட்ட நிபுணர் எம்.திருச்செல்வம், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆலோசகர் திருமதி சந்திபனிக் கொடித்துவக்கு உட்பட வேறு பலரும் கலந்துகொள்வார்கள். (236)

# புலிகளுக்கு எதிரான பிரசாரத்துக்கு அமைச்சுகளுக்கு போதிய நிதி ஒதுக்கீடு

கொழும்பு, ஏப். 21

புலிகளுக்கெதிரான பிரசாரங்களை மேற்கொள்வதற்கென திறைசேரியானது பல்வேறு அமைச்சுகளுக்கும் தாராளமான நிதி ஒதுக்கீடுகளை கடந்த பெப்ரவரி, மார்ச் மாதங்களில் வழங்கியுள்ளது. இந்த வகையில் 300 மில்லியன் ரூபாவை திறைசேரி வழங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது. இதில் அமெரிக்காவில் பிரசாரங்களை முன்னெடுப்பதற்காக பல்வேறு அமைச்சுகளுக்கும் 69 மில்லியன் ரூபா வழங்கப்பட்டிருப்பதும் அடங்கும்.

கடந்தவாரம் அரசாங்கத்தால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களிலிருந்து இந்தத் தகவல் தெரியவந்துள்ளது.

69 மில்லியன் ரூபா வரி ஒதுக்கீடுகள் வெளியுறவு அமைச்சுக்கு பெப்ரவரி மத்தியில் வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் இலங்கைக்கெதிராக புலிகளால் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டுள்ள பிரசாரங்களுக்கு எதிரான பரப்புரைகளை மேற்கொண்டு இலங்கையின் மதிப்பை மேல் எழச் செய்வதற்காக இந்தப் பணம் வழங்கப்பட்டுள்ளதாம். (ப)

## மேமாதம் தொடக்கம் வரி அதிகரிக்கும்

கொழும்பு, ஏப். 21

தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரிவிதிப்பு ஒரு வீதத்திலிருந்து மூன்று வீதமாக மே முதலாம் திகதியிலிருந்து அதிகரிக்கப்படவிருக்கின்றது.

இந்த வரியானது மதிப்புக் கூட்டப்பட்ட (வற்) வரி விதிப்புக்குட்பட்ட தொழில் துறைகளுக்கே விதிக்கப்படும் என்று தெரிகின்றது. இந்த வரியானது கடந்த நவம்பர் மாதம் வரவு செலவுத் திட்ட உரையில் ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்டிருந்தது.

# நாணய நிதியத்தின் கூட்டத்தில் கலந்துகொள்ள இலங்கைப் பிரதிநிதிகள் குழு நியூயோர்க் விஜயம்

கொழும்பு, ஏப். 21

சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பங்குபற்ற இலங்கையின் உயர் மட்டப் பிரதிநிதிகள் குழுவொன்று நியூயோர்க் செல்லவுள்ளது.

இக்கூட்டத்தில் அரச நிர்வாக, தேசிய நடவடிக்கைகள் மற்றும் பிரதி நிதியமைச்சர் சரத் அமுனுகம, மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோர் அடங்கிய குழுவே பங்குபற்றவுள்ளது.

இக்கூட்டம் நாளை மறுதினம் 23ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதிவரை நியுயோர்க்கில் நடைபெறவுள்ளது. இதில் இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடம் கோரியுள்ள 1.9 மில்லியன் டொலர் கடனுதவி தொடர்பாகவும் கலந்துரையாடப்படும் என மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:

சர்வதேச நிதி நெருக்கடியினால் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிக் கும் தீர்வு காணவே கடனுதவியை கோரியுள்ளோம். ஆ[illegible] கடனைப் பெறுவதற்காக இலங்கைக்[illegible] பொருந்தாத நிபந்தனைகளை ஏற்கமாட்டோம் எனவும் அவர் தெரிவித்தார். (50-06)

# தேர்தல் வன்முறைகள் நாளுக்கு நாள் உயர்வு

கொழும்பு, ஏப். 20

எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல்களின் வன்முறைச் சம்பவங்கள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன எனத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் தெரிவித்துள்ளது.

இதன்படி நேற்று முன்தினம் 10 மணிவரை 103 வன்முறைச் சம்பவங்கள் தம்மிடம் பதிவாகியுள்ளன எனத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் மாகாண ஒருங்கிணைப்பாளர் அஜ்மீர் தெரிவித்தார்.

இவற்றில் 43 பாரிய வன்முறைச் சம்பவங்களும், 60 சிறிய வன்முறைச் சம்பவங்களும் பதிவாகியுள்ளன எனஅவர் தெரிவித்தார்.

மேல்மாகாணசபைத் தேர்தல்களின் போது இதுவரை 8 துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், கூடுதலான வன்முறைச் சம்பவங்கள் கடுவெல தேர்தல் தொகுதியிலேயே பதிவாகியுள்ளன எனவும் கடுவெல தேர்தல் தொகுதியில் இதுவரை 16 வன்முறைச் சம்பவங்கள் தமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் அந்த நிலையத்தின் மாகாண ஒருங்கிணைப்பாளர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு எதிராக 30 முறைப்பாடுகளும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக 10 முறைப்பாடுகளும், ஜே.வி.பிக்கு எதிராக 2 முறைப்பாடுகளும், அடையாளப்படுத்த முடியாத கட்சிகளுக்கு எதிராக 61 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன என அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், கொழும்பு மாவட்டத்தில் 41 வன்முறைச் சம்பவங்களும், கம்பஹா மாவட்டத்தில் 30 முறைப்பாடுகளும், களுத்துறை மாவட்டத்தில் 32 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன எனத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் மாகாண ஒருங்கிணைப்பாளர் அஜ்மீர் குறிப்பிட்டார். (சி)

# நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு; அரசு மீது ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 21

நாட்டில் இன்று நீதி, சட்ட, ஒழுங்கு முறைகள் சீர்குலைக்கப்பட்டுள்ளன என்று ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அனுரகுமார திசாநாயக்க இந்த குற்றச்சாட்டைச் சுமத்தினார்.

தற்போதைய அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வாறான நடவடிக்கைகளைத் தமது கட்சி ஒருபோதும் அனுமதிக்காது எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

அண்மையில் கொலை செய்யப்பட்ட தமது கட்சியின் உறுப்பினர் நந்தன குணத்திலகவின் கொலை தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படாமை தமக்கு கவலையளிக்கிறது எனவும் அனுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டார்.

அத்துடன், தமது கட்சியை நோக்கிய இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (சி)

# இன்னும் 15 ஆயிரம் கோடி ரூபா கடன்பெறுவதற்கு அரசு திட்டமாம்!

## ஐ.தே.கட்சி தகவல்

கொழும்பு, ஏப்ரல் 20

நாலா பக்கங்களிலும் கடன்களில் சிக்கியுள்ள அரசு மீண்டும் 15 ஆயிரம் கோடி ரூபாவைக் கடனாகப் பெறுவதற்காக நாடாளுமன்றில் அனுமதியைப் கோரி நிற்கின்றது என்று ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

அக்கட்சியின் எம்.பி. ரவி கருணாநாயக்க இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அரசு வெளிநாடுகளில் இருந்து கடன்களைப் பெற்றே நாட்டின் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க முற்படுகிறது. இது நாட்டைக் காப்பாற்றும் தூர நோக்குக் கொண்ட பொருளாதாரத்திட்டமல்ல.

தேவை ஏற்படும் போது வெளிநாடுகளிடம் கடன்களைப் பெறுவதில் எந்த தப்புமில்லை. ஆனால், கடன்களை மாத்திரம் நம்பி நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவோ பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கவோ முடியாது.

அரசு அண்மையில் எச்.எஸ்.பி.சி. வங்கியிடம் கடன் பெற்றது. அந்தப் பணத்தைக் கொண்டு எந்தவிதமான அபிவிருத்திப் பணிகளும் செய்யப்படவில்லை.

சில வங்கிகளிடம் பெற்ற கடனை அடைப்பதற்குத்தான் எச்.எஸ்.பி.சி. கடன் தொகை பயன்படுத்தப்பட்டது.

இப்போது சர்வதேச நாணய நிதியத்திடம் 19 ஆயிரம் கோடி ரூபாவைக் கடனாகப் பெறுவதற்கு அரசு தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இந்தக் கடனைப் பெறுவதாகவிருந்தால் நாட்டுக்குப் பாதகமான பல நிபந்தனைகளுக்கு அரசு உடன்பட வேண்டியுள்ளது.

இது இவ்வாறிருக்க மீண்டும் 15 ஆயிரம் கோடி ரூபாவைக் கடனாகப் பெறுவதற்கு அரசு முயற்சி செய்கிறது. இதற்கான அனுமதியை அரசு நாடாளுமன்றில் கோரியுள்ளது -என்றார். (சி)

# வெலிக்கடை தமிழ்க் கைதிகளின் பிரச்சினைகள் குறித்து சி.ஐ.டி. அதிகாரிகளுடன் அமைச்சர் சந்திரசேகரன் பேச்சு

கொழும்பு, ஏப். 21

வெலிக்கடைச் சிறையில் அடிப்படை வசதிகளற்ற நிலையில் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வரும் தமிழ்க் கைதிகளின் பிரச்சினைகள் தொடர்பாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் சமூக அபிவிருத்தி மற்றும் அநீதி ஒழிப்பு அமைச்சருமான பெ.சந்திரசேகரன், இரகசியப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிசிர மென்டிஸ், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு இயக்குநர் என்.வாக்கிஸ்டர் ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர்.

இதுதொடர்பாக மலையக மக்கள் முன்னணி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

அமைச்சருடன், வாழ்க்கைத் தொழில் தொழில் நுட்ப பயிற்சிப் பிரதி அமைச்சர் பெ.இராதாகிருஸ்ணன், மலையக மக்கள் முன்னணியின் அமைப்பாளர் ஆர்.திவ்வியராஜன் ஆகியோரும் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தலைநகரக் கைதுகள், தடுத்து வைப்புகள், சில பொலிஸாரின் அதிகாரப் போக்குகள், பூஸா முகாம்களில் உள்ள நீண்டநாள் கைதிகள், அங்குள்ள சில வடபகுதிக் கைதிகளை பெற்றோர் பார்வையிடுவதற்கு கிராம சேவையாளர் கடிதம் பெறமுடியாமல் இருப்பது, கைதிகள், கைதுகள் தொடர்பாக உறவினர்களுக்கு அறிவிக்காமலிருப்பது, பல வருடங்களாக விசாரணைகளின்றித் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளின் நிலைமை குறித்து விரிவாக எடுத்துரைத்தனர்.

அத்துடன், சிறு விடயங்களுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களையும், அடையாள அட்டை பொலிஸ் பதிவு இல்லாமையால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களையும் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தப்பட்டது.

அத்துடன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளில் நூற்றுக் கணக்கானோர் வெலிக்கடைச் சிறைக்கு மாற்றப்பட்டமையைத் தொடர்ந்து அவர்களுக்குப் பெரும் கஷ்டங்களும் துன்பங்களும் ஏற்பட்டுள்ளன எனவும் இதர சக கைதிகளின் துன்புறுத்தலுக்கும், தாக்குதலுக்கும் அவர்கள் ஆளாகி வருகின்றமை வேதனையான விடயம் என்றும் அமைச்சர், பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் தெரிவித்தார்.

இவற்றுக்கு உரிய தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சிசிர மென்டிஸும், வாக்கிஸ்டரும் உறுதியளித்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழையால் டில்லிக்கு இலகு வெற்றி

கேப்டவுன், ஏப்.21

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் மழை குறுக் கிட்டதால் டில்லி அணி, பஞ்சாப் அணியை எளிதாக வென்றது.

2ஆவது ஐ.பி.எல். ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டி தென்னாபிரிக்காவில் கடந்த சனிக் கிழமை தொடங்கியது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகளும் மற்ற அணியுடன் தலா 2 முறை மோத வேண்டும். லீக் முடிவில் முதல் 4 இடங்களைப் பெறும் அணிகள் அரை இறு திக்கு தகுதி பெறும்.

போட்டியின் 2ஆவது நாளான நேற்றுமுன் தினம் கேப்டவுனில் நடந்த முதலாவது ஆட் டத்தில் டில்லி டேர்டெவில்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகள் மோதின. போட்டி தொடங் கும் முன்பே மழை கொட்ட ஆரம்பித்ததால் ஆட்டம் தாமதம் ஆனது. இதனால் ஆட்டம் 12 ஓவராகக் குறைக்கப்பட்டது.

நாணயச் சுழற்சியில் வென்ற டில்லி அணித் தலைவர் ஷேவாக் முதலில் பந்து வீச முடிவு செய்தார். இதன்படி ரவி போபராவும், கரன் கோயலும் பஞ்சாப் அணியின் இன் னிங்ஸை அதிரடியாக தொடங்கினார்கள். இளம் வீரர் 22 வயதான கரன் கோயலின் ஆட் டம் பிரமிப்பாக இருந்தது. யோமகேஷ் பந் தில் அவர் அடித்த ஒரு மெகா சிக்ஸர், மைதா னத்திற்கு வெளியே போய் விழுந்தது. போபரா வும் சிறப்பாக ஆடினார். பஞ்சாப் அணியின் ஓட்ட எண்ணிக்கையை கிடுகிடு வென உயர்த் திய இந்த ஜோடியை யோமகேஷ் பிரித்தார். அணியின் ஓட்டஎண்ணிக்கை 67 ஓட்டங் களை (6 ஓவர்) எட்டியபோது, கோயல் ஆட்ட மிழந்தார். அவர் 21 பந்தில் 3 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகளுடன் 38 ஓட்டங்களை விளாசினார்.

இதன் பின்னர் சுழற்பந்து வீச்சாளர் விற் றோரி பந்து வீச வந்ததும், பஞ்சாப் அணியின் ஓட்டவேகம் குறைந்தது. அவர்களை வெகு வாகக் கட்டுப்படுத்திய விற்றோரி தனது முதல் ஓவரில் ரவி போபராவை (22 ஓட்டம், 16 பந்து, 2 சிக்ஸர்கள்) எல்.பி.டபள்யூ. முறையில் கழற்றினார். முன்னதாக போபரா


அதிரடியாக விளையாடிய பஞ்சாப் வீரர் கோயலின் விக்கெட்டைக் கைப்பற்றிய விற்றோரியை டில்லி டேர்டெவில்ஸ் அணி வீரர்கள் பாராட்டுகின்றனர்.

19 மற்றும் 21 ஓட்டங்களில் முறையே பிடியெடுப்பிலிருந்து தப்பித்தும் அந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளத் தவறினார். இதேபோல் விற் றோரி தனது அடுத்த ஓவரில் சங்கக்கராவை யும் (8 ஓட்டங்கள்), 3ஆவது ஓவரில் ஜெய வர்த்தனாவையும் (6 ஓட்டங்கள்) காலி செய்தார். இதற்கிடையே பஞ்சாப் அணித் தலைவர் யுவராஜ்சிங் 16 ஓட்டங்களில் (11 பந்து, 2 சிக்ஸர்கள்) ரன்-அவுட் முறையில் பெவி லியன் திரும்பனார்.

நிர்ணயிக்கப்பட்ட 12 ஓவர்களில் பஞ்சாப் அணி 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 104 ஓட்டங் களை எடுத்தது. டில்லி அணியில் விற்றோரி 15 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக் கொடுத்து 3 விக் கெட்டுக்களை கைப் பற்றி அசத்தினார்.

தொடர்ந்து 105 ஓட் டங்கள் என்ற இலக்கை நோக்கி டில்லி வீரர்கள் கௌதம் கம்பீரும், அணித் தலைவர் ஷேவாக்கும் ஆரம்ப வீரர்களாகக் கள மிறங்கினார்கள். அவர் கள் 1.5 ஓவர்களில் விக் கெட் இழப்பன்றி 24 ஓட்டங்களை எடுத் திருந்த போது, மீண்டும் மழை குறுக்கிட்டது. இதனால் அரை மணிநேரம் பாதிக்கப்பட்டது. இதையடுத்து டக்வர்த்- லூவிஸ் விதி முறைப் படி டில்லி அணி 6 ஓவர்களில் 54 ஓட்டங் களை எடுக்கவேண்டும் என்று வெற்றி இலக்கு மாற்றியமைக்கப்பட் டது. அதாவது 25 பந்துகளில் மேற்கொண்டு 30 ஓட்டங்கள் மட்டுமே சேர்க்க வேண்டிய எளி தான நிலை ஏற்பட்டது. போட்டி அளிக்க கூடிய ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றிருந்த பஞ்சாப்புக்கு இது ஏமாற்றம் தருவதாக அமைந்தது.

இலக்குக் குறைந்ததால் குஷியான ஷேவாக் தனது அதிரடியை மேலும் தீவிரப்படுத்தி, பஞ்சாப் பந்துவீச்சாளர்களை நோகடித்தார். இறுதியில் அவர் பயுஷ் சாவ்லா பந்து வீச்சில் சிக்ஸர் அடித்து ஆட்டத்திற்கு முடிவு கட் டினார். டில்லி அணி 4.5 ஓவர்களில் விக்கெட் இழப்பன்றி 58 ஓட்டங்களை விளாசி 10 விக் கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றியை ருசித் தது. கம்பீர் 15 ஓட்டங்களுடனும் (13 பந்து, 2 பவுண்டரிகள்), ஷேவ்வாக் 38 ஓட்டங்களு டனும் (16 பந்து, 4 பவுண்டரிகள், 3 சிக்ஸர் கள்) ஆட்டம் இழக்காமல் இருந்தனர். விற்றோரி ஆட்ட நாயகன் விருது பெற்றார்.

முதலாவது ஐ.பி.எல். போட்டியில் 2 லீக் கிலும் பஞ்சாப்பிடம் தோற்றிருந்த டில்லி அதற்கு இப்போது பழிதீர்த்துக்கொண்டது. அடுத்த ஆட்டங்களில் டில்லி அணி சென்னை சூப்பர் கிங்ஸையும் (ஏப் 23ஆம் திகதி), பஞ் சாப் அணி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி யையும் (ஏப். 21ஆம் திகதி) எதிர்கொள் கின்றன.


நேற்றுமுன்தினம் நடந்த போட்டி களின்போது நடனமாடிய அழகிகள்..

# ஷாருக்கானின் கொல்கத்தா அணிக்கு முதல் போட்டியிலேயே பலத்த அடி!

## டெக்கான் சார்ஜர்ஸ் 8 விக்கெட்டுக்களால் வெற்றி

கேப்டவுன், ஏப்ரல் 21

ஐ.பி.எல். தொடரை கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி படுமோசமாகத் தொடங்கி யுள்ளது. போட்டியில் டெக்கான் சார்ஜர்ஸ் அணி யிடம் 8 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. கொல்கத்தா பயிற்சியாளர் ஜோன் புக்கனனின் சுழற்சி முறையில் தலை வர் முறைக்கு முதல் போட்டியிலேயே அடி விழுந்துள்ளது.

ஐ.பி.எல். இரண்டாவது ருவென்ரி 20 தொடரின் நேற்றுமுன்தினம் நடந்த போட்டி யில் கொலிவூட் நாயகன் ஷாருக்கானுக்கு சொந்தமான கொல்கத்தா நைட் டைரர்ஸ் அணி, டெக்கான் சார்ஜர்ஸ் அணியை சந்தித் தது. நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணியின் புதிய அணித் தலைவர் பிரண் டன் மக்கலம், துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

கொல்கத்தா அணி ஆரம்பத்திலேயே திண றியது. ஆர்.பி.சிங்கின் வேகத்தில் மக்கலம்(1) வீழ்ந்தார். ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் அடித்த கெய்ல்(10) விக்கெட்டையும் கைப்பற்றி அதிர்ச்சி மேல் அதிர்ச்சி கொடுத்தார் ஆர்.பி. சிங். அணித் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட விரக்தியில் இருந்த கங்குலி யும்(1) ஏமாற்றினார். ஓஜா சுழலில் ஆகாஷ் சோப்ரா(11), சுக்லா(8) என அணியின் விக் கெட்டுக்கள் அடுத்தடுத்து சரிந்தன. கொல் கத்தா அணி 5 விக்கெட்டுக் களை இழந்து 48 ஓட்டங்களை எடுத்துத் தத்தளித்தது. இதற்குப் பின் பராட் ஹொட்ஜ்(31) ஓரள வுக்கு தாக்குப்பிடித்து ஆடினார். இஷாந்த் சர்மா(9) உள்ளிட்ட சிறந்த வீரர்கள் ஆர்.பி.சிங் பந்து வீச்சில் வெளியேற, கொல் கத்தா அணி 19.4 ஓவரில் 101 ஓட்டங்களை எடுத்து சகல விக் கெட்டுக்களையும் இழந்தது.

எளிய இலக்கை விரட்டிய டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கு அணித் தலைவர் கில்கிறிஸ்ட் (13) ஏமாற்றினார். லக்ஷ் மன்(10) ரன்-அவுட் முறையில் வெளியேறினார். இந்த நிலை யில் கிப்ஸ், ரோகித் சர்மா இணைந்து அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றனர். டெக்கான் அணி 13.1 ஓவரில் 2 விக் கெட்டுக்களை இழந்து 104 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. கிப்ஸ் 43 ஓட் டங் கள் (5 பவுண்டரிகள், 1 சிக்ஸர்கள்), ரோகித் 36 ஓட்டங்கள் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள்) ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். அபாரமாகப் பந்துவீசி 4 விக்கெட்டுக்களை வீழ்த்திய ஆர்.பி.சிங் ஆட்டநாயகன் விரு தைத் தட்டிச்சென்றார்.


சிறந்த முறையில் பந்துவீசி விக்கெட்டுக்களை சரித்த ஆர்.பி. சிங்கை டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் தலைவர் கில்கிறிஸ்ட் கட்டித் தழுவுகிறார்.

# ஐ.பி.எல். துளிகள்

★நடப்பு சம்பயன் ராஜஸ்தான் அணியுட னான ஆட்டத்தில், பெங்களூர் வீரர் கும்ளே 3.1 ஓவரில் 5 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக் கெட் வீழ்த்தி அசத்தினார். ஐ.பி.எல். போட் டியில் இது 2ஆவது சிறப்பான பந்துவீச்சாக அமைந்தது. முன்னதாக, ஐ.பி.எல். முதலா வது தொடரில் ராஜஸ்தான் வீரர் சோகைல் தன்வீர் சென்னைக்கு எதிராக 14 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 6 விக்கெட்டுக்களை வீழ்த் தியுள்ளார்,

★ ஐ.பி.எல். தொடரில் 5 விக்கெட் வீழ்த் திய 4ஆவது வீரர் என்ற பெருமை கும்ப்ளே க்கு கிடைத்துள்ளது. முன்னதாக தன்வீர், அமித் மிஸ்ரா, பாலாஜி ஆகியோர் 5 விக்கெட் வீழ்த்தியுள்ளனர்.

★ சச்சின், ராவிட் இருவரும் ஐ.பி.எல். போட்டியில் முதல் முறையாக ஆட்டநாய கன் விருது பெற்றுள்ளனர்.

★ ராஜஸ்தான் ரோயல்ஸ் எடுத்த 58 ஓட் டங்களே (15.1 ஓவர்) ஐ.பி.எல். தொடரின் குறைந்தபட்ச ஓட்டஎண்ணிக்கை. முன் னதாக, மும்பை அணியிடம் கொல்கத்தா 67 ஓட் டங்களுடன் சுருண்டுடது (2008).

★ சென்னை அணியுடன் 3 முறை மோதி யுள்ள மும்பை 2 முறை வெற்றி கண்டுள்ளது.

★ சென்னை வீரர் பார்த்திவ் பட்டேல் 2ஆவது முறையாக ஓட்டம் எதுவும் எடுக்கா மல் ஆட்டமிழந்துள்ளார். மும்பை அணியு டனான ஆட்டத்தில் 2ஆவது பந்திலும், கடந்த ஆண்டு ஜெய்ப்பூரில் ராஜஸ்தான் அணியுடன் நடந்த ஆட்டத்தில் முதல் பந்தி லும் அவர். ஓட்டம் எதையும் சேர்க்காமல் வெளியேறியுள்ளார்.

## இலங்கையில் போரை நிறுத்தக்கோரி தமிழகத்தில்

# உண்ணாவிரதமிருக்கும் பெண்களில் ஐவரின் உடல் நிலை பாதிப்பு; ஒருவர் நிலை கவலைக்கிடம்

கொழும்பு, ஏப்ரல், 21

இலங்கையில் போர் நிறுத்தத்தை வலி யுறுத்தி, சென்னையில் பெண்கள் நடத்தும் உண்ணாவிரதப் போராட்டம் நேற்று 9 ஆவது நாளாக நடைபெற்றது. இதில் 5 பெண் களின் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் ஒருவர் கவலைக்கிடமான நிலை யில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இலங்கையில் இனப்படுகொலை செய் யப்படும் அப்பாவித் தமிழர்களைக் காக்க கோரியும், அங்கு போர் நிறுத்தம் செய்வதற்கு அகில இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என் பதை வலியுறுத்தியும் பல்வேறு அமைப்பு களுடன் இணைந்து பெண்கள் போராடி வரு கின்றனர்.

இந்நிலையில், பெண்கள் அமைப்புகள் ஒன்றிணைந்து கடந்த 13 ஆம் திகதி தமி ழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து 100 இற்கும் மேற்பட்ட பெண்கள் சென்னை வந்தனர். அவர்கள் இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி, இலங்கைத் தமிழர் களுக்காக தீக்குளித்து இறந்த முத்துகுமாரின் உடல் வைக்கப்பட்டிருந்த கொளத்தூரில் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கினர்.

ஆனால், அவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்திற்குப் பொலிஸார் அனுமதி மறுத்தனர். இதைத் தொடர்ந்து ... தலைமை அலுவலகத்தில் கடந்த 15 ஆம் திகதியில் இருந்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

தொடர்ந்து 9ஆவது நாளாக அவர்களின் போராட் டம் நடைபெற்று வருகிறது. இதில் பெரும்பாலான பெண்கள் சோர்வடைந்து விட்டனர். கடந்த சில நாள்களுக்கு முன் உண்ணாவிரதம் இருந்து வரும் பெண்களில் சென்னையைச் சேர்ந்த கவிதா (வயது 30), தேனியைச் சேர்ந்த சித்திரா (வயது 40), காஞ்சிபுரத்தைச் சேர்ந்த சசிகலா (வயது 30)


உடல்நிலை பாதிக்கப்பட்ட பெண் ஒருவரை வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றபோது...

ஆகிய மூன்று பேரின் உடல் நிலையும் பாதிக் கப்பட்டது. தொடர்ந்து மதுரையைச் சேர்ந்த பழனியம்மாள், ஜெயமணி, மேகனா, செல்வி ஆகியோரின் உடல்நிலை திடீரென்று பாதிக்கப்பட்டது.

இவர்களில் ஜெயமணி என்ற பெண் ணுக்கு மயக்கம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அவரை அங்கிருந்தவர்கள் அம் புலன்ஸ் மூலம் அரச வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். அவருக்கு அங்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஜெயமணி மயக்கம் தெளிந்தவுடன் சாப்பிடுவ தற்கு மாத்திரை மருந்து கொடுத்துள் ளனர். அதனைச் சாப்பிட மறுத்துள்ளார். எனக்கு எது வும் வேண்டாம் என்றும் இதை யெல்லாம் போட் டால் நான் உண்ணாவிரதம் இருப்பதில் அர்த்தம் இல்லை என்றும் கூறி யுள்ளார்.

இலங்கைப் பிரச்சினைக்கு அரசு நல்ல முடிவு எடுக்கும் வரை எதையும் சாப்பிடப் போவதில்லை என வைத்தியசாலையிலேயே உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

உண்ணாவிரதப் போராட்டத்தை எப் போது முடிவுக்கு கொண்டு வருவீர்கள் என்று பெண்கள் அமைப்பிடம் கேட்டபோது, "இலங் கையில் போர் நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் என்று சோனியா காந்தி வாக்கு கொடுக்கும் வரை எங்கள் போராட்டம் ஓயாது. குறைந் தபட்சம் உள்துறை அமைச்சர் ப.சிதம்பர மாவது எங்களுக்கு வாக்கு கொடுக்க வேண் டும்" என்றார்.

இது தொடர்பாக பா.ம.க. நிறுவனர் டாக் டர் ராமதாஸ் நேற்றுமுன்தினம் வெளி யிட்டுள்ள அறிக்கையில் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள பெண்கள் கூட்டமைப் பினர் இத்துடன் தங்களது உண்ணாவிரதப் போராட்டத்தை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னித் தமிழர் மீது கொத்துக்குண்டு வீச்சு; கண்டும் காணாமலும் இருக்கிறது இந்தியா

## குற்றஞ்சாட்டுகிறார் வைகோ

சென்னை, ஏப். 21

இலங்கையில் உச்சக்கட்டப் போர் நடக்கிறது. நம்மு டைய தமிழர்கள் மூன்றரை லட்சம் பேர் சுற்றிவளைக் கப்பட்டுள்ளனர். தடை செய்யப் பட்ட கொத்துக் குண்டுகள் வீசப்படுகின்றன. இந்திய அரசு இதையெல்லாம் கண்டும் காணாமல் பார்த்துக்கொண்டிருக்கிறது - என்று ம.தி.முக. பொதுச்செயலர் வைகோ தெரிவித்துள்ளார்.

ம.தி.மு.க. தேர்தல் நிதியளிப்புக் கூட்டம் அமைந்தகரையில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

இலங்கையில் உச்சக்கட்டப் போர் நடக்கிறது. நம்முடைய தமிழர்கள் மூன்றரை லட்சம் பேர் சுற்றிவளைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீது தடை செய்யப்பட்ட குண்டுகள் வீசப்படு கின்றன. தாயின் வயிற்றில் இருக்கும் சிசுக்கள் கொடூரமாகக் கொல்லப்படுகின்றன. இதை யெல்லாம் கண்டும் காணாமல் இந்திய அரசு பாரத்துக் கொண்டிருக்கிறது.

தமிழர்களைக் கொல்ல இந்தக் குண்டுகளை இந்திய அரசுதான் கொடுத்திருக்கிறது என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன். பிரபாகரனை பிடித்தால் இரத்த ஆறு ஓடும் என்று நான் பேசினேன் என்று வழக்குப் பதிவு செய்கிறார் கள். இதை நான் மறுக்கவில்லை. நான் மரணத்திற்குபயப்படவில்லை.

இலங்கைத் தமிழர் மீது அக்கறை இருந்தால் ஏன் போரை நிறுத்த சொல்லவில்லை. இலங்கை அரசு மீது ஏன் பொருளாதாரத் தடை விதிப்போம் என்று சொல்லவில்லை. இலங் கைக்கு உதவ மாட்டோம் என்று ஏன் இந்தியா சொல்லவில்லை.

பிரபாகரன் போரில் இறந்து போனால் வருத்தப்படுவேன் என்று கருணாநிதி சொல்கிறார். அவர் சாகடிக்கப்பட வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா? அவர் சாக மாட்டார்.

தனி ஈழம் அமைக்க பாடுபடுவோம் என்று அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கூறப் பட்டுள்ளது. இது மகிழ்ச்சியாக இருக்கிறது. ஜெயலலிதா ஒரு முடிவு எடுத்தால் அதில் உறுதியாக இருப்பார். அவர் ஒருவேளை இந் தியாவின் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவருக்கு நாங்கள் ஆதரவு தெரிவிப்போம் - என்றார்.

# பிரபா பற்றி கலைஞர் கூறியது அவரது சொந்தக் கருத்து

## காங்கிரஸ் சொல்கிறது

புதுடில்லி, ஏப்.21

பிரபாகரன் பற்றி கருணாநிதி கூறியவை அவரது சொந்தக் கருத்துகள் - என்று காங்கிரஸ் கட்சி கூறியுள்ளது.

முதல்வர் கருணா நிதி தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில், விடுதலைப்புலிகள் இயக்க தலைவர் பிரபா கரன் தனக்கு நல்ல நண்பர் என்றும், அவரை தான் தீவிரவாதியாக பார்க்கவில்லை என்றும் கூறியிருந்தார். இதுபற்றி காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் கபில் சிபலிடம் செய்தியாளர்கள் கருத்துக் கேட்டனர்.

அதற்கு அவர் பதில் அளிக்கையில் -

கருணாநிதி கூறியவை அவரது சொந்தக் கருத்துகள். ஆனால் நாங்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தீவிரவாத இயக்கமாகவும் அந்த இயக்கத்தில் உள்ளவர்களை தீவிரவாதிகளாகவும்தான் கருதுகிறோம் - என்றார்.

பிரபாகரன் பிடிபட்டால் அவரை இலங்கை அரசு எங்களிடம் ஒப்படைக்கும் எனக் கருதுகிறோம் என்றும் கபில் சிபல் தெரிவித்தார். மற்றொரு செய்தித் தொடர்பாளரான அபிஷேக் சிங்வி கூறுகையில் -

தமிழ்நாட்டில் எங்களுக்கு மதிப்புமிக்க கூட்டணி கட்சியாக தி.மு.க. உள்ளது. அதற்காக எங்கள் கொள்கையை (விடுதலைப் புலிகள் பற்றிய கொள்கையை) மாற்றிக் கொள்ள வேண்டும் என்று அர்த்தம் அல்ல - என்றார்.

# இந்தியச் செய்திகள்

# ஈழத் தமிழர்கள் படுகொலையை சித்திரிக்கும் பாதாகைக்குத் தடை

## மன்சூர் அலிகான், பொலிஸாருடன் வாக்குவாதம்

திருச்சி, ஏப். 21

திருச்சித் தொகுதி லட்சிய தி.மு.க. வேட்பாளர் நடிகர் மன்சூர் அலிகானின் தேர்தல் பிரசார வாகனத்தில் இருந்த, ஈழத் தமிழர்கள் படுகொலையை சித்திரிக்கும் பதாகைக்கு பொலிஸார் தடை விதித்தனர்.

திருச்சி தொகுதியில் லட்சிய தி.மு.க. சார்பில் நடிகர் மன்சூர் அலிகான் போட்டியிடுகிறார். இவர் திருச்சியில் தங்கி இருந்து கடந்த 4 நாள்களாக, தனது ஆதரவாளர்களுடன் பிரசாரம் செய்து வருகிறார். அவரது பிரசார வாகனத்தில் இலங்கையில் குண்டுவீசி கொல்லப்பட்ட அப்பாவித் தமிழர்களின் உடல்கள் சிதறிக் கிடக்கும் புகைப்படங்கள் அடங்கிய பதாகை வைக்கப்பட்டிருந்தது.

இது தேர்தல் விதிமுறைக்கு எதிரானது. ஆகவே, இந்தப் பதாகைகளை அகற்ற வேண்டும் என்று மன்சூர் அலிகானிடம், அவர் திருச்சியில் தங்கியிருந்த ஹோட்டலுக்கு நேற்றுமுன்தினம் சென்று பொலிஸார் கூறினர்.

இதை அறிந்த மன்சூர் அலிகானின் ஆதரவாளர்கள் மன்சூர் அலிகான் தங்கியிருந்த ஹோட்டல் முன்பு திரண்டனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. அப்போது அங்கு வந்த பொலிஸாருடன், மன்சூர் அலிகான் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அவர்கள் தேர்தல் கமிஷன் விதிமுறைக்கு எதிராக உள்ள இந்தப் பதாகையை அகற்ற வேண்டும் இல்லையென்றால் சட்டப்படி நடவடிக்கை எடுப்போம் என்று கூறினர்.

இதையடுத்து அந்த பதாகை பிரசார வாகனத்தில் இருந்து முற்றிலும் அகற்றப்பட்டது.

# பிரபாகரன் தீவிரவாதி அல்லரென கூறவில்லை என்கிறார் கலைஞர்!

சென்னை, ஏப். 21

விடுதலைப் புலிக ளின் தலைவர் பிரபாகரன் தீவிரவாதி அல்லர் எனச் சொன்னேன் என்று தொலைக்காட்சி ஒன்று தவறாகச் செய்தி வெளியிட்டுள்ளது - என்று மு.கருணாநிதி நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

புலிகள் தலைவர் பிரபாகரன் தீவிரவாதி அல்லர்; என் நண்பர் என்று முதல்வர் சொன் னார் என என்.டி. ரி.வி. ஆங்கில செய்திச் சேவை நேற்றுமுன்தினம் செய்தி வெளியிட்டது.

இதுகுறித்து காங்கிரஸார் அது கருணாநிதியின் தனிப்பட்ட கருத்து என்று தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். இலங்கை அரசோ, கருணாநிதி எமது நண்பர். அவர் பிரபாகரனை தன் நண்பர் என்று விட்டாரே என்று கவலை தெரிவித்திருந் தது.

பிரபாகரனை தீவிரவாதியாக தான் பார்க்கவில்லை என்று கலைஞர் சொன்னதில் ஈழ ஆதரவாளர்கள் மகிழ்ந்திருந்திருந்தனர். தேர்தல் நேரம் என்பதால் கலைஞர் இப்படிப் பேசியிருக்கிறார் என்றும் விமர்சனம் எழுந்தது. இந்நிலையில் கருணாநிதி-

ஆங்கிலத் தொலைக்காட்சியில் நேற்று முன்தினம் வெளியான செய்தி தவறானது. நான் சொன்ன கருத்தை மாற்றி வெளியிட்டு விட்டது. என்.டி. ரி.வி எப்போதுமே தி.மு.க விற்கு எதிராகத்தான் செயற்படுகிறது - என்று விளக்கமளித்துள்ளார்.

மேலும், இலங்கையில் போர் நிறுத்தம் செய்யக் கோருவீர்களா என்று கேட்டதற்கு -

போர் முடியும் வரை போரை நிறுத்தக் கூறிக் கொண்டே இருப்போம் - என்றார்.

# உண்ணாவிரதமிருப்போர் உயிரை ... நிலை; தி.மு.க. அரசு இரங்காமை கண்டனத்துக்குரிது

## டாக்டர் ராமதாஸ் கடும் சீற்றம்



சென்னை, ஏப். 21

இலங்கைத் தமிழர்களுக்காக 7 நாட்களாகத் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து வரும் பெண் களின் உடல் நிலை மிகவும் கவலைக்கிடமாகி உள்ளநிலைமையிலும் தி.மு.க. அரசு இரக்கமின்றி அசைந்து கொடுக்காமல் இருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது - என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் சீற்றமடைந்துள்ளார். இதுகுறித்து ஞாயிற்றுக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட் டிருப்பவை வருமாறு -

இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையை இந்திய அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி சென்னையில் பெண்கள் கூட்டமைப்பினர் கடந்த 7 நாட்களாக உண்ணாவிரதம் மேற் கொண்டு வருகின்றனர். அவர்களில் திருச்சி யைச் சேர்ந்த ஜெயமணியின் உடல்நிலை மோசமடைந்து அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். அங்கேயும் அவர் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து வருகி றார். மேலும் சிலரின் உடல்நிலை மோசமடைந்து வருகிறது எனக் கூறப்படுகிறது.

உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. இதற் காக இங்குள்ள தமிழர்கள் தங்களை வருத்திக் கொள்வதும், அதற்காக உயிர் துறப்பதும் வருத்தம் தரும் நிகழ்வுகளாகும்.

இதனை இலங்கைத் தமிழர்களே விரும்ப மாட்டார்கள். எனவே, உண்ணா விரதம் மேற்கொண்டுள்ள பெண்கள் கூட் டமைப்பினர் இத்துடன் உண்ணாவிரதப் போராட்டத்தை விலக்கிக் கொள்ள வேண்டும். சிலரது உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாகி உள்ள நிலைமையிலும் தி.மு.க. அரசு இரக்கமின்றி அசைந்து கொடுக்காமல் இருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது - என்றார்.

# வாக்குப்பதிவில் நக்ஸல்களின் சதியை முறியடிக்க விமானம் மூலம் நோட்டம்!

புதுடில்லி, ஏப். 21

மக்களவைக்கு நடந்த முதல் கட்டத் தேர் தலில் நக்ஸலைட்களின் தாக்குதலில் 5 தேர்தல் அதிகாரிகள், 24 பொலிஸார் பலியானார்கள். இதையடுத்து நக்ஸலைட்களின் சதியை முறியடிக்க, விமானம் மூலம் கண்காணிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

மக்களவைக்கு 16ஆம் திகதி முதல் கட்ட தேர்தல் நடந்தது. அப்போது, பீகார், சட்டீஸ்கர், ஜார்க்கண்ட், ஒரிசா ஆகிய 4 மாநிலங்களில் மாவோ இயக்கத்தைச் சேர்ந்த நக்ஸலைட்கள் பயங்கரத் தாக்குதல் நடத்தினர். இதில், 5 தேர்தல் அதிகாரிகள், 24 பாதுகாப்பு படையினர் கொல்லப்பட்டனர். நக்ஸலைட் கள் நடமாட்டம் உள்ள பகுதிகளில் பாது காப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. அதையும் மீறி தாக்குதல் நடந்தமை மத்திய உள்துறை அமைச்சகத்தை அதிர்ச்சியடையச் செய்துள் ளது.

இது குறித்து உள்துறை அதிகாரிகள் அவசர ஆலோசனை நடத்தினர். அப போது, தாக்குதலுக்கான காரணம் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. நக்ஸலைட்களின் நடமாட்டம், அவர்களது திட்டம் குறித்து பொலிஸாருக்குச் சரியான உளவுத் தகவல் கிடைக்காததால் இந்த அளவுக்கு உயிர் சேதம் ஏற்பட்டமை தெரியவந்தது. பொலிஸார் எந்த வழியாக வருவார்கள் - செல்வார்கள், எத்தனை பேர் இருப்பார்கள் என்ற விவரங்கள் நக்ஸலைட் களுக்குத் தெரிந்துவிடுகிறது எனக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதனால், நக்ஸலைட்கள் நடமாட்டம் குறித்து தகவல் கொடுக்க தனி உளவுப் படை ஒன்றை அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. அவசரகாலங்களில் விமானப் படை ஹெலிக் கொப்டர்கள் உதவியுடன் பொலிஸாரை மீட்கவும் கூட்டத்தில் முடிவு செய்யபபட்டது.

ஒரே நேரத்தில் ஏராளமான தீவிரவாதிகள் நான்கு திசைகளில் இருந்தும் சுற்றி வளைத்து பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியமை அதிகாரிகளை அதிர்ச்சிக் குள்ளாக்கியுள்ளது.

இதனால், நக்ஸல்களின் தாக்குதல் அபாயம் உள்ள இடங்களில் பொலிஸார் எண் ணிக்கையை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டது. தேர்தலைச் சீர்குலைக்கும் நோக்கில் தாக்குதலில் ஈடுபடும் நக்சலைட்களைக் கண்டுபிடித்து ஒடுக்க விமானங்கள் மூலம் கண்காணிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கச்சதீவில் மீன்பிடிக்கும் உரிமையை மீட்டெடுத்துத்தர வலியுறுத்துவோம்

## அமைச்சர் ப.சிதம்பரம் பேட்டி



மானாமதுரை, ஏப்.21

கச்சதீவில் மீன் பிடிக்கும் உரிமையைப் பெற்றுத்தர வலியுறுத்துவோம் - என்று மத்திய உள்துறைஅமைச்சர் ப.சிதம்பரம் கூறியுள்ளார்.

சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளரான மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் நேற்றுமுன்தினம் மானாமதுரை ஒன்றியத்தில் வாக்குச் சேகரித்து சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

கச்சதீவை மீட்போம் என ஜெயலலிதா தேர்தல் பிரசாரத்தில் கூறிவருகிறாரே எனக் கேட்டதற்கு அவர் கூறியவை வருமாறு -

கச்சதீவு குறித்து இந்தியா இலங்கை இடையே உடன்பாடு செய்யப்பட்டுள்ளது. வழிபாட்டு தலமாகவும், நம் மீனவர்கள் மீன் பிடிக்கவும், நம் உரிமைகளை பாதுகாக்கவும், மீன்பிடிக்க அனுமதி பெற்று தரவும் வலியுறுத்துவோம். இது எங்களின் கொள்கை. ஆனால் கச்சதீவை மீட்போம், கைப்பற்றுவோம் எனக் கூறுவது எந்தவித பயனும் தராது. தொடர்ந்து நமது உரிமைகளைப் பாதுகாக்க வலியுறுத்துவோம் - என்றார்.

பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் சுவிஸ் வங்கியிலுள்ள இந்தியர் களின் கறுப்புப் பணத்தை மீட்போம் என அத்வானி கூறுவது குறித்துக் கேட்டபோது -

முன்பு பா.ஜ. க. ஆட்சியில் இருந்த போது சுவிஸ் வங்கியில் கறுப்பு பணம் இருந்தமை அவர்களுக்குத் தெரியாதா? அவர்கள் ஆட்சியில் நிதி அமைச்சர் இல்லையா? இதுபற்றி 2008ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஜேர்மன் பத்திரிகையில் வந்த போது, ஜேர்மன் அரசுக்கு நாங்கள் கடிதம் எழுதினோம். அதில் சுவிஸ் வங்கியில் உள்ள ரகசிய வணிக ஒப்பந்தத்தைப் பகிரங்கமாக தெரிவிக்க வேண்டும் என வலியுறுத் தினோம். ஆனால் பா.ஜ.கவினர் 5 ஆண்டுகள் காலம் முடிந்த நிலையில் தேர்தல் வரும் நேரத்தில், இதைப் பயன்படுத்துகிறார்கள். இது அவர்களுக்கு வெற்றியைத் தராது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேற்றைய தாக்குதல்களில் பலியானோரின் சடலங்கள் ஆங்காங்கே சிதறுண்டு கிடப்பதைப் படங்களில் காணலாம்.

# புதுமாத்தளன் வைத்தியசாலை செயலிழப்பு

கொழும்பு, ஏப்.21

முல்லைத்தீவு பகுதியில் உள்ள பாது காப்பு வலயத்தின் புதுமாத்தளன் வைத்தியசாலையை அண்மித்த பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 11.30 மணியிலிருந்து இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கடும் மோதல்களையடுத்து, அந்த வைத்தியசாலை செயலிழந்துள்ளது என அங்குள்ள வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இரு தரப்பினருக்கும் இடையிலான கடும் மோதல்களையடுத்து, வைத்திய சாலையும் பாதிக்கப்பட்டது எனவும், இதனால் அங்கு சிகிச்சை பெற்று வந்தவர்கள் பலரும் பாதுகாப் பான இடங்களைத் தேடி ஓடியதுடன், அங்கு கடமையிலிருந்த வைத்தியர்கள், ஊழியர்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிலர் பாதுகாப்பு வலயத்தின் உள்ளே சென்றுள்ள அதேவேளை, பலர் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இடம் பெயர்ந்து வந்த மக்களுடன் சேர்ந்து சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வைத்தியசாலையில் பணியாற்றி வந்த முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த முக்கிய சுகாதாரத்துறை அதிகாரிகள் வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால், அம்பலவன்பொக்கணை ஆகிய பகுதிகளில் வெளிநோயாளர் பிரிவுகள் இயங்கிவந்த நிலையங்களுக்குச் சென்று, அங்கு பணியாற்றுகின்றனர் எனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# வவுனியாவில் நேற்றிரவு டாக்டர் சுட்டுக் கொலை!

வவுனியா, ஏப்.21

வவுனியா பொது வைத்தியசாலையின் பெண் நோயியல் நிபுணராகிய டாக்டர் மீரா மொகிதீன் நேற்று இரவு 7 மணியளவில் தோணிக்கல் தனியார் வைத்தியசாலைக்கு அருகில் வைத்து இனந்தெரியாதவர்களினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட அவர், அங்கு மரணமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா வைத்தியசாலையில் நீண்ட காலம் பணியாற்றி வந்த டாக்டர் மீரா மொகிதீன் வவுனியா பட்டாணிச்சூர் புளியங்குளத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர்.

வைத்திய நிபுணர் டாக்டர் மீரா மொகிதீன் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் அரச வைத்தியர்கள் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சூட்டுச் சம்பவத்தையடுத்து, வவுனியா நகரப்பகுதியில் படையினர் தீவிர சோதனை நடவடிக்கைகளை மேற் கொண்டனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

# ஜே.வி.பி. உறுப்பினரின் கொலையைக் கண்டித்து அக்கட்சி எம்.பிக்கள் சபையில் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, ஏப்.21

ஜே.வி.பியின் உறுப்பினர் நந்தன பாலகே சுட்டுக்கொல்லப்பட்டமைக்கும் கொலையாளிகளை அரசு இன்னும் கைது செய்யாமைக்கும் எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி. எம்.பிக்கள் நேற்று நாடாளு மன்றில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது ஜே.வி. பியினருக்கும் அமைச்சர்களுக்கு மிடையில் கைகலப்பும் ஏற்பட்டது. இதனால் சபை அல்லோலகல்லோலப்பட்டது. சபை நடவடிக்கை சபாநாயகரால் 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஜே.வி.பி. உறுப்பினர் நந்தன பாலகேயின் கொலை தொடர்பாக ஜே.வி. பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுர திஸாநாயக்க சபையில் விசேட கூற்று ஒன்றை வெளியிட்டு உரையாற்றினார்.

அவரது கூற்றுக்கு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க பதிலளித்தார். அவரது பதிலில் திருப்தியடையாத ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் அநுர திஸாநாயக்க மீண்டும் எழுந்து உரையாற்றினார்.

இதைத் தொடர்ந்து ஜே.வி.பி. எம்.பிக்கள் பதாகைகளை ஏந்தியவாறு ஆசனங்களில் இருந்து எழுந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிறகு சபாநாயகரின் முன்பாக வந்து நின்று கோஷங்களை எழுப்பியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ''நந்தன பாலகே சகோதரனைக் கொலை செய்து 15 நாள்கள் ஆகிவிட்டன. கொலையாளிகள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். அவர்களை அரசு உடன் கைது செய்ய வேண்டும்'' என்று அவர்கள் ஏந்தியிருந்த பதாகைகளில் எழுதியிருந்தன.

அந்த நேரத்தில் அமைச்சர்கள் மேர்வின் சில்வா, றோஹித அபய குணவர்தன மற்றும் லலித் திஸாநாயக்க எம்.பி. ஆகியோரும் இன்னும் பல அமைச்சர்களும் முன்வரிசைக்கு வந்து ஜே.வி. பியினருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

அதேவேளை, ஜே.வி.பியில் இருந்து பிரிந்து சென்று அரசுடன் இணைந்துள்ள விமல் வீரவன்ஸவின் கட்சியைச் சேர்ந்த அச்சல ஜாகொட எம்.பியும் ஜே.வி. பியினருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டார்.

இதனால் ஜே.வி.பியினர் அவர்மீது பாய்ந்தனர். மேர்வின் சில்வா உள்ளிட்ட அமைச்சர்களுக்கிடையில் புகுந்து ஜே.வி. பியினருடன் கைகலப்பில் ஈடு படத் தொடங்கினர்.

ஜே.வி.பி. எம்.பிக்கள் ஜயந்த வீரசேகர மற்றும் சந்திரசேன விஜயசிங்க உள்ளிட்ட ஜே.வி.பி. எம்.பிக்கள் இந்தக் கைகலப்பில் ஈடுபட்டனர்.

அமைச்சர் தினேஷ் குணவர்தனவும் சில ஜே.வி.பி. எம்.பிக்களும் அந்தச் சண்டையை விலக்கிவிட்டனர். ஆர்ப்பாட்டம் தொடர்ந்து இடம்பெற்றது.

அப்போது அமைச்சர் மேர்வின் சில்வா ஜே.வி.பியினருடன் மீண்டும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டார். அதனால் ஜே.வி.பி. எம்.பி. ஜயந்த வீரசேகர மேர்வின் சில்வாவின் சட்டையைப் பிடித்துத் தாக்கினார்.

அமைச்சர்கள் சிலரும் ஜே.வி.பியினரில் சிலரும் அந்தக் கைகலப்பை விலக்கிவிட்டனர். தொடர்ந்தும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இச்சந்தர்ப்பத்தில் சபை 10.47 மணியளவில் சபாநாயகரால் 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

10.55 மணிளவில் ஜே.வி. பியினர் ஆர்ப்பாட்டத்தை முடித்துக் கொண்டு அவர்களின் ஆசனங்களில் போய் அமர்ந்து கொண்டனர். 11.40 மணியளவில் சபை மீண்டும் கூட்டப்பட்டது. அப்போது இது தொடர்பாகப் பேசுவதற்கு ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுர திஸாநாயக்கவுக்கு சபா நாயகரால் 5 நிமிடங்கள் வழங்கப்பட்டன.

(சி)

## நேற்றைய தாக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இழந்துள் ளனர்.

காயப்பட்டோரில் 800 இற்கும் மேற்பட்டவர்கள் போதிய மருத்துவ வசதி இன்றி சம்பவ இடத்தில் மரணமாகி உள்ளனர் - என்றார்.

இதேவேளை-

மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகளான மாத்தளன், அம்பலவன்பொக்கணை பகுதிகளை நோக்கி சிறிலங்கா படையினர் நேற்று திங்கட்கிழமை அதிகாலை கனரக ஆயுதங்களின் சூட்டாதரவுடன் பாரிய படை நடவடிக்கையினை தொடங்கினர்-

பாதுகாப்பு வலயப் பகுதிகளில் இருந்து வெளியேறிச் சென்று நேற்று நாள் தம்மிடம் தஞ்சம் அடைந்த மக்களை பணயக் கைதிகளாக முன்னிறுத்தி, நேற்று அதிகாலை அளவில், அம்பலவன் பொக் கணை பகுதி ஊடாக படையினர் பாரிய முன்நகர்வினை மேற் கொண்டனர்- என்று இணையத்தளங்கள் தகவல் தெரிவித்தன.


**A/L 2011**
**கலை, வர்த்தகம்**

TA: திரு. குழந்தை
LO: திரு.கமல்
H.C: திரு.ஜெயக்குமார்
P.Sc: திரு.ஸ்ரீரங்கநாதன்
Ge: திரு.கரன்
Dra: திரு.மயூரன்
Ec: திரு.சண்
Bst: திரு.யசோ
ACC: திரு.தவா

ஆரம்பம்:-
25.04.2009 சனி மதியம்

'தனிப்பட்ட அனுமதி உண்டு
' இம்மாதக்கட்டணம் இல்லை.

யூனிவேர்சல்
(யா.இந்து மகளிர் கல்லூரி அருகே)


## பாதுகாப்பு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்களைப் படையினர் விடுவித்துள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

திங்கட்கிழமை அதிகாலை பாதுகாப்பு வலயத்தின் மேற்குப் பகுதியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் 3 கிலோ மீற்றர் நீளமான மண் அணையைப் படையினர் கைப்பற்றியபின்னரே பொதுமக்களை மீட்பதற்கான நடவடிக்கை தீர்க்கமான கட்டத்தை அடைந்தது எனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

இப்பகுதியைக் கைப்பற்றியதன் மூலம் பாதுகாப்பு வலயத்திற்குள் சிக்கியிருந்த மக்கள் வருவதற்கான பாதையைத் திறக்க முடிந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பொதுமக்கள் வெளியேறும்போது அவர்கள் மீது விடுதலைப்புலிகள் நடத்திய மூன்று தற்கொலைக் குண்டுத் தாக்கு தல்களில் 17 பேர் பலியாகியுள்ளதாக இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

புதுமாத்தளன், அம்பலவன் பொக்கணைப் பகுதிகள் முற்றாக விடுவிக்கப்பட்டுள்ளன. வலைஞர்மடம் உட்பட்ட பகுதிகளிலிருந்து அனைத்து மக்களும் மீட்கப்பட்டுள்ளனர்-என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வன்னியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு அழைத்து வரப்படவிருப்பதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களைத் தங்கவைக்கவும் அவர்களுக்கு உணவு வழங்கவும் தேவையான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் செய்யப்பட்டுள்ளன.

அதிகமானோர் வரும் பட்சத்தில் தேவைப்படின் அவர்களைத் தங்கவைக்க பாடசாலைகள் பயன்படுத்தப்படும்.

வந்து சேரும் மக்களின் எண்ணிக்கையைப் பொறுத்து உடனுக்குடன் ஏற்பாடுகளை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்றார் அவர். (அ-1)


**Brown & Co.Ltd**
**வாடிக்கையாளர்களுக்கு முக்கிய அறிவித்தல்**

எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கு,
இதுவரைகாலமும் 89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். எனும் முகவரியில் இயங்கி வந்த எமது பிறவுண் அன் கம்பனி கிளை 20.04.2009 முதல் 62/16, ஸ்ரான்லி வீதி, (கொமர்ஷல் வங்கி அருகாமை) எனும் முகவரியில் இயங்குகிறது என்பதை அன்புடன் அறியத்தருகிறோம்.

அன்பான உங்கள் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்.

தொடர்புகளுக்கு:- 021 222 4040

முகாமையாளர்.

**O/L DAY CLASS**
ஆரம்பம்:-
24.04.2009 வெள்ளி 8.30am
யூனிவேர்சல்
யாழ்.இந்து மகளிர் கல்லூரி அருகில்

**பிரத்தியேக வகுப்பு**
**A/L 2011 ஆரம்பம் - 25.04.2009**
அளவையியல் – ந.தீபன்
வரலாறு – பி.ஜான்ஸி
தொடர்புகளுக்கு:-
இல.68, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச் சந்தி)
தொ.பே:- 021 222 9550

**தொழிற்பயிற்சிகள்**
★ Mobile Phone repairing
Hard ware Phone Lock
Soft ware Hard ware Repairing (காலம் 2மாதம்)
★ றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்
றேடியோ, வீடியோடெக், DVD Player
ரெலிவிசன், CD Player, Amplifier
திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்
★ ஏயர் கொன்டிசனிங்
சகல குளிர்சாதனங்களும் திருத்தப்படும் முறைகள் ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
புதிய பயிற்சிகள் ஆரம்பம்:- 25.04.2009 சனி 10am.
குறிப்பு:- தொழில் புரிவோர்களுக்காக இம்முறை சனி,ஞாயிறு பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும். ஏற்கனவே விண்ணப்பித்தவர்களும் தொடர்பு கொள்ளவும்.
JAFFNA TECHNICAL INSTITUTE
இல.45, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோவில்,முன் வீதி) யாழ்ப்பாணம் ☎ 021 222 6456
NEW ASIAN CENTER (வர்த்தக வங்கி முன்பாக) 56/15 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ☎ 0718561654, 0779254078


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.04.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
நற்சிந்தனை
"உன்னால் முடியும்"
முடியும் என்ற முழு நம்பிக்கையுடன் முடிவெடுத்து, திட்டமிட்டு, சுய கட்டுப்படுத்தலுடன் செயற்பாட்டில் இறங்கு: முடியாதது ஒன்றும் இல்லை என்னும் உண்மை உனக்கு வெளிச்சமாகும்.

க.பொ.த.உயர்தர
கல்விச்சுடர்
14.04.2009 01 செவ்வாய்க்கிழமை
Special Guidance For A/L 2009&2010

க. பொ.த உயர்தர மாணவர்களுக்கென தனியாக வெளிவரும்
கல்வி இணைப்பிதழ்

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August

# பொருளியல் - 1

ஆசிரியர்:-
V.முரளி B.A.Hons (Eco.Sp), M.A (Eco).
Co/St.Benedict's College, Col-13.

## கடந்தவார (07.04.09) பொருளியல் பகுதி-1 இன் விடைக்குறிப்புக்கள்

01. அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளானவை விலைப்பொறி முறையினூடாகவும், மத்திய திட்டமிடல் பொருளாதாரத்தினூடாகவும் தீர்வு காணப்படுகின்ற பொருளாதாரம் ஆகும்.
02. பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்கின்றபொழுது கேள்வி, நிரம்பல்களான சந்தை சக்திகளுக்கு இடமளிக்காது தீர்மானம் மேற்கொள்வது ஆகும்.
    உதாரணம் :- அரச தலையீடு, தனியுரிமைச் சந்தை.
03. பண்டத்தின் ஓர் அலகினை விற்பனை செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்ற வருமானம் ஆகும். இது மொத்த வருமானத்தை விற்பனை அலகுகளால் பிரித்து பெறப்படுவது ஆகும். எனவே, இது சராசரி விலைக்குச் சமனாகும். $AR = TR/Q$
04. உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி என்பவற்றிக்கு ஏற்படுகின்ற சந்தை ஆகும்.
    உதாரணம் :- ஊழியச் சந்தை, மூலதனச்சந்தை.
05. பொதுவாக சமூகத்திற்கு ஏற்படுகின்ற செலவு ஆகும். இது தனியார் செலவின்போது ஏற்படும். இச்செலவு சமூக நன்மைக்கு முற்றிலும் எதிரானது ஆகும்.
    உதாரணம் :- உற்பத்தி செயற்பாட்டின்போது சூழல் மாசடைதல்.
06. அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்கக் கூடிய விலையில் பொருட்கள்,சேவைகள் அல்லது நாணயங்கள் விற்பனை செய்யப்படுவது ஆகும்.
07. முதலீட்டில் ஏற்படுகின்ற மாற்றம் வருமானத்தை எத்தனை மடங்கால் மாற்றமடையச் செய்கின்றது என்பதனை அளவிடுவது ஆகும். $K = 1/mps$
08. அருங்கலைப் பொக்கிசங்கள் - பிரபலமானவர்கள் பாவித்த பொருட்கள்.
    உதாரணம் :- டயானா பாவித்த உடைகள்.
09. பதிலீட்டு விளைவு, வருமான விளைவு.
10. மொத்தச்செலவின் அதி உச்சத்தில் $mc = o$ பொதுப்பண்டத்தின் நுகர்வின்போது வானொலி, தொலைக்காட்சி சேவையில் புதிய நேயர்கள் இணையும்போது மொத்தச் செலவு மாறாது. எனவே, $mc = o$
11. விமான சேவை, புகையிரத சேவையில் வேறுபட்ட ஆசனங்களைக் கொண்ட வகுப்புகளுக்கு வேறுபட்ட கட்டணம் மின், குழாய் நீர், தொலைபேசி போன்றவற்றிற்கு வேறுபட்ட கட்டணம் பாவனை அலகுக்கு ஏற்ப.
12. முதலீடு- I, அரசசெலவு- G, ஏற்றுமதி- X.
13. மூலதன இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு மொத்த முதலீடு ஆகும். இது தேறிய முதலீட்டுடன் பெறுமானத் தேய்வினையும் கூட்ட வருவது ஆகும்.
14. அரச வரவு - செலவுத்திட்டத்தின் நடைமுறைக்கணக்கு மிகை ஆகும்.
    அரசிறை > நடைமுறைச்செலவு, நடைமுறைச்செலவிலும் பார்க்க அரசிறை பெரிதாகக் காணப்படும்.
15. இலவசக் கல்வி, இலவச பாடசாலைச் சீருடை, இலவச பாடநூல், ஓய்வூதியம், சமுர்த்தி நிவாரணம்.
16. தேசிய பாதுகாப்பு, சூழல் பாதுகாப்பு.
17. $I + G + X = S + T + M$, $I \# S$ ஒன்றுக்கு மேற்பட்ட உட்பாச்சலும், வெளிப்பாச்சலும் காணப்படுவதனால் ஆகும்.
18. வணிகப்பொருள் ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் இடையிலான வேறுபாடு ஆகும். இது பொருட்களின் ஏற்றுமதியில் இருந்து இறக்குமதியைக் கழிக்க வருவது ஆகும்.
19. பொருட்கள் சேவைகளின் சராசரி விலைமட்டம் ஆகும்.
20. பொருளியல் எண்ணக்கருக்கள், கோட்பாடுகள் பொருளாதாரத்தில் எவ்வாறு பிரயோகிக்கப்படுகின்றன என்பதனை விளக்குவது ஆகும்.

## கடந்தவார (07.04.09) பொருளியல் பகுதி-11 இன் விடைக்குறிப்புக்கள்

01. அ. கேள்விச்சார்பு ஒரு பொருளின் கேள்வியை நிர்ணயிக்கும் அனைத்துக் காரணிகளினதும் தொழிற்பாடாகக் கேள்வியைக்காட்டும் கணித ரீதியான விளக்கம்.
    குறிப்பிட்ட பொருளின் விலை (Px), ஏனைய பொருட்களின் விலைகள் ($P_1$......$Pn_1$), நுகர்வோரின் வருமானம் (Y), சுவை (T), எதிர்பார்க்கைகள் (E) போன்ற கேள்வியை நிர்ணயிக்கும் காரணிகளின் தொடர்பாடாக ஒரு பொருளின் கேள்வியைக் கூறும் கணித ரீதியான விளக்கம்.
    $QDx = F_1$ (Px, Pi.....Pn I, Y, T, E) கேள்வி ஒரு குறிப்பிட்ட காலத்தில் மற்றவைகள் மாறாத நிலையில் ஒரு பொருளுக்கு நிலவக்கூடிய பல்வேறுபட்ட தொகைகளே கேள்வி. மற்றவைகள் மாறாத நிலையில் குறிப்பிட்ட பொருளின் விலையின் தொழிற்பாடாக அமைவதே கேள்வி. $QDx = f(P_1)$

ஆ. கௌரவ மதிப்புடைய பொருள், அதாவது விலையை அடிப்படையாகக்கொண்டு தரத்தை மதிப்பிடும் பொருட்கள், சமூக அந்தஸ்துடைய, பொருட்கள், இழிவுப்பொருட்களின் ஒரு வகையான கிபன் பொருட்கள், கிபன் பொருளின் விலை குறையும்போது நுகர்வோரின் மெய்வருமானம் அதிகரிக்கும். இது ஓர் இழிவுப்பொருள் ஆகையால் வருமானம் அதிகரிக்க கேள்வித்தொகை குறையும், விலை குறையும்போது மேலும் விலை குறைவடையும் என நுகர்வோர் எதிர்பார்த்தல்.

இ. தனிநபர் கேள்வி ஒரு குறிப்பிட்ட காலத்தில் மற்றவைகள் மாறாத நிலையில் ஒரு பொருளுக்கு நிலவக்கூடிய பல்வேறுபட்ட விலைகளில் குறிப்பிட்ட ஒரு நுகர்வோரினால் கொள்வனவு செய்யப்படத் தயாராகவுள்ள பல்வேறுபட்ட தொகைகள் தனிநபர் கேள்வி ஆகும். தனிநபர் கேள்வியைப் பின்வரும் காரணிகள் நிர்ணயிக்கின்றன.
1) குறிப்பிட்ட பொருளின் விலை.
2) ஏனைய பொருட்களின் விலைகள்.
3) நுகர்வோரின் வருமானம்.
4) நுகர்வோரின் சுவை.
5) நுகர்வோரின் எதிர்பார்க்கைகள்.

சந்தைக்கேள்வி ஒரு குறிப்பிட்ட காலத்தில் மற்றவைகள் மாறாத நிலையில் ஒரு பொருளுக்கு நிலவக்கூடிய பல்வேறுபட்ட விலைகளில் சந்தையில் உள்ள அனைத்து நுகர்வோர்களாலும் கொள்வனவு செய்யப்படத் தயாராகவுள்ள பல்வேறுபட்ட தொகைகள் சந்தைக்கேள்வி ஆகும்.

ஒரு பொருளுக்கான தனிநபர் கேள்விகளைக் கூட்டுவதன் மூலம் பெறப்படும் தொகையே சந்தைக்கேள்வி ஆகும்.
தனிநபர் கேள்வியை நிர்ணயிக்கும் காரணிகளோடு பின்வரும் காரணிகளும் சேர்ந்து சந்தைக்கேள்வியை நிர்ணயிக்கும்.

உள்ளே......
01. பொருளியலின் கடந்தவார வினாக்களின் விடைக்குறிப்புக்கள்.
02. பொருளியலின் பங்குச்சந்தை தொடர்பான கட்டுரைத் தொடர்
03. தமிழ் கொழும்பு வலய வினாத்தாளின் பகுதி–01 இன் பகுதி –1
04. தமிழ் புள்ளியிடல் திட்டத்தின் தொடர்ச்சி
05. கணக்கீட்டு தொடர் வினாத்தாள் –1 இன் பகுதி – 1
06. கணக்கீட்டின் பகுதி– 11 இன் கடந்தவார விடைக்குறிப்புக்கள்.
07. பௌதிகவியல் பொறியியல் வினாத்தொகுப்பு.

1) சனத்தொகை - நுகர்வோரின் எண்ணிக்கை.
2) சனத்தொகையில் கிராமப்புற, நகரப்புற மக்களின் பங்கு.
3) வீட்டுத்துறையினரின் வருமானப் பங்கீடு.

02. அ. 1) தொழில்நுட்ப முன்னேற்றம்
2) காலநிலையின் சாதகமான மாற்றம்.
3) உற்பத்திக் காரணிகளின் விலைகள் குறைவடைதல்.
4) உள்ளீடுகளின் விலைகள் குறைவடைதல்.
5) நெல் உற்பத்தியாளருக்கு அரசாங்கம் மானியம் வழங்கல்.
6) நெல் உற்பத்தியை அதிகரிப்பது என்ற உற்பத்தியாளரின் தீர்மானம்.

ஆ. புள்ளி நெகிழ்ச்சிக் கேள்விக்கோட்டின் ஒரு புள்ளியில் குறிப்பிட்ட ஒரு விலையில் நெகிழ்ச்சியைக் கணிப்பிடும் முறை.
சிறிய விலை மாற்றம் காரணமாக கேள்வித்தொகையில் ஏற்படும் நெகிழ்ச்சியை அளவிடும் முறை, கேள்வியின் வில் நெகிழ்ச்சியின் எல்லைகளை இது குறிக்கின்றது.
$\Delta QD/\Delta P \times P/QD$ வில் நெகிழ்ச்சி கேள்விக்கோட்டில் உள்ள இரண்டு புள்ளிகளுக்கு இடையில் - இரண்டு விலைகளுக்கிடையில் நெகிழ்ச்சியைக் கணிப்பிடும் முறை.
பெரிய விலைமாற்றம் காரணமாக கேள்வித்தொகையில் ஏற்படும் நெகிழ்ச்சியை அளவிடும் முறை, நெகிழ்ச்சிக்கணிப்பீட்டிற்கு சராசரி விலை, சராசரித் தொகை கையாளப்படுவதனால் இது நெகிழ்ச்சி பற்றிய சராசரிக்கணிப்பீடாகும், $\Delta QD \times (P_1 + P_2)/2$

இ.

| | |
|---|---|
| பொருளின் தன்மை | - அத்தியாவசியப்பொருள், ஆடம்பரப்பொருள். |
| பொருளின் பாவனைக் காலம் | - நீண்ட காலப்பாவனை, குறுங்காலப்பாவனை. |
| பொருளின் பயன்பாடு | - பல பயன்பாடுகள், [illegible] பயன்பாடுகள். |
| பொருளை வரையறுக்கும் முறை | - பரந்த முறையில் வரையறுத்தல், குறுகிய முறையில் வரையறுததல். |
| குறிப்பிட்ட பொருளின் மீதான செலவு | - நுகர்வோரின் வருமானத்தில் வகிக்கும் பங்கு. |
| கருதப்படும் காலப்பகுதி | - குறுங்காலம், நீண்டகாலம். |

03. அ. புள்ளி நெகிழ்ச்சியினைக் கணிப்பிடும் சமன்பாடான $\Delta QD/\Delta P \times P/QD$ என்பதில் உள்ள $\Delta QD/\Delta P$ என்பது கேள்விக்கோட்டின் சரிவின் தலைகீழ்ப் பெறுமதியைக் குறிக்கின்றது. நேர் கோட்டுக்கேள்வி வளையியில் இதன் பெறுமதி எல்லா விடத்திலும் நிலையானது. எனவே, புள்ளி நெகிழ்ச்சி ஆரம்ப விலை (P), ஆரம்ப கேள்வித்தொகை (Q) என்பதன் விகிதத்திலேயே (P/Q) தங்கியுள்ளது, நேர்கோட்டுக்கேள்வி வளையியில் மேலிருந்து கீழ்நோக்கிச் செல்லும் போது P/Q என்பதன் பெறுமதி தொடர்ந்து குறைந்து செல்லும். எனவே, புள்ளி நெகிழ்ச்சியும் சீராக வீழ்ச்சியடைந்து செல்லும். இக் கேள்விக்கோடு நிலைக்குத்தச்சினை வெட்டும் புள்ளியில் $(P/Q = P/O = \infty)$ நெகிழ்ச்சி முடிவிலியாக இருக்கும்.
இக்கேள்விக்கோடு கிடையச்சினை வெட்டும் புள்ளியில் $(P/Q = O/Q = O)$ நெகிழ்ச்சி பூச்சியமாகக் காணப்படும். இக்கேள்விக்கோட்டின் நடுப்புள்ளியில் ஒருமை நெகிழ்ச்சி காணப்படும். எனவே, இக்கேள்விக்கோட்டின் மேற்பகுதி நெகிழ்ச்சி உள்ளது. கீழ்ப்பகுதி நெகிழ்ச்சி அற்றது.

ஆ. ஒரு பொருளின் விலைமாற்ற வீதாசாரமும் கேள்வித்தொகை மாற்ற வீதாசாரமும் சமனாகக் காணப்படுவதே ஒருமை நெகிழ்ச்சி ஆகும். ஒரு நெகிழ்ச்சியுள்ள கேள்விக்கோட்டின் எல்லாப் புள்ளிகளிலும் நெகிழ்ச்சிக்குணகம் ஒன்று என்ற பெறுமதியைக் கொண்டிருக்கும். இக்கேள்விக் கோட்டின் எந்தவொரு புள்ளியிலும் காணப்படும் விலையினால் (P) அதற்குரிய தொகையினை (Q) பெருக்கும்போது (P x Q) பெருக்கம் கிடைக்கும். அதாவது, மொத்த நுகர்வோர் செலவுக் கேள்வி வளையியின் எல்லாப்புள்ளிகளிலும் சமமாகக் காணப்படும்.

இ. ஒரு பொருளின் விலைமாற்ற வீதாசாரமும் அப்பொருளின் நிரம்பல் தொகை மாற்ற வீதாசாரமும் சமமாகக் காணப்படுவதே ஒருமை நிரம்பல் நெகிழ்ச்சியாகும். எனவே, இந் நிரம்பற் கோட்டின் எல்லாப்புள்ளிகளிலும் நிரம்பல் நெகிழ்ச்சிக்குணகம் ஒன்று என்ற பெறுமதியைக் கொண்டிருக்கும்.

04. அ. X பண்டம் நெகிழ்ச்சியற்ற கேள்வியை உடையது.
Y பண்டம் நெகிழ்ச்சியுள்ள கேள்வியை உடையது.
X பண்டம் நெகிழ்ச்சியற்ற கேள்வியை உடையதாக இருக்கும்போது அதனது விலை அதிகரிக்கும். விற்பனைத்தொகை சிறிதளவால் மட்டுமே குறைவடையுமாதலால் உற்பத்தியாளரின் வருமானம் அதிகரிக்கும்.
Y பண்டம் நெகிழ்ச்சியுள்ள கேள்வியினை உடையதாக இருக்கும்போது அதனது விலை அதிகரிக்கும்போது விற்பனைத்தொகை பெருமளவால் குறைவடையும். ஆதலால், உற்பத்தியாளரின் வருமானம் குறைவடையும்.

ஆ. AB பொருட்களுக்கிடையே ஒன்றுக்குக் கூடிய நேர்க்கணியக் குறுக்கு நெகிழ்ச்சி காணப்படுகின்றது, AB பொருட்கள் நெருங்கிய பிரதியீட்டுப் பொருட்களாகும், AC பொருட்களுக்கு இடையில் ஒன்றுக்குக் குறைந்த நேர்க்கணியக் குறுக்கு நெகிழ்ச்சி காணப்படுகிறது. AC பொருட்கள் குறைந்த பிரதியீட்டுத்தன்மை வாய்ந்த பொருட்களாகும். AD பொருட்களுக்கு இடையில் எதிர்க்கணிய குறுக்கு நெகிழ்ச்சி காணப்படுவதனால் இவ்விரண்டு பொருட்களும் நிரப்புப் பொருட்களாகும்.

இ. XY பொருட்கள் நேர்க்கணிய வருமான நெகிழ்ச்சியைக் கொண்டுள்ளன. எனவே, இவை இரண்டும் சாதாரணதர பொருட்கள்.
X பொருள் ஒன்றுக்குக்கூடிய நேர்க்கணிய வருமான நெகிழ்ச்சியைக் கொண்டுள்ளது.
X பொருள் ஆடம்பரப்பொருள்.
Y பொருள் ஒன்றுக்குக் குறைந்த நேர்க்கணிய வருமான நெகிழ்ச்சியைக் கொண்டுள்ளது.
Y பொருள் அத்தியாவசியப்பொருள்.
Z பொருள் எதிர்க்கணிய வருமான நெகிழ்ச்சியைக் கொண்டுள்ளது.
Z பொருள் இழிவுப்பொருள்.

(நிறைவுபெற்றது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிணைகளின் கடன் வழங்கலினதும் பெறுதலினதும் கடந்தவாரத் (07.04.09) தொடர்ச்சி...**

மிக முக்கியமாக இம் முறையானது தன்னியக்க இலத்திரனியல் கணினியூடாக நடைமுறைபடுத்தப்படுவதால், கடன்பத்திரங்களின் கொடுக்கல்வாங்கல்களின்போது சான்றிதழ்களோ அல்லது வேறு ஏதேனும் பத்திரங்களினது பாவனையோ மிகக்குறைந்த அளவிலேயே பயன்படுகின்றது. கொடுக்கல்வாங்கல் செய்பவர்களிடையே உருவாகும் தீர்வு அச்சத்தைப் போக்கும் முகமாக இந்த DEX முறையில் கடன்பத்திரங்களைக் கொள்வனவு செய்பவருக்கு அவர் வாங்கிய பத்திரங்கள், தீர்வு வங்கியினால் விற்பனை செய்தவருக்குரிய பணத்தைக் கொடுப்பதற்கான உத்தரவாதத்தின் பின்னரே கணக்கில் செலவுவைக்கப்படுகின்றது. இந்த நேரடிக் கொடுக்கல்வாங்கல் முறை முதலீட்டாளர்கள் திரவத் தன்மையை முகாமைப்படுத்தவும், தமக்குப் பொருத்தமான தீர்வுச்சக்கரத்தைத் தெரிவுசெய்யவும் வசதியாக இருக்கின்றது. இது தவிர முதலீட்டாளர்கள் இக் கடன் சந்தையினூடாக மீளக்கொள்வனவு செய்யும் உடன்படிக்கை (Repo), எதிர் மீளக் கொள்வனவு உடன்படிக்கை (Reverse Repo) போன்றவற்றில் மிக இலகுவாக பங்கேற்கக்கூடியதாக உள்ளது.

மேற்குறிப்பிட்ட நன்மைகள் தவிர கொடுக்கல்வாங்கல் செய்யும் எண்ணத்தோடு இருக்கும் முதலீட்டாளர்கள் சந்தையில் காணப்படும் பிணைகளின் வாங்கும் விலை, விற்கும் விலை போன்றவற்றை மிகவும் தெளிவாகப் பார்த்துக்கொள்ளக்கூடியவாறு DEX முறையானது ஓர் உன்னத சந்தை அமைப்பைக் கொண்டுள்ளது. அத்தோடு முதிர்வுக் கொடுப்பனவையும் வட்டிக் கொடுப்பனவையும் முதலீட்டாளர்கள் சார்பில் சேகரிக்கும் பொறுப்பையும் DEX முறையானது பொறுப்பேற்றுள்ளது. ஆகக்குறைந்தது ரூபா 10,000 பெறுமதியான கடன்பத்திரங்களில் முதலீடு செய்யும் வாய்ப்பு இம்முறையில் காணப்படுவது சிறு முதலீட்டாளர்களுக்கும் பங்குபற்றும் சந்தர்ப்பத்தை உருவாக்கியுள்ளது.

DEX கைமாற்றல் முறையில் பங்கேற்க விரும்பும் முதலீட்டாளர்கள் DEX அங்கத்தவர்கள் ஊடாக அல்லது பங்குத்தரகர்கள் ஊடாக மத்திய வைப்புத் திட்டத்தில் கணக்கு ஒன்றை ஆரம்பித்து கொள்வனவு, விற்பனைக் கட்டளைகளைப் பிறப்பிக்க முடியும்.

DEX கைமாற்றல் முறையின் கீழ் அரச கடன் பிணைகளின் பிரதிபயன்களை பல்வேறு மாறுபட்ட முறைகளில் கைமாற்றம் செய்யக்கூடியதாக இருக்கின்றது.

அரசாங்கக் கடன் பிணைகளின் கைமாற்றம் இலங்கை எங்கும் பரவலாக நடைபெறவேண்டும் என்ற இலங்கை மத்திய வங்கியின் வாஞ்சைக்கு இந்த DEX முறையானது உறுதுணையாக உள்ளது. இதுவரைக்கும் மூன்று நிறுவனங்கள் DEX கைமாற்றல் முறையில் பங்கேற்கும் பொருட்டு கொழும்புப் பங்குச்சந்தையின் வியாபார அங்கத்தவர்களாகக் (Trading Members) கடமையாற்றுகின்றன.

இந்த அங்கத்துவமானது கடன் பத்திரங்களின் கைமாற்றல்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கைப் பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அனுமதிப்பத்திரம் பெறப்படவேண்டும் என்ற கட்டளையின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

DEX கைமாற்றல் முறையில் பங்கேற்கும் அனுமதிப்பத்திரம் பெற்ற மூன்று நிறுவனங்களும் பின்வருமாறு:

✱ கெப்பிடல் எலாயன்ஸ் ஹோல்டிங்.
✱ நெஷனல் வெல்த் கோபரேஷன்.
✱ செலான் மொர்சன்ட் வங்கி.

***

# மத்திய வைப்புத்திட்ட கம்பனியின் செயற்பாடுகள்

**மத்திய வைப்புத்திட்டம்**
**CENTRAL DEPOSITORY SYSTEM**

பங்குச்சந்தைத் தீர்வக நடவடிக்கைகளை செயற்படுத்துதல், பங்குக் கைமாற்றங்களைத் தீர்த்துக்கொள்வதற்கான பதிவுகளை மேற்கொள்ளல் ஆகிய பணிகளைச் செயற்படுத்துவதற்கான தனியார் கம்பனி ஒன்றாக மத்திய வைப்புத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. கொழும்புப் பங்குச்சந்தை இக் கம்பனியின் தொழிற்பாட்டிற்கு முழுமையான பங்களிப்பை வழங்கியுள்ளது.

**பணிப்பாளர் சபை**

கொழும்புப் பங்குச்சந்தை, மத்திய வைப்புத்திட்டத்திற்கான 100% மூலதனப் பங்களிப்பை வழங்கியிருப்பதனால் கொழும்புப் பங்குச்சந்தையின் இயக்குநர் சபையே இதன் இயக்குநர் சபையாகக் கடமையாற்றுகின்றது.

**பிரதான பணிகள்**

கொழும்புப் பங்குச்சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள கம்பனிகளின் பிணைப் பத்திரங்களுக்கான கைமாற்றல்கள் நிறைவுபெறும் வரை பங்குதாரர்களுக்கான நம்பிக்கைப் பொறுப்பாளராகவும், பட்டியலிடப்பட்டுள்ள பிணைப் பத்திரங்களுக்கான (Quoted Securities) பாதுகாவலராகவும் பணிபுரிகின்றது.

**பங்குபற்றுநர்**

கொழும்புப் பங்குச்சந்தையின் உறுப்புரிமை அங்கத்தினர்களான பதினைந்து தரகர் நிறுவனங்களும் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கைப் பொறுப்பாளராக சேவை ஆற்றக்கூடிய பதினாறு வர்த்தக வங்கிகளும் மத்திய வைப்புத்திட்டத்தில் அங்கத்துவம் பெற்றுள்ளன. இதன் மூலம் இவை மத்திய வைப்புத்திட்டத்தினால் அளிக்கப்படும் வசதிகளையும், சேவைகளையும் நேரடியாக பயன்படுத்திக்கொள்கின்றன.

**மத்திய வைப்புத் திட்டத்தின் செயற்பாடுகள்**

மத்திய வைப்புத் திட்டத்தின் செயற்பாடுகளைப் பின்வரும் தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தலாம்.

✱ வாடிக்கையாளர்களைப் பதிவு செய்தல் அல்லது அவர்கள் சார்பாக கணக்குகளை ஆரம்பித்தல். (Registration of Clients)
✱ பங்குகளை வைப்பிலிடல் (Deposit of Shares)
✱ பங்குகளை மீளப்பெறல் (Withdrawal of Shares)
✱ பங்குகளைக் கைமாற்றல் (Transfer of Share)
✱ பங்குத் தீர்வக நடவடிக்கையை மேற்கொள்ளல் (Clearing)
✱ கொடுக்கல்வாங்கல்களைத் தீர்த்துவைத்தல் (Settlement)
✱ பங்குகளைப் பதிவுசெய்தல் (Registration)
✱ புதியதும், தவணையிடப்பட்டதுமான பங்கு வழங்கல் பற்றிய செயற்பாடுகளில் (Handling of New and Subsequent Issues) ஈடுபடல்.

**வாடிக்கையாளர்களைப் பதிவு செய்தல்**

கொழும்புப் பங்குச்சந்தை மூலம் பங்குக் கைமாற்றல்களை மேற்கொள்ள விரும்புபவர்கள் மத்திய வைப்புத் திட்டத்தில் பிணைகளுக்கான கணக்கு ஒன்றை (Securities Account) ஆரம்பிக்க வேண்டும். இங்கு வாடிக்கையாளர்கள் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கு மத்திய வைப்புத்திட்ட விண்ணப்பப் படிவம் ஒன்றைப் பூர்த்திசெய்ய வேண்டும். அதிலுள்ள தகவல்கள் கணினிக்கு உட்பாய்ச்சப்படும். குறித்த வாடிக்கையாளரை இனங்காண்பதற்கு ஏற்றவகையில் அவரது கணக்கிற்கான இலக்கம் பங்கு பற்றுநர் ஊடாக வழங்கப்படுகின்றது.

மத்திய வைப்புத் திட்டத்தில் குறித்த வாடிக்கையாளர், கணக்கை ஆரம்பிப்பதற்கு அவரது தேசிய அடையாள அட்டையின் பிரதி ஒன்றை விண்ணப்பத்துடன் இணைப்பது இன்றியமையாதது. தேசிய அடையாள அட்டையின் இலக்கம் அவரது கணக்கின் இலக்கமாகவும் வைத்துக்கொள்ளப்படும். தேசிய அடையாள அட்டை இல்லாத சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு பயணிகள் கடவுச்சீட்டு இலக்கம் இத் தேவைக்காகப் பயன்படுத்தப்படும். முதலீட்டாளர்கள் அவசியம் எனக் கருதும் சந்தர்ப்பங்களில் அனைத்துத் தரகர் நிறுவனங்களிலும் ஒவ்வொரு பிணைக் கணக்கை ஆரம்பிக்க முடியும்.

வாடிக்கையாளர் தத்தம் கணக்குகளிலுள்ள தகவல்களை மாற்றியமைப்பதற்கான வாய்ப்புக்கள் மத்திய வைப்புத் திட்டத்தினால் வழங்கப்பட்டுள்ளன. அம் மாற்றங்கள் வாடிக்கையாளர்களின் விருப்புக்கமைய அமைந்திருப்பதோடு, அவை அந்தந்தப் பங்கு பற்றுநர்கள் ஊடாகச் சமர்ப்பிக் கப்பட வேண்டும். அதிக அளவான கணக்குகளை ஆரம் பிக்கும் போதும் அல்லது பன்முறைப் பதிவுகளை மேற்கொள்ளும் போதும் அனைத்துப் பங்குபற்றுநர்களும் ஒரே சீரான தகவல்களைப் பேணிக்கொள்வதற்கு ஏற்றதாக வாடிக்கையாளர்களுக்கு வரையறைகள் விதிக்கப்பட்டுள்ளன.

**பங்குகளை வைப்பிலிடல்**

கொழும்புப் பங்குச் சந்தையின் வியாபார முறைமைகள் மூலம் குறித்த பங்குகளுக்கான கைமாற்றல்களை மேற்கொள்வதற்கு முன் அப் பங்குகள் மத்திய வைப்புத் திட்டத்தில் வைப்பிலிடப்பட வேண்டும். பங்குதாரர்கள், பங்கு பற்றுநர்கள் மூலம் முறையாக பூரணப்படுத்தப்பட்ட குறித்த பங்குகளுக்கான பங்குப்பத்திரம், விற்பனை ஒப்படைப்புப் பத்திரம், வைப்புப்பத்திரம் ஆகியவற்றை மத்திய வைப்புத்திட்டத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும். அவ் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட மத்திய வைப்புத் திட்டம் அவற்றுக்கு இலக்கமிட்டு, அவை கிடைத்தமை குறித்து வைப்புப் பத்திரத்தின் துணைப்பிரதியில் திகதி முத்திரையிட்டு பங்குபற்றுநருக்கு மீள அனுப்பிவைக்கின்றது. பெறப்பட்ட ஆவணங்களைச் செவ்வைபார்த்து, அவற்றைக் கணினியிலிட்டு குறித்த வாடிக்கையாளரின் கணக்கில் வரவு வைத்துக்கொள்கின்றது.

குறித்த நாளின் இறுதியில் கணினியின் மூலம் வைப்புப் பதிவுகள் தயாரிக்கப்படும். ஒவ்வொரு வைப்புப் பதிவும் குறித்த பங்குப்பத்திரம், விற்பனை ஒப்படைப்புப் பத்திரம் என்பவற்றுடன் ஒப்பிடப்படும். அடுத்து வரும் விற்பனை நாளில் (Trading Day) வைப்புப் பற்றிய உப ஆவணமும், அதில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பங்குகளுக்கான பங்குப் பத்திரமும் குறித்த கம்பனிச் செயலாளருக்கு அல்லது பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, மத்திய வைப்புத் திட்டத்தின் பெயருக்கு மாற்றுமாறு கேட்கப்படும். கம்பனியால் நியமிக்கப்பட்ட அதிகாரி அவ் ஆவணங்களைப் பெற்றுக்கொண்டமை குறித்து, உப ஆவணத்தின் மூலப்பிரதியில் கையொப்பமிடுவதன் மூலம் அவை ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும். அதாவது, வைப்பு ஒன்று தொடர்பாகப் பொருத்தமற்ற விடயங்கள் ஏதாவது காணப்படுமாயின், அது பற்றி மத்திய வைப்புத் திட்டத்திற்கு வைப்புத் திகதியிலிருந்து மூன்று வியாபார நாட்களுக்குள் கம்பனிச் செயலாளரினால் அல்லது கம்பனிப் பதிவாளரினால் அறிவிக்கப்பட வேண்டும்.

**பங்குகளை மீளப்பெறுதல்**

பங்குதாரர்கள் தாம் வைப்பிலிட்ட பங்குகளை மத்திய வைப்புத் திட்டத்திலிருந்து மீளப் பெற்றுக்கொள்வதற்கு கொள்வனவு ஒப்படைப்புப் பத்திரம், பங்குகள் மீளப்பெறுதல் பத்திரம் போன்ற ஆவணங்களை அவற்றின் பிரதிகளுடன் பங்குபற்றுநர்கள் மூலம் மத்திய வைப்புத்திட்டத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். மீளப்பெறுதல் விண்ணப்பம் கிடைத்ததும் மத்திய வைப்புத் திட்டம் அவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதியில் திகதி முத்திரையைப் பொறித்து பங்கு பற்றுநர்களுக்கு மீள அனுப்பி வைக்கும். மத்திய வைப்புத் திட்டம் மீளப்பெறுதலுக்குரிய ஆவணங்களைச் சரிபார்த்ததும் அம்மீளப் பெறுதலைப் பதிந்து உரிய வாடிக்கையாளர் கணக்கில் செலவு வைப்பதற்கு கணினிக்கு உட்செலுத்தப் படும். அந்நாளின் இறுதியில் அன்று மேற்கொள்ளப்பட்ட அனைத்து மீள் பெறுகைகள் பற்றிய பதிவொன்று கணினி மூலம் தயாரிக்கப்படும். அவ்வறிக்கை மூலப் பிரதிகளான கொள்வனவு ஒப்படைப்புடனும் மீளப்பெறுதல் பத்திரத்துடனும் செவ்வை பார்த்து அம் மீளப் பெறுகைக்கான கணினி அறிக்கையும், கொள்வனவு ஒப்படைப்புப் பத்திரமும் குறித்த கம்பனியின் செயலாளருக்கு அல்லது பதிவாளருக்கு அடுத்துவரும் வியாபார நாளில் ஒப்படைக்கப்படும். இவ் ஆவணங்களைப் பெற்ற கம்பனியின் செயலாளர் அல்லது பதிவாளர் அதன் கணினிப் பிரதியில் கையொப்பமிட்டு மத்திய வைப்புத்திட்டத்திற்கு மீள அனுப்பி வைப்பார். பங்குப் பத்திரம் ஒன்றை வாடிக்கையாளருக்கு பங்கு பற்றுநர்களால் அனுப்பிவைக்கும் பொருட்டு, கம்பனியின் செயலாளர் அல்லது பதிவாளர் அதனை 07 வியாபார நாட்களுக்குள் மத்திய வைப்புத்திட்டத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும். பாதுகாப்பு ஒழுங்கு கருதி, கொழும்புப் பங்குச்சந்தைச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் போது மீளப்பெறுதல்களுக்கான சந்தர்ப்பம் வழங்கப்படுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

**பங்குகளை ஒப்படைத்தல்**

மத்திய வைப்புத்திட்டத்தில் பதிவு செய்துகொண்ட வாடிக்கையாளர்கள் பல்வேறு பங்கு பற்றுநர்களிடம் வைத்துள்ள கணக்குகளிடையே பங்குகளை ஒப்படைக்கும் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி அடுத்தவாரம் வெளிவரும்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance.Level) Model Examination - 2009 August

# தமிழ் - 01

## கொழும்பு வலய பரீட்சை வினாத்தாள்

### பகுதி - 1

01. பின்வரும் செய்யுட் பகுதிகளுள் எவையேனும் மூன்றினைத் தெரிவு செய்து,
அ. அவற்றின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.
ஆ. தடித்த எழுத்தில் தரப்பட்டுள்ள பகுதிகளின் சிறப்பை விளக்குக.

1) ஆற்றுதலென்பது ஒன்றலர்ந்தவர்க் குதவுதல்
போற்றுதலென்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப்படுவது பாடறிந் தொழுகுதல்
அன்பெனப்படுவது தன்கிளை செறா அமை
அறிவெனப்படுவது பேதையர் சொல் நோன்றல்
செறிவெனப்படுவது கூறியது மாறா அமை
நிறைவெனப்படுவது மறைபிறரறியா அமை
முறையெனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்
ஆங்கதை யறிந்தனி ராயினென் தோழி
**நன்னுதல் நலனுண்டு துறத்தல் கொண்க**
**தீம்பா லுண்பவர் கொள்கலம் வரைதல்**
நின்றலை வருந்தியாள் துயரம்
சென்றனை களைமோ பூண்க நின் தேரே

2) ஊனுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு
சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங் கூர்ந் தனைய துடைத்து
**நச்சுப்படாதவன் செல்வ நடுவூருள்**
**நச்சு மரம் பழுத்தற்று**
கொடுப்பதூ உந் துய்ப்பதூ உமில்லார்க் கடுக்கிய
கோடியுண்டாயினு மில்

3) உண்டு கொலுயிரென வொருங்கி னாருக்
கண்டன கரின்றனன் க்ணன் கண்ணெனும்
புண்டரீகம் பொழி புனல் வன்சடா
மண்டல நிறைந்து போய் வழிந்து சேரவே

அயாவுயிர்த் தழுகணீ ரருவி மார்பிடை
யுயாவுறத் தருவுள முருக்ப் புல்லினா
னியாயமத் தன்னைக்குமோர் நிலையமாயனான்
தயாமுத லறத்தினை தழுவி யென்னவே

4) மலர்நிற வொழுகும் வரையப்புய கலையு
மானபி யொருதினத் தினிலோர்
தலமதைக் குறித்தாங் கேகவென் றெழுந்து
தானை நால்வகைப் புடைசூழு
நிலவிய காற்று வாகனத் தேறி
நெடுந்திரை மேக மண்டலத்தி
னலனுற வுலவித் திரிவது நிகர்ப்ப
நடத்தின் ரந்தா மார்க்கம்

மாமலர் பொழியப் புகுதுமப் பொழுது
மக்கமா நகர் கரு பாவின்
மேலுற நேரேபறந்தது பறக்கின்
வியனடி மாரிற்பின் 'னபியா
யேலவற் தொருவ ருத்தித்தரு டலமீ
தென நபி சுலையுமா னிசைத்தார்
சாலவீ தியற்றி முடியுமுன் குறித்த
தலத்தினிற் சார்ந்தது விமானம்

''ஆ'' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

02. அ. ''ஊரெல்லாம் கூடிஒரு தேர் இழுக்கிறதே
வாருங்கள் நாமும் பிடிப்போம் வடத்தை''
என்று வந்தான்
ஒருவன்

வயிற்றில் உலகத்தாய்
நொந்து சுமந்திங்கு நூறாண்டு வாழ்வதற்காய்ப்
பெற்ற மகனே அவனும்
பெருந் தோளும்
கண்களும் கணணில் ஒளியும் கவலையிடை
உய்ய விழையும் உளமும் உடையவன் தான்
வந்தான் அவன் ஒரு இளைஞன்
மனிதன் தான்
சிந்தனையாம் ஆற்றற் சிறகு தைத்து வானத்தே
முந்தநாள் ஏறி முழு நிலவைத் தொட்டு விட்டு
மீண்டவனின் தம்பி
மிகுந்த உழைப்பாளி
ஈண்டு நாம் யாரும் இசைந் தொண்றி நின்றிடுதல்
வேண்டும் என்னும் ஓர் இனிய விருப்போடு
வந்தான் குனிந்து வணங்கி வடம் பிடிக்க

நில் என்றான் ஓராள்
நிறுத்து என்றான் மற்றோராள்
புல் என்றான் ஓராள்
புலை என்றான் இன்னோராள்
கொல் என்றான் ஓராள்
கொழுத்தென்றான் இன்னோராள்
கல்லொன்று வீழ்ந்து
கழுத்தொன்று வெட்டுண்டு
பல்லோடு உதடு பறந்து
சில்லென்று செந்நீர் தெறித்து
மல்லொன்று நேர்ந்து
மனிசர் கொலையுண்டார்

ஊரெல்லாம் கூடி இழுக்க உகந்த தேர்
வேர் கொண்டது போல் வெடுக்கென்று நின்று விடப்
பாரெல்லாம் அன்று படைத்தளித்த அன்னையோ
உட்கார்ந் திருந்து விட்டாள் ஊமையாய் தான் பெற்ற
மக்களுடைய மதத்தினைக் கண்டபடி
முந்தநாள் வான முழு நிலவைத் தொட்டுவிட்டு
வந்தவனின் சுற்றம்

### பௌதீகப் புவியியலின் விடைக்குறிப்புகள்

01- கிரேக்கச் சொல்லான Olkos என்பதிலிருந்து,
02- மனிதன் சூழலின் அடிமை,
03- தேர்வு முதன்மை வாதம் (Possiblism),
04- நியதிவாதம்-காலநிலை நியதிவாதம்,
05- 3 (தனித்தொகுதி, மூடிய தொகுதி, திறந்த தொகுதி),
06- 61,
07- மாறன் மண்டலம்,
08- உயிர்க்கோளத்தின் எல்லை,
09- மனிதனுக்கும் பௌதீகச் சூழலுக்கும் இடையிலான தொடர்பு,
10- கண்டங்களும் சமுத்திரங்களும்,
11- லோதியன் கிறீன் (Lothion Green),
12- 1912இல் அல்பிரட் உவெக்னரால் (Alfred Vegnar),
13- பெருக்குவிசை,
14- வளர்ச்சியின் எல்லைகள் என்ற ஆய்வு,
15- $O_3$, நறுமணம்,
16- 350 தொப்சன் யுனிட்,
17- 24,
18- மெதேன் ($CH_4$),
19- 600ppm,
20- 1993,
21- 22,000 பேர்,
22- 1980க்குப்பின்,
23- ஜப்பான்-ஹிரோசிமா,
24- சியாட்டல் வாசகம்,
25- யுனெஸ்கோ (Unesco),
26- நிலையான அபிவிருத்தி (Sustainable Development),
27- கண்டவாக்க விசை,
28- சிஸ்மோகிராப்,
29- சீயல், சீமாப்படை,
30- சீமாப்படை (Sima),
31- பசுபிக் சமுத்திரம்,
32- ஜப்பான்-1932,
33- கிரகெரி (Graheri), ஜோன்சன் (Johnson),
34- றோஜ்முற்றோனி,
35- வற்றுப்பெருக்கு,
36- மாறன் மண்டலம்,
37- புற ஊதாக் கதிர்கள் (Albido),
38- அமுக்கவேறுபாடுகள்,
39- ஹலி (Haly), ஹாட்லி (Hadly),
40- மேலைக்காற்றுக்கள்.

நன்றி
கொழும்பு வணிகவள நிலையம்.

அதோ மண்ணிற் புரள்கிறது

1) தேரும் திங்களும் பாடற்பகுதியின் தலைப்பின் பொருத்தப்பாடு
2) இக்கவிதை உணர்த்தும் படிப்பினை

அல்லது

''ஆ'' பகுதியிலுள்ள உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

ஆ. கற்பனைத் திறனும் உணர்ச்சியனுபவங்களை ஆக்கிக்கொள்ளும் ஆற்றலும் புலவனுக்குத்தான் உண்டு. எமக்கில்லை என்பது சிலர் கருத்து. புலவனும் எம்மைப் போல் ஒரு மனிதன் தான். எமக்குள்ள இன்பதுன்பம் அவனுக்கும் உண்டு. ஓர் அழகான காட்சியை புலவன் மட்டும் கண்டும் அனுபவிக்கின்றான் நாம் அனுபவிக்கிறது இல்லை என்று சொல்லமுடியாது. அதைக்கண்ட இடத்தில் எமக்கும் ஓர் உணர்ச்சியின்பம் ஏற்படுகின்றது. யாதாயினும் ஒரு பொருள் அல்லது நிகழ்ச்சி அல்லது காட்சி அல்லது எண்ணக்கருத்து ஓர் புலவனுடைய கற்பனையைத் தூண்டுகிறது. ஓர் உணர்ச்சியனுபவத்தைக் கொடுக்கின்றது. அது எம்முடைய கற்பனையைத் தூண்ட மாட்டாது என்பது பொருந்தாது. எமக்கும் கற்பனைத்திறன் உண்டு. ஆகவே, எம்முடைய கற்பனையையும் தூண்ட முடியும். ஆனால் புலவனுடைய ஆற்றல் எம்முடைய ஆற்றலிலும் சிறந்தது. அவன் தன்னுடைய கற்பனை சிறப்பாகத் தொழிற்படக்கூடிய நிலையில் தன்னை வைத்துக்கொள்கின்றான். நாம் அந்த நிலையில் எம்மை வைத்துக் கொள்வதில்லை. அழகுடையதொன்றில் அவனுடைய உள்ளம் ஒருப்பட்டு அழுந்துகின்றது. நம்முடைய உள்ளம் அவ்வாறு அழுந்துவதில்லை. உணர்ச்சி வேகம் அவனுக்கு இருப்பது போல எமக்கு இருப்பதில்லை இது தான் எமக்கும் புலவனுக்கும் இடையேயுள்ள ஒரு சிறிய வித்தியாசம்

எமக்கும் அவனுக்குமிடையேயுள்ள வித்தியாசம் இன்னும் ஒன்று உண்டு. தான் பெறும் உணர்ச்சியனுபவங்களை மொழி வாயிலாக வெளிப்படுத்தக் கூடிய ஆற்றலும் மொழியறிவும் புலவனுக்கு உண்டு.அத்தகைய ஆற்றலோ அறிவோ சாதாரண மக்களுக்கு அதாவது நமக்கு இருப்பதில்லை, அதனாலே தான் நாங்கள் எங்களுடைய அனுபவங்களை வெளியிட முடியாதிருக்கின்றது.

1) புலவனுக்கும் எமக்குமிடையே காணப்படும் ஒற்றுமைப் பண்புகள் யாவை?
2) புலவன் நம்மிலிருந்து எவ்வகையில் வேறுபடுகிறான்?
3) ஒரு கவிதையின் உருவாக்கத்துக்கு அவசியமானவை எனக் கட்டுரை ஆசிரியர் கருதுவனவற்றை உமது உரைநடையில் எடுத்துக்கூறுக.
4) கட்டுரையாசிரியர் தன் கருத்துக்களை எடுத்துக்கூறும் திறன் பற்றிக் கருத்துரை வழங்குக.

இவ்வினாத்தாளின் பகுதி-1 இன் தொடர்ச்சி
அடுத்தவாரம் வெளிவரும்...

## கடந்தவார (07.04.09) தமிழ் புள்ளியிடல் திட்டத்தொடர்ச்சி

இ. 1) அவனுடைய தசைநார்கள் முறுக்கடைந்து வச்சிரம்போல் இருந்தன. தசைநார்களுடைய வலிமைக்கு வச்சிரம் உவமிக்கப்பட்டது. பூமியுடன் நடத்தும் போரினால் என்று செல்லையாவின் முயற்சி கூறப்படுகின்றது. இங்கு போர் குறிப்பிடப்படுவதால் வச்சிரம் என்னும் ஆயுதம் உவமையாகக் கூறப்படுவது பொருத்தமாயுள்ளது.

2) முத்தையும் வைரத்தையும் பொடியாக்கிச் சிதறிவிட்டது போன்ற வெண்மணற் பரப்பு. நிலவொளியிலும் வீதிக்கடை விளக்குகளிலும் வெண்மணல் ஒளி வீசுகின்றது.

3) குண்டூசியால் துளைக்கப்பட்ட இறப்பர் பலூனைப்போல நல்லம்மாவின் உற்சாகம் சப்பளிந்து போய்விட்டது. திருவிழாக் கடைகளிலே இறப்பர் பலூன்கள் நிறைய இருப்பதும் அவற்றில் சில உடைவதும் என்னும் சந்தர்ப்பத்திலே இந்த உவமை கையாளப்படுகிறது. அழகுணர்வும் மனப்பொருமலும் கொண்ட நல்லம்மாவின் மன உடைவுக்கு பொருத்தமாக அழகான நிறமும் காற்றுப் பொருமலுமுடைய பலூன் தானாக உடையாமல் செல்லையாவின் வார்த்தையால் குண்டூசியால் குற்றப்பட்டு உடைகின்றது.

4) நிலபாவாடைபோல் வளைந்துகிடந்த தெரு.
5) அவனுடைய மனம் வல்லைவெளிபோல் விரிந்தது.
6) அரக்கனது பிரம்மாண்டமான மார்பில் அணியப்பட்ட மரகதச் சரடுபோல் நீரோடை ஜுவலித்தது.
7) பொட்டிட்டதுபோன்ற ஒளி.

09. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினை விளக்குக.
அ. கொங்குதேர் வாழ்க்கை' எனத் தொடங்கும் குறுந்தொகைச் செய்யுளில் தலைவியின் நலத்தினைத் தலைவன் பாராட்டுமாற்றிலுள்ள நயம்.
ஆ. இரட்சணிய சரிதப் படலத்தில் உருவக அணியினைக் கிருஷ்ணபிள்ளை கையாளும் திறன்.
இ. 'எந்தையும் தாயும்' எனத் தொடங்கும் பாரதி பாடலில் அன்னையர் பற்றிய மனப்பதிவுகள்.
ஈ. பண்பாடு என்பதற்கு பண்பாடு என்ற கட்டுரையில் ராஜாஜி தரும் விளக்கம்.
உ. கம்பதாசனின் உதிர்ந்தமலர் எனும் கவிதையில் வெளியிடப்படும் உணர்ச்சி அனுபவம்.

எவையேனும் மூன்று

அ. தலைவி கேட்ப, தும்பியை நோக்கி 'இல்லை' என்ற பதிலை உட்கிடையாகக்கொண்ட இவ்வினாவின் மூலம் தலைவிமீது தான் கொண்ட காதலின் ஆழத்தையும், தலைவியின் சிறப்பையும் தலைவன் புலப்படுத்துகிறான்.

ஆ.
* பாவம் திரட்டி ஆக்கு சிலுவை.
* துன்பப் பிரளயம்.
* மறியாம் உத்தமர்.
* காந்தள் மலர், செங்கமலம், கருங்குவளை, முத்துக்கள், தளவு (முல்லை), ஆம்பல் என்பன முறையே கை, முகம், கண், கண்ணீர், பல், வாய் ஆகியவற்றுக்கு உருவகமாகக் காட்டப்பட்டுள்ளன.
* மாமருந்து (கிறிஸ்து)
* நிந்தனையாஞ் செந்நெருப்பு.
* கருணை நறா.
* கண்மலர்கள்.
* துன்பக்கடல்.

இ. மழலைகள் கூறியது, கன்னியராகி நிலவில் ஆடிக்களித்தது, பொன்னுடல் இன்புற நீர் விளையாடி இல் போந்தது, மங்கையராய் இல்லறம் நன்கு வளர்த்தது, தங்க மதலையர் ஈன்று அமுதூட்டித் தழுவியது, மக்கள் துங்கம் உயர்ந்து வளர்கென கோயில்கள் சூழ்ந்தது.

ஈ.
* சீலம், திருந்திய உணர்ச்சி, ஆசாரம், கல்வி, கலை, யாவும் அழகுபடக் கலந்து நிற்பது.
* நம்முடைய தினசரிப் பழக்கங்கள், அபிப்பிராயங்கள், இலட்சியங்கள் எல்லாம் இதில் அடங்கும்.
* நல்லொழுக்கம், விருந்தோம்பல், அன்பு, இன்சொல், அடக்கம், எல்லோரிடத்தும் மரியாதை, வினயம், ஏழைகளுக்கு உதவுதல் போன்றவை பண்பாட்டின் அம்சங்கள்.
* சினம், ஆசை, பொறாமை, கடுஞ்சொல் முதலானவற்றைத் தவிர்த்தல்.

உ. மலரைக் குறியீடாகக்கொண்டு வாழ்க்கை நிலையாமை தத்துவநோக்கிலும் அழகியல் நோக்கிலும் புலப்படுத்தப்படுகிறது.

அழகுடன் திகழ்ந்த மலர் உச்சி வெயிலில் சுடலையில் உதிர்ந்துகிடக்கும் கோலம் சோக உணர்வினைத் தூண்டும் வகையில் சித்திரிக்கப்பட்டுள்ளது. மகிழ்ச்சியுடன் வாழ்பவரும் ஒருநாள் இவ்வாறு வீழும்நிலை உண்டு என்ற உண்மை உணர்த்தப் படுகிறது.

(05 புள்ளிகள்)

நிறைவுபெற்றது-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August

# கணக்கீடு - 01

பொதுப்பரீட்சை முன்னோடி
வினாத்தாள்,
கொழும்பு வலயம்

## பகுதி - 1

* அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. மிகப்பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

01. கணக்கீட்டுக்கான அகச்சூழல் காரணிகளை மட்டும் கொண்ட சரியான தொகுதி,
அ. வாடிக்கையாளர், விநியோகத்தர் ஊழியர், முதலீட்டாளர், நிதி ஸ்தாபனங்கள்.
ஆ வரித்துறை, கணக்காய்வாளர், ஏற்றுமதி ஊக்குவிப்பு, அரச-வரவு செலவுத்திட்டம்.
இ. உரிமையாளர், முகாமை, விநியோகத்தார், ஊழியர், வாடிக்கையாளர்.
ஈ. தொழில்நுட்பம், செலாவணிக்கட்டுப்பாடு, பொதுவிலை மட்டம், அரசமாற்றம்.
உ. மேற்கூறிய எவையுமன்று.

02. பின்வருவனவற்றுள் கணக்கீட்டுச் சமன்பாடு ஒன்றில் அனைத்து அம்சங்களிலும் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியது,
அ. கடனுக்கு விற்பனை செய்தல்.
ஆ கடனுக்கு கொள்வனவு செய்தல்.
இ. கடன்படுனரிடம் கழிவு நீக்கி காசு பெறல்.
ஈ. கடனை உரிமையாளர் தீர்த்தல்.
உ. கழிவு பெற்று கடன் தீர்த்தல்.

நன்றி
கொழும்பு வணிகவள
நிலையம்.

03. பின்வருவனவற்றுள் முதற்பதிவேடுகளை மட்டுமே கொண்ட தொகுதி
அ. காசேடு, கொள்வனவு நாளேடு, சம்பளப்பட்டியல், விற்பனை நாளேடு.
அ. திரும்பல் நாளேடு, வருமதி உண்டியல் ஏடு, சென்மதி உண்டியல் ஏடு, வரவுத்தாள்.
இ. பற்றுசீட்டு, முறையான நாளேடு, கொள்வனவு நாளேடு, விற்பனை நாளேடு.
ஈ. கொள்வனவு நாளேடு, விற்பனை நாளேடு, திரும்பல் நாளேடுகள், பொதுதினசேரி.
உ. மேற்கூறிய யாவும் சரி.

04. வியாபாரி ஒருவர் தனது பணம் 20,000 ரூபாவையும் நண்பனிடம் பெற்றகடன் 20,000 ரூபாவையும் வியாபாரத்தில் ஈடுபடுத்தினார். இந்நடவடிக்கை கணக்கீட்டு சமன்பாட்டில் ஏற்படுத்தும் சரியான தாக்கம்,
அ. சொத்து + 40000, பொறுப்பு + 40000
ஆ சொத்து + 20000, மூலதனம் + 20000 பொறுப்பு + 20000
இ. மூலதனம் + 40000, சொத்து + 40000
ஈ. சொத்து - 20000 மூலதனம் 40000
உ. மூலதனம் + 20000, பொறுப்பு + 20000 சொத்து + 40000

05. பெறுமதி சேர் வரிப்பதிவுள்ள ஒரு நிறுவனம் 10% வரி உட்படுத்திய 99000 ரூபாவுக்கான கொள்வனவுப் பட்டியல் பொருட்களை பெற்று இப்பொருட்களை 10% வரி உள்ளிட்ட 132,000 ரூபா பட்டியல் விலையில் விற்பனை செய்தது இப்பொருட் பரிமாற்றம் தொடர்பில் நிறுவனத்தின் இலாபமும் வரிச் செலுத்துகையும் முறையே,
அ. 33,000 ரூபாவும் 3,300 ரூபாவும் ஆகும்.
ஆ 33,000 ரூபாவும் 13,200 ரூபாவும் ஆகும்.
இ. 30,000 ரூபாவும் 9,900 ரூபா ஆகும்.
ஈ. 30,000 ரூபாவும் 3,000 ரூபாவும் ஆகும்.
உ. 30,000 ரூபாவும் 12,000 ரூபாவும் ஆகும்.

06. 17500 ரூபாவான வரவுத்தாள் ஒன்று உரிய முதற்பதிவேட்டில் சரிவர பதியப்பட்ட போதிலும் நபர் கணக்கில் 15700 ரூபா என பதியப்பட்டுள்ளது. நிறுவனங்கள் தற் சமமான முறையில் பேரேடுகளை பேணுகிறது எனின், இத்தவறால்,
அ. 1800 ரூபா வரவுத்தொங்கல் ஏற்பட்டிருக்கும்.
ஆ 1800 ரூபா செலவுத்தொங்கல் ஏற்பட்டு இருக்கும்.
இ. 3600 ரூபா வரவுத்தொங்கல் ஏற்பட்டு இருக்கும்.
ஈ. 3600 ரூபா செலவுத்தொங்கல் ஏற்பட்டு இருக்கும்.
உ. தொங்கல் ஏற்படாது.

07. 20,000 ரூபாவாக வருமதி உண்டியல் ஒன்று கடன்கொடுநருக்கு சாட்டுதல் செய்யப்பட்டது. இதற்கான முதன்மை பதிவேடு,
அ. சென்மதி உண்டியல் ஏடு.　　ஆ காசேடு
இ. வருமதி உண்டியல் ஏடு.　　ஈ. பொது நாட்குறிப்பேடு.
உ. மேற்கூறி ய எவையும் அன்று.

08. குறித்த ஒரு தினத்தில் காசேட்டு வங்கி நிரல் மீதி 13,500 ரூபாவாக இருக்க அத்தினத்துக்குரிய வங்கி கூற்று மீதி 9000 ரூபாவாக காணப்பட்டது. இவ்வித்தியாசத்திற்கு காரணமான சரியான விவரங்களைக் கொண்ட தொகுதி
அ. காசேட்டில் பதியப்படாத வைப்பு 1500 ரூபாவும், மாற்றப்படாத காசோலை 3000 ரூபாவும்.
ஆ காசேட்டில் பதியப்படாத கட்டணம் 1250 ரூபாவும் தேறாத காசோலை 4250 ரூபாவும்.
இ. வங்கி தவறாகசெலவு வைத்த 2500 ரூபாவும் தேறாத காசோலை 2000 ரூபாவும்.
ஈ. வங்கி தவறாக வரவு வைத்த 1500 ரூபாவும் தேறாத காசோலை 3000 ரூபாவும்.
உ. வங்கி தவறாக வரவு வைத்த 2500 ரூபாவும் மாற்றப்படாத காசோலை 2000 ரூபாவும்

09. ABC ஆகிய பங்காளிடையே இலாப பகிர்வானது C இன் 10% தரகு நீக்கி வரும் இலாபத்தில் 4 : 4 : 2 ஆகும். 2008இற்கு C இன் தரகு நீக்க முன் இலாபம் 250,000 ரூபா எனில், ABC இன் வருமானம் முறையே,
அ. 90,000/= 90,000/= 70,000/=　　ஆ 100,000/= 100,000/= 50,000=
இ. 110,000/= 110,000/= 55,000/=　　ஈ. 90,000/= 90,000/= 45,000/=
உ. மேற்குறித்த எவையும் அல்ல.

10. XYZ ஆகியோர் இலாபநட்டங்களை சமமாக பகிரும் பங்காளர் Z பங்குடமையில்இருந்து விலக R புதிய பங்காளராக சேர்த்துக்கொண்டார். Rஇற்கு இலாபத்தில் 20% பங்கு வழங்கப்படும். இச்சேரல் விலகல்களின் பொருட்டு மதிப்பிடப்பட்ட நன்மதிப்பு 180,000 ரூபா விலகும், சேரும் பங்காளரின் நன்மதிப்பு பங்கு மட்டுமே மூலதனக் கணக்கில் சீராக்கப்படுமாயின் மூலதனக் கணக்குகளில் இடம்பெறும் பதிவு முறை,
அ. XYZ மூலதனக் கணக்கு வரவு முறையே 20000, 20000, 20000, Z மூலதனக் கணக்குச் செலவு 60000
ஆ XYR மூலதனக் கணக்கு வரவு முறையே 72000, 72000, 36000, XYZ மூலதனக் கணக்கு செலவு முறையே 60000, 60000, 60000
இ. Z மூலதனக்கணக்குச் செலவு 60000 R மூலதனக்கணக்கு வரவு 60000
ஈ. XYR மூலதனக்கணக்கு வரவு 12000, 12000, 36000, Z மூலதனக்கணக்கு செலவு 60000
உ. மேற்கூறியவை எதுவும் சரியல்ல.

11. பொறி ஒன்றின் கிரயம் 100,000 ரூபா இழிவு பெறுமதி 800 ரூபா பாவனைக்காலம் 3 வருடம் எனின் ஒடுங்கு பாக முறையில் தேய்வு வீதம்,
அ. 30%　　ஆ 20%　　இ. 40%
ஈ. 70%　　உ. 80%

12. கட்டுப்பாட்டுக் கணக்குகளை பேணும் நிறுவனம் ஒன்றின் கொள்வனவு நாளேட்டின் ஒரு பக்கத் தொகை 5000 ரூபாவால் கூட்டி கொள்வனவு கணக்கில் பதியப்பட்டது. தொங்கல் கணிக்கப்பட்ட பின் இதற்கான திருத்தப்பதிவு
அ. கடன் கொடுநர் வரவு 5000 தொங்கல் செலவு 5000
ஆ தொங்கல் வரவு 5000 கொள்வனவு செலவு 5000
இ. கொள்வனவு வரவு 5000 தொங்கல் செலவு 5000
ஈ. கொள்வனவு வரவு 5000 கடன்கொடுநர் செலவு 5000
உ. கடன் கொடுநர் வரவு 5000 கொள்வனவு செலவு 5000

13. 250,000 கிரயமானதும் 1.1.2007இல் வாங்கப்பட்டதுமான பொறி ஆண்டுக்கு 25,000 ரூபா வீதம் நேர்கோட்டு முறையில் 3/12/08 வரை தேய்வு ஏற்பாடு செய்தது. 1/109இல் இருந்து ஆண்டுக்கு 20% ஒடுங்கு பாக முறையில் பெறுமான தேய்வுவிட தீர்மானித்தது எனின், 2009 இற்கான தேய்வின் அளவு யாது?
அ. 140,000 ரூபா　　ஆ 32,000 ரூபா　　இ. 90,000
ஈ. 40,000　　உ. 72,000 ரூபா

14. நிறுவனம் ஒன்றின் சிறு செலவு காசேட்டு கட்டுநிதிக்கு மீள்நிரப்பு தொகையானது 1200 ரூபா காசோலை ஒன்று வரையப்பட்டது. இது காசாளரால் காசாக்கப்பட்டு காசேட்டில் சில்லறை வருமானமாக பதியப்பட்டதுடன் சில்லறை வருமான கணக்கிலும் பதியப்பட்டது எனின், இதனால் ஏற்படும் (சிறுசெலவு காசேட்டின் பகுப்பாய்வு செலவுக்கணக்கில் பதியப்படவில்லை) தாக்கம்,
அ. 2400 வரவுத் தொங்கலை ஏற்படுத்தியிருக்கும்.
ஆ 1200 செலவுத்தொங்கலை ஏற்படுத்தி இருக்கும்.
இ. 2400 செலவுத் தொங்கலை ஏற்படுத்தி இருக்கும்.
ஈ. 1200 வரவுத் தொங்கலை ஏற்படுத்தி இருக்கும்.
உ. எதுவித பாதிப்பும் இல்லை.

15. கணக்கீட்டு எண்ணக்கருக்களுள் தேறல் எண்ணக்கரு அடிப்படையில் சரியாயினும் முன்னெச்சரிக்கை எண்ணக்கருவை பாதிப்பது,
அ. அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு.　　ஆ கடன்படுநர் கழிவு ஏற்பாடு.
இ. கடன் கொடுநர் கழிவு ஏற்பாடு.　　ஈ. வரி ஏற்பாடு.
உ. பெறுமான தேய்வு ஏற்பாடு.

16. கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் விற்பனை செய்யப்படும் போதே அக்கொள்வனவு கிரயம் செலவாகும் என்பதை வலியுறுத்தும் எண்ணக்கரு,
அ. கால எண்ணக்கரு.　　ஆ அட்டுறு எண்ணக்கரு.
இ. முன்னெச்சரிக்கை எண்ணக்கரு.　　ஈ. இணைதல் எண்ண..
உ. தேறல் எண்ணக்கரு.

17. சொத்தொன்றின் சிக்கன பயன்பாட்டுக்காலம் என்பது,
அ. அச்சொத்தின் உச்ச வெளியீட்டு அலகுகள்.
ஆ அதிக பராமரிப்பு செலவு இன்றி பயன்படுத்தக்கூடிய காலம்.
இ. சொத்துக்கான உத்தரவாதக் காலம்.
ஈ. அது சொத்துக்கு புதிய மாற்றீடுகள் வரக்கூடிய காலம்.
உ. மேற்கூறிய யாவும்.

18. மொத்தக்கடன் கொடுநர் கணக்கு மீதி 176,000/= வாக இருக்க மீதிகளின் கூட்டுத்தொகை 184,000/=வாக இருந்தது. இவ்வித்தியாசத்துக்கான சரியான காரணித் தொகுதியாக கருதக்கூடியது,
அ. 4000 ரூபா கொள்வனவு கணக்கில் நபர் கணக்கில் பதியப்படவில்லை 8000 ரூபா வரவு மீதிகள் கவனத்தில் கொள்ளப்படவில்லை.
ஆ கொள்வனவு நாளேட்டின் கூட்டுத்தொகை 6000 ரூபா குறைத்துக் கூட்டப்பட்டதுடன் வெளித்திருப்பல் நாளேட்டின் 2000 பட்டியல் ஒன்று நபர் கணக்கில் பதியப்படவில்லை.
இ. கடன்கொடுநர் மீதிகட்கு எதிராக எதிர் தீர்த்தல் 8000 ரூபா நபர் கணக்குகளில் மட்டும் பதியப்பட்டிருந்தது.
ஈ. 8000 ரூபாவான கொள்வனவு பட்டியல் ஒன்று நாளேட்டில் இரு தடவை பதியப்பட்டிருந்தது.
உ. பெற்ற கழிவு கூட்டுத்தொகை 4000கூட்டியும் கொள்வனவு நாளு 4000 ரூபா கூட்டியும் கூட்டப்பட்டிருந்தது.

19. பங்குடமைகளில் பங்காளிடையே ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்படுவதன் நோக்கம்,
அ. சட்டத்தின் நியதிகள் போதாது.
ஆ பங்காளர் தாம் விரும்பியபடி செயற்பட.
இ. பொது இணக்கத்தின் மூலம் முரண்களை தவிர்த்தல்.
ஈ. நிர்வாகத்தை நடத்தல்.
உ. மூலதனத்தைத் திரட்டல்.

20. ஆயுட் சந்தா பெற்ற வருடத்துக்கு மட்டுமே வருவாயாக காட்டாது முன்கொண்டு செல்வதற்கான அடிப்படை கருதுகோள்,
அ. தொடர்ந்து இயங்குதல்.　　ஆ தேறல்.
இ. கால அளவீடு.　　ஈ. இணைதல்.
உ. அட்டுருதல்.

* 21 - 3 வரையான கணக்குகளுக்கு சுருக்கமானதும், தெளிவானதுமான விடை தருக.

21. நிதிக் கணக்கீட்டின் அடிப்படை நோக்கமாக அமைவது
..............................................................................................
..............................................................................................

22. கணக்கீட்டு சமன்பாடுகளை தயாரித்தலின்போது பின்பற்றப்படும் மிக அடிப்படையான எண்ணக்கருக்கள் நான்கு தருக.
..............................................................................................
..............................................................................................
..............................................................................................
..............................................................................................

23. இலாப நோக்கற்ற நிறுவனங்களில் மூலதனம் என்பதற்கு பதிலாக திரண்ட நிதி என கூறப்படுவதற்கான சரியான காரணம் யாது?
..............................................................................................
..............................................................................................

கணக்கீட்டின் பகுதி -I இன் தொடர்ச்சியும் விடைக்குறிப்புக்களும் பகுதி- II உம் அடுத்த வாரம் வெளிவரும்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்கீடு - 01

பொதுப்பரீட்சை முன்னோடி வினாத்தாள் கொழும்பு வலயம்.

## பகுதி–11
## விடைக்குறிப்புகள் (07.04.2009)

01. அ. பங்குடமைச்சட்டத்தின் 24 ஆவது சரத்தின் ஏற்பாடுகள்.
1) ஒவ்வொரு பங்காளரும் சமனான முறையில் மூலதனங்களைப் பங்களிப்புச்செய்யவும், இலாப நட்டங்களைச் சமமாகப் பகிரவும் முடியும்.
2) மூலதனத்துக்கு மேலதிகமான பங்காளர் கடன் தொகைகளுக்கு 5% வட்டி வழங்கப்படும்.
3) பங்காளர் ஏற்படுத்திய மூலதனத்துக்கு வட்டி இல்லை.
4) பங்காளரது பற்றுக்கள் மீது வட்டி இல்லை.
5) பங்குடமையினது நிர்வாகத்தில் பங்குபற்றுவதற்காக பங்காளர் ஊதியம் பெறும் உரிமை இல்லை.

ஆ. 1) இழப்பு விகிதாசாரம்
மீனா → 5/8 - 3/6 = 15 - 12/24 = 3/24
சுதன் → 3/8 - 2/6 = 9 - 8/24 = 1/24

2) 1. வினோ நன்மதிப்பினைக் காசாக கொண்டுவரல்
காசுக் க/கு வரவு ரூபா 8,000
பங்காளர் மூலதனக் க/கு செலவு மீனா ரூபா 5,000
சுதன் ரூபா 3,000
(வினோ காசாக வழங்கிய நன்மதிப்புத் தொகை)

2. நன்மதிப்புக் கணக்கு திறக்காது மூலதனக் கணக்கினூடாக சீராக்கம்
பங்காளர் மூலதனக் க/கு வரவு வினோ ரூபா 8,000
பங்காளர் மூலதனக் க/கு செலவு மீனா ரூபா 5,000
சுதன் ரூபா 3,000
(வினோ சேரும்போது நன்மதிப்பு மூலதன கணக்குகளில் சீராக்கப்பட்டது)

3. மொத்த நன்மதிப்பிற்கும் நன்மதிப்புக் கணக்கினைத் திறத்தல்.
நன்மதிப்புக் க/கு வரவு ரூபா 48,000
பங்காளர் மூலதனக் க/கு செலவு மீனா ரூபா 30,000
சுதன் ரூபா 18,000
(வினோ சேரும்போது நன்மதிப்புக் க/கு திறக்கப்பட்டது)

அகிலன், பாலா, சங்கர் பங்குடமையில் 31.12.2006இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்டப் பகிர் க/கு

| விவரம் | தொகை | தொகை | விவரம் | தொகை | தொகை |
|---|---|---|---|---|---|
| | முதல் 4 | பின் 8 | மொ. இலா.மீ/வ | 60,000 | 120,000 |
| நிலைய நிர்வாகம் செலவு | மாதம் | மாதம் | ஐயக்கடன் மிகை | | 500 |
| சம்பளம் | 8,000 | 16,000 | | | |
| உபகரண தேய்வு | 4,800 | 6,000 | | | |
| நிர்வாக செலவு | 15,000 | 30,000 | | | |
| விற்பனை விநியோகச் செலவு | | | | | |
| விளம்பரம் | 2,000 | 6,000 | | | |
| மோட்டார் வாகனத்தேய்வு | 6,000 | 9,600 | | | |
| ஐயக்கடன் | 600 | - | | | |
| பிறவிற்பனைச் செலவு | 8,000 | 24,000 | | | |
| நிதி ஏனைய செலவு | | | | | |
| வங்கிக்கட்டணம் | 1,000 | 2,000 | | | |
| பாலா கடன் வட்டி | - | 1,672 | | | |
| தேறிய இலாபம் | 14,600 | 85,228 | | | |
| | 60,000 | 180,500 | | 60,000 | 180,500 |
| | | | தே.இலா.மீ/வ | 14,600 | |
| சம்பளம் - அகிலன் | 4,000 | 10,000 | நட்டம் - அகிலன் | 3,840 | |
| பாலா - | 3,000 | - | பாலா | 2,560 | |
| சங்கர் | - | 8,000 | | | |
| மூலதன வட்டி - அகிலன் | 8,000 | 24,000 | | | |
| பாலா | 6,000 | - | | | |
| சங்கர் | - | 24,000 | | | |
| இலாபம் - அகிலன் | - | 9,614 | | | |
| சங்கர் | - | 9,614 | | | |
| | 21,000 | 180,500 | | 21,000 | 180,500 |

பங்காளர் மூலதன க/கு

| விவரம் | அகிலன் | பாலா | சங்கர் | விவரம் | அகிலன் | பாலா | சங்கர் |
|---|---|---|---|---|---|---|---|
| நன்மதிப்பு | 25,000 | - | 25,000 | மீதி | 160,000 | 120,000 | - |
| ம.ம நட்டம் | 1,920 | 1,280 | - | காசு | - | - | 225,000 |
| பாலா கடன் | | 50,160 | | நன்மதிப்பு | 30,000 | 20,000 | - |
| வங்கி | | 90,000 | | நடை.மு.க/கு | | 1,440 | |
| | | | | காசு | 369,250 | | |
| மீ/செ | 200,000 | | 200,000 | | | | |
| | 226,920 | 141,440 | 225,000 | | 226,920 | 141,440 | 225,000 |
| | | | | மீ/வ | 200,000 | - | 200,000 |

பங்காளர் நடைமுறை க/கு

| விவரம் | அகிலன் | பாலா | சங்கர் | விவரம் | அகிலன் | பாலா | சங்கர் |
|---|---|---|---|---|---|---|---|
| காசு (சம்) | 14,000 | 3,000 | 8,000 | மீதி | 18,000 | 12,000 | - |
| பற்று | 16,000 | 14,000 | 10,000 | சம்பளம் | 14,000 | 3,000 | 8,000 |
| நட்டம் | 3,840 | 2,560 | | மூலதன வட்டி | 32,000 | 6,000 | 24,000 |
| மூல க/கு | | 1,440 | | இலாபம் | 9,614 | - | 9,614 |
| மீ/செ | 39,774 | | 23,164 | | | | |
| | 73,614 | 21,000 | 41,614 | | 73,614 | 21,000 | 41,614 |
| | | | | மீ/வ | 39,774 | - | 23,164 |

02. 1)

சந்தா க/கு

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 4,800 | மீ/வ | 4,000 |
| வரு/செ க/கு | 50,000 | காசு | 49,600 |
| மீ/செ | 2,400 | மீ/செ | 3,600 |
| | 57,200 | | 57,200 |
| மீ/வ | 3,600 | மீ/வ | 2,400 |

சந்தா க/கு (காசு அடிப்படையில்)

| | | | |
|---|---|---|---|
| வரு/செ/க/கு | 51,200 | மீ/வ | 4,000 |
| | | காசு | 49,600 |
| மீ/செ | 2,400 | | |
| | 53,600 | | 53,600 |
| | | மீ/வ | 2,400 |

கேசவன் கம்பனியின் 31.12.05இல் முடிவுற்ற ஆண்டிற்கான உற்பத்தி வியாபாரக் க/கு

| விவரம் | தொகை | தொகை | விவரம் | தொகை | தொகை |
|---|---|---|---|---|---|
| மூலப்பொருள் கொ/வு | | 360,000 | உற்பத்தி கிரயம் | | 490,000 |
| (-) இறுதி மூலப்பொருள் இருப்பு | | (40,000) | (-வியா.க/கு.மா) | | |
| பயன்படுத்திய மூலப்பொருள் | | 320,000 | | | |
| தச்சுத்தொழிலாளர் கூலி | | 160,000 | | | |
| முதற்கிரயம் | | 480,000 | | | |
| (-) குறைவேலை | | (60,000) | | | |
| | | 420,000 | | | |
| உற்பத்தி மேந்தலை | | | | | |
| மின்வலு | 30,000 | | | | |
| இயந்திரத்தேய்வு | 8,000 | | | | |
| காப்புறுதி | 12,000 | | | | |
| உ/தி முகாமையாளர்+சம்பளம் | 20,000 | 70,000 | | | |
| உற்பத்திக்கிரயம் | | 490,000 | | | 490,000 |
| உற்பத்திக் கிரயம் | | 490,000 | விற்பனை | | 542,500 |
| (-) இறுதி இருப்பு | | (56,000) | | | |
| விற்பனைக்கிரயம் | | 434,000 | | | |
| மொத்த இலாபம் | | 108,500 | | | |
| | | 542,500 | | | 542,500 |

03. அ. 1) 2004ஆம் ஆண்டுக்கான தேய்வு
81,000 x 33 1/3/100 = 27,000

2005ஆம் ஆண்டுக்கான தேய்வு
81,000 - 27,000 x 33 1/3 /100 = 54,000 x 33 1/3= 18,000

2) a. 226இல் தேய்விடக்கூடிய பெறுமதி 81,000 - 6,000 - 45,000 = 30,000
b. 30,000/3 = 10,000
c.

| விவரம் | வரவு | செலவு |
|---|---|---|
| 1. இயந்திர அகற்றல் க/கு | 81,000 | |
| இயந்திர க/கு | | 81,000 |
| (81,000 கிரயமான இயந்திரம் இயந்திர அகற்றல் க/கு மாற்றப்பட்டது) | | |
| 2. பெறுமானத்தேய்வு ஏற்பாட்டுக் க/கு | 55,000 | |
| இயந்திர அகற்றல் க/கு | | 55,000 |
| (பெறுமானத்தேய்வு 55,000 இயந்திர அகற்றல் க/கு மாற்றப்பட்டது) | | |
| 3. இயந்திரக் க/கு | 28,000 | |
| இயந்திர அகற்றல் க/கு | | 28,000 |
| (பகுதி மாற்றாகக் கொ/வு செய்த இயந்திரம் பதியப்பட்டது) | | |
| 4. இயந்திர அகற்றல் க/கு | 2,000 | |
| இலாநட்டக் க/கு | | 2,000 |
| (இயந்திர அகற்றல் இலாபம் 2,000 பதியப் பட்டது) | | |
| 5. இயந்திரக் க/கு | 32,000 | |
| வங்கி க/கு செலவு | | 32,000 |
| (புதிய இயந்திரம் 32,000/= இற்கு கொள்வனவு செய்யப்பட்டது) | | |

ஆ. கீர்த்தனா வியாபாரத்தின் 31.12.06இல் முடிவடைந்த ஆண்டிற்கான வியாபார இலாபநட்ட க/கு

| விவரம் | தொகை | தொகை | விவரம் | தொகை | தொகை |
|---|---|---|---|---|---|
| கொள்வனவு | | 240,000 | விற்பனை | | 250,000 |
| விற்கத.இ.பொ.இ | | 240,000 | | | |
| (-)இறுதி இருப்பு | | (40,000) | | | |
| விற்பனைக் கிரயம் | | 200,000 | | | |
| மொத்த இலாபம் | | 50,000 | | | |
| | | 250,000 | | | 250,000 |
| செலவீனம் (30,000+6,000) | 36,000 | | மொ.இலா.மீ/வ | | 50,000 |
| தேய்வு | 4,000 | 40,000 | | | |
| தே.இ.மூல க/கு மாற்றப்பட்டது | | 10,000 | | | |
| | | 50,000 | | | 50,000 |

03. ஆ. 31.12.2006இல் உள்ளவாறான ஐந்தொகை

| பொறுப்புக்கள் | தொகை | தொகை | சொத்துக்கள் | தொகை | தொகை |
|---|---|---|---|---|---|
| மூலதனம் | | 160,000 | நி.சொத்து | 80,000 | |
| தே.இலாபம் | 10,000 | | பெ.தேய்வு | (4,000) | 76,000 |
| (-) பற்று | (36,000 | (26,000) | | | |
| | | 134,000 | | | |
| | | | இருப்பு | 40,000 | |
| கடன்கொடுநர் | 50,000 | | க/ப | 40,000 | |
| அட்டுறு கடன்கொடுநர் | 6,000 | 56,000 | காசு மீதி | 34,000 | 114,000 |
| | | 190,000 | | | 190,000 |

காசேடு

| | | | |
|---|---|---|---|
| மூலதனம் | 160,000 | க/கொ | 190,000 |
| க/ப | 210,000 | நி/சொ | 80,000 |
| | | எடுப்பனவு | 36,000 |
| | | செலவு | 30,000 |
| | | மீ/செ | 34,000 |
| | 370,000 | | 370,000 |
| மீ/வ | 34,000 | | |

கடன்படுநர் க/கு

| | | | |
|---|---|---|---|
| வி/னை | 250,000 | காசு | 210,000 |
| | | மீ/செ | 40,000 |
| | 250,00 | | 250,000 |
| மீ/வ | 40,000 | | |

கடன்கொடுநர் க/கு

| | | | |
|---|---|---|---|
| காசு | 190,000 | கொ/வு | 240,000 |
| மீ/செ | 50,000 | | |
| | 240,000 | | 240,000 |
| | | மீ/வ | 50,000 |

தொடர்ச்சி அடுத்தவாரம் வெளிவரும்......

மாணவர்களே உங்கள் விடைகளை இவ் விடைத்தாளுடன் ஒப்பீடு செய்து விளக்கமின்மைகள் இருப்பின் 071-4273035, 071-6850005. என்ற இலக்கத்திற்கு காலை 9.00 தொடக்கம் 5.00 மணிவரை தொடர்பு கொண்டு விளக்கங்களைப்பெற்றுக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - ஓகஸ்ட், 2009.
General Certificate of Education (Advance Level) Model Examination - August, 2009.

# பௌதிகவியல்


ஆசிரியர்:-
சி.சிந்தனைச்செல்வன் (B.Sc. Dip in Edu, Dip in IT)
கொ/விவேகானந்தா கல்லூரி.


## பொறியியல் MECHANICS


49. 500W மோட்டாரின் உதவியால் 100N நிறையுடைய பொருள் ஒன்று 4S இல் 10m உயரத்துக்கு உயர்த்தப்படுகின்றது. மோட்டாரின் திறன்,
1) 25% 2) 40% 3) 50%
4) 60% 5) 75%

50. துவிச்சக்கரவண்டியில் u வேகத்தோடு செல்லும் ஒருவன் S தூரத்தில் துவிச்சக்கர வண்டியை நிறுத்த முடிந்தது. துவிச்சக்கரவண்டியில் இன்னும் ஒருவனை ஏற்றின், அதன் முழுப்பாரம் 50% இனால் கூடும். அதேவேகத்துடன் செல்லும்போது எவ்வளவு தூரத்தில் துவிச்சக்கர வண்டியை நிறுத்தமுடியும்?
1) S 2) 1S 3) 1.5S
4) 2.25S 5) 2S

51. துணிக்கை ஒன்றின் இயக்கத்துக்கான வேக - நேர வரைபு அருகில் தரப்பட்டுள்ளது. இத்துணிக்கையினது இயக்கத்துக்கான ஆர்முடுகல்-நேர வரைபைத் திறம்பட வகைக்குறிப்பது பின்வருவனவற்றுள் எது?













52. ஓய்வில் உள்ள துணிக்கை ஒன்று உயரமான புள்ளியிலிருந்து விழவிடப்படுகின்றது. அதன் அழுத்தசக்தி x ஆல் குறையும்போது அதன் வேகம் V எனின், துணிக்கையின் திணிவு யாது?
1) $xV^2/g$ 2) $gx/V^2$ 3) $x/g$
4) $2x/V$ 5) $2x/V^2$

53. துணிக்கை ஒன்றின் இயக்கத்துக்கான வேக - நேர வரைபு அருகில் தரப்பட்டுள்ளது. பின்வருவனவற்றுள் எவ்வரைபு அத்துணிக்கையினது இயக்கத்துக்கான இடப்பெயர்ச்சி-நேர வரைபை வகைக் குறிக்கிறது?









54. நேர்கோட்டில் இயங்கும் துணிக்கை ஒன்றின் ஆர்முடுகலானது நேரத்துடன் மாறுபடுவதைத் திறம்பட வகைக்குறிக்கும் வரைபு அருகில் தரப்பட்டுள்ளது. வரைபுக்குக் கீழான (நிழற்றப் பட்ட) பரப்பு,





1) நேரம் $t_1$ இலிருந்து நேரம் $t_2$ வரை பிரயாணம் செய்த தூரத்தைத் தரும்.
2) கருதப்பட்ட நேர இடைவெளியில் துணிக்கையின் சராசரி ஆர்முடுகலைத் தரும்.
3) கருதப்பட்ட நேர இடைவெளியில் துணிக்கையின் சராசரி வேகத்தைத் தரும்.
4) கருதப்பட்ட நேர இடைவெளியில் துணிக்கையின் வேகமாற்றத்தைத் தரும்.
5) நேரம் $t_1$ இலிருந்து $t_2$ இற்கான இடைவெளியில் துணிக்கையின் அலகுத் திணிவுக்கான உந்தத்தைத் தரும்.


55. துணிக்கை ஒன்றின் இயக்கத்துக்கான வேக-நேர வரைபு அருகில் தரப்பட்டுள்ளது. இத் துணிக்கையினது இயக்கத்துக்கான இடப்பெயர்ச்சி-நேர வரைபைத் திறம்பட வகைக்குறிப்பது பின்வருவனவற்றுள் எது?





56. துணிக்கை ஒன்றின் இயக்கத்துக்கான இடப்பெயர்ச்சி-நேர வரைபு தரப்பட்டுள்ளது. இத்துணிக்கையினது இயக்கத்துக்கான வேக-நேர வரைபு எது?




57. 10N அமர்முடுக்கும் விசை தாக்கும் பொருள் ஒரு கணத்தில் 6J இயக்கசக்தியை உடையது. அது ஓய்வுக்கு வருமுன் செல்லும் தூரம்,
1) 3/5m 2) 1 2/3m 3) 4m
4) 16m 5) 60m

58. ஒரு கார் கிடையான பாதை ஒன்றில் கிழக்கு நோக்கி மாறாக் கதியுடன் செல்கின்றது. அக் காரில் தாக்கும் சமப்படுத்தப்படாத விசை,
1) கிழக்கு நோக்கி இருக்கும். 2) மேற்கு நோக்கி இருக்கும்.
3) வடக்கு நோக்கி இருக்கும். 4) தெற்கு நோக்கி இருக்கும்.
5) பூச்சியம் ஆகும்.

59. m திணிவுடைய சர்வசமனான நான்கு இழுவைப் பெட்டிகள் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒப்பமான கிடையான பாதை ஒன்றில் ஓய்வில் உள்ளன. 2m திணிவுடைய 5ஆவது பெட்டி $5ms^{-1}$ வேகத்துடன் சென்று நிலையாக உள்ள நான்கு பெட்டிகளுடனும் மோதி இணைகிறது. மோதலின்பின் அவற்றின் பொதுவேகம்,
1) $5/6ms^{-1}$ 2) $1ms^{-1}$ 3) $5/4ms^{-1}$
4) $5/3ms^{-1}$ 5) $5/2ms^{-1}$

60. நிலத்தில் உள்ள புள்ளியிலிருந்து ஒரு துணிக்கை நிலைக்குத்துடன் சாய்ந்த திசையில் எறியப் படுகிறது. எறியற் புள்ளி P. ஒரு பரவளைவுப் பாதையில் இயங்குகிறது. அது அடைந்த அதி உயர் புள்ளி T. துணிக்கையின் ஆர்முடுகல்,
1) T இல் பூச்சியமாகும். 2) T இல் உயர்வாகும்.
3) P இல் உயர்வாகும். 4) P இலும், T இலும் சமனாக இருக்கும்.
5) ஒரு மாறாவேகத்தில் குறைவடையும்.


61. எஞ்சின் ஒன்று 5,000N தடைவிசைக்கு எதிராக $20ms^{-1}$ மாறாக் கதியுடன் வண்டியை இழுத்துச் செல்கிறது. எஞ்சினின் வலு,
1) 5kW 2) 10kW 3) 20kW
4) 50kW 5) 100kW

62. ஆரம்பத்தில் ஓய்வில் உள்ள ஒரு பொருள் இரு துண்டுகளாக வெடிக்கிறது. அவற்றின் திணிவுகள் முறையே 2m, 3m ஆகும். அவற்றின் மொத்த இயக்கசக்தி E ஆகும். 2m திணிவுள்ள பகுதியின் இயக்கசக்தி,
1) E/5 2) E/3 3) 2E/5
4) 3E/5 5) 4E/5

63. 1,000kg திணிவுள்ள கார் ஒன்று ஓய்வில் இருந்து $20ms^{-1}$ சீரான வேகத்துக்கு 10S இல் ஆர்முடுகிறது. அந்நேர ஆயிடையில் விருத்தியாக்கப்பட்ட வலு,
1) 0.2kW 2) 4kW 3) 10kW
4) 15kW 5) 20kW

64. நிலையான நீரில் நிலையாக மிதக்கும் 80kg திணிவுடைய படகின் ஒருமுனையில் 20kg திணிவுடைய பையன் ஒருவன் நிற்கின்றான். அவன் இப்பொழுது நேராக மறுமுனையை நோக்கி மெதுவாக நடக்கின்றான். அவன் நடந்த தூரம் (படகின் நீளம்) 10m ஆகும். படகு நகரும் தூரம்,
1) 1m 2) 2m 3) 3m
4) 5m 5) 10m

65. 1/50 s ஆவர்த்தனத்தை உடைய திக்கொலி நேரங்காட்டியால் ஆக்கப்பட்ட திக்கொலி நாடாவின் பகுதி ஒன்றை வரிப்படம் காட்டுகின்றது. நாடா காட்டும் கதி,




1) $0.1ms^{-1}$ 2) $0.5ms^{-1}$ 3) $1ms^{-1}$
4) $2.5ms^{-1}$ 5) $3ms^{-1}$

66. 4N நிறையுடைய ஒரு புத்தகம் இடதுபக்க மேல்மூலையில் இறுகப் பற்றப்பட்டுள்ளது. புத்தகத்தின் ஈர்வை மையம் G ஆகும். புத்தகத்தின் சுயாதீன உடல் விசைப்படத்தை படம் காட்டுகிறது இறுகப்பற்றப்படும் இடத்தில் கொடுக்கப்படும் விசை Fஉம் முறுக்கம் Tஉம் ஆகும். இங்கு,
1) F = 4N; T = 0.4Nm
2) F = 4N; T = 0.6Nm
3) F = 4N ; T = 0.8Nm
4) F = 8N; T = 0.6Nm 5) F = 8N; T = 0.8Nm

67. P,Q என்னும் இரு விசைகள் ஒரு உடலில் தாக்குகின்றன. இங்கு P > Q பின்வருவனவற்றுள் எது உடலில் தாக்கும் விளையுள் விசையாக இராது?
1) P + Q 2) P - Q 3) $P^2 + Q^2$
4) 2P 5) 2Q

தொடர்ச்சி அடுத்த வாரம் வெளிவரும்......

### பௌதிகவியலின் கடந்தவார விடைக்குறிப்புக்கள் (17.04.09)

| | | | | |
|---|---|---|---|---|
| 01- 2 | 02- 2 | 03- 4 | 04- 3 | 05- 3 |
| 06- 1 | 07- 5 | 08- 4 | 09- 2 | 10- 2 |
| 11- 2 | 12- 5 | 13- 4 | 14- 2 | 15- 3 |
| 16- 3 | 17- 3 | 18- 2 | 19- 4 | 20- 5 |
| 21- 2 | 22- 3 | 23- 4 | 24- 2 | 25- 1 |
| 26- 2 | 27- 5 | 28- 2 | 29- 4 | 30- 3 |
| 31- 3 | 32- 2 | 33- 1 | 34- 2 | 35- 1 |
| 36- 2 | 37- 1 | 38- 2 | 39- 3 | 40- 4 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org